THAYAGAM

26 . 4 . 96

75¢

# தாயகம்

# ஆட்கடத்தும் தமிழர்கள்

குஞ்சரி, ஆரியன் விசேட பதிப்புகள்

பட்ட பின்னுல் வருகிற ஞானம்!

சினிமாக் கவர்ச்சியும் தமிழகத்து தமிழனும்

வியாபாரத்தில் தொடங்கி விவகாரத்தில் முடிந்த

மஞ்சரியின் அஸ்தமனம்


இலங்கைக்கான துரித பணமாற்றுச் சேவை
(குறைந்த கட்டணம், அதிக மாற்று விகிதம்)

CD விற்பனையாளர்

SENDURAN & CO
584A, PARLIAMENT ST, TORONTO TEL:(416) 962 7397



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RUS-C ருசி

**வறுத்த அரிசி மா**

**இடியப்பம், புட்டு,**
**ஏனைய**
**உணவுத் தேவைக்கு**
**உகந்தது.**

| | |
|---|---|
| நிரு பிராண்ட்® *Niru Brand* | தயாரிப்புகளின் தரத்திற்கு காரணம் முதல் தரமான மூலப்பொருட்கள் |
| நிரு பிராண்ட்® *Niru Brand* | தயாரிப்புகள் கனடாவின் சுகாதார விதிகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படுபவை |
| நிரு பிராண்ட்® *Niru Brand* | தயாரிப்புகள் உணவுக்கு இணையற்ற சுவையளிப்பவை |
| நிரு பிராண்ட்® *Niru Brand* | தயாரிப்புகள் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தவை |

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்

**நிரு பிராண்ட்**
**தயாரிப்புகளுக்கு நிகர்**
*Niru Brand*®
**தயாரிப்புகளே.**

**போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்**

**தரத்தின் சின்னம்**

*Niru* *Niru*

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

*நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.*

# ஆட்கடத்தும் தமிழர்கள்

இவ்வார மக்லீன்ஸ் சஞ்சிகை கனடாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் ஆட்களைக் கடத்தும் இலங்கைத் தமிழர்கள் பற்றி ஒரு விரிவான கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதில் ஆட்களைக் கடத்திப் பணம் சம்பாதிக்கும் தமிழர்கள் பற்றி பல்வேறு விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஆபிரிக்க நாடான கென்யாவின் தலைநகரான நைரோபிக்கு அருகில் உள்ள கியாம்பா என்ற கிராமத்தில் மண் குடிசைகளும் தகரங்களால் வேயப்பட்ட கூரைகளையும் கொண்ட தோட்ட வீடுகளும் உள்ள பகுதிக்கு சென்ற பொலிசார் ஏதோ யுத்தத்தில் ஈடுபடுவது போன்று தாக்குதலுக்கு தயாராகினர். இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் கதவைத் தகர்த்துக் கொண்டு உள்ளே சென்ற போது அங்கே சிறிய அறையில் அழுக்கான படுக்கைகளில் நால்வர் உறங்கிக் கொண்டிருந்தனர். உள்ளேயிருந்து கைகளை உயர்த்திபடி வந்தவர் கனடிய பிரஜையான சற்குணராசன் சற்குணசிங்கம். இவர் நண்பர்களால் ராஜன் என்று அழைக்கப்படுபவர்.




கடந்த மாதம் கென்யர்களால் உடைக்கப்பட்ட இந்த நடவடிக்கை, இலங்கையிலிருந்து ஐரோப்பாவுக்கும் கனடாவிற்கும் ஆட்களைக் கொண்டு செல்லும் பெரும் நடவடிக்கையின் சிறு பகுதியே. இங்கு கைது செய்யப்பட்ட ராஜன் இவ்வாறான ஆயிரக்கணக்கானவர்களில் ஒருவரே. இவர்கள் சர்வதேச போதைப் பொருட் கும்பல்கள் பயன்படுத்தும் முறைகள் போன்றே ஆட்களைக் கடத்துகின்றனர்.

இவ்வாறு கடத்தப்பட்டு வரும் அகதிகள் உடனடியாக அரசியல் தஞ்சம் கோருகிறார்கள். இந்த கடத்தல்காரர்கள் ஒவ்வொரு தடவையும் வெவ்வேறு வழிகளால் ஆட்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ரொறன்ரோவில் மட்டும் சுமார் ஐம்பது பேரை ஆர்.சி.எம்.பி அடையாளம் கண்டு கொண்டிருக்கிறது. இவர்கள் சராசரி வருடத்திற்கு நூறு பேரை கடத்துகிறார்கள். 83ம் ஆண்டு முதல் 320 ஆயிரம் பேர் கனடாவில் அகதி மனுக் கோரியுள்ளார்கள். இவர்களில் 90 வீதமானோர் இவ்வாறு கடத்தப்பட்டு வந்தவர்களே. கடந்த இருமாதத்திற்குள் மட்டும் ஒன்பது இலங்கையர்கள் பிரேசில் ஊடாக வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

ஆட்களைக் கடத்தும் பாதாள உலகின் முக்கியஸ்தர் நாற்பது வயதான நாகரத்தினம் தவயோகராஜா. இவர் தவம் என்று நண்பர்களால் அறியப்பட்டவர். ஆரம்பப் பாடசாலையை மட்டும் இவர் முடித்துக் கொண்டாலும் கெட்டிக்காரர் என்று கூறப்படுகிறார். இவரது ஆரம்ப நாட்களிலான வறுமை காரணமாக இவருக்கு விலையுயர்ந்த உடைகள், ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், கார்கள் மீது ஆசை. நைரோபியில் உள்ள ஒரு வீட்டில் மட்டும் ஐந்து கார்களை வைத்திருந்தார். அவருடன் ஆட்கடத்தலில் ஈடுபட்ட ஒருவரின் கருத்துப்படி 'தன்னால் பணம் சம்பாதிக்க முடியும் என்றால் தவிர, அவர் வேறு யாருக்கும் உதவுவதில்லை, அவர் ஒரு கோடீஸ்வரர்'.

78ல் இலங்கையை விட்டு வெளியேறிய அவர் ஜேர்மனியில் மெக்கானிக்காக வேலை பார்த்தார். 85ல் இலங்கை திரும்பிய அவர் கொழும்பில் உள்ள பயண முகவர் நிலையத்தில் டிக்கட் விற்பனையில் ஈடுபட்டார். அங்கிருந்து சிங்கப்பூர், இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் ஊடாக ஆட்களைக் கடத்தத் தொடங்கினார். இவர் முதலில் அனுப்பியது தன் குடும்பத்தினரையே. தனது பெற்றோரையும் பத்து குடும்பத்தினரையும் இங்கிலாந்துக்கும் ஒரு குடும்பத்தவரை ஜேர்மனிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவரை கனடாவிற்கும் அவர் அனுப்பி வைத்தார்.

87ல் தவம் ராஜனை தன்னிடம் வேலைக்கு சேர்த்துக் கொண்டார். அந்த வருடம் தான் ராஜனுக்கு கனடாவில் குடியுரிமை கிடைத்தது. எண்பதுகளில் ஜேர்மன் சென்ற ராஜன் 'தன் மனதில் எப்போதும் வெளிநாடு சென்று சொகுசாக வாழ்ந்து பெண்களுடன் குலவ வேண்டும்' என்றிருந்தார் என்கிறார் அவருடன் முன்பு படித்த ஒருவர்.

85ல் அகதி தஞ்சம் கோரிய ராஜன் தன் சகோதரனையும் தந்தையையும் ஸ்பொன்சர் செய்தார். பின்னர் ராஜனின் தந்தை இன்னொரு மகனையும் மகளையும் ஸ்பொன்சர் செய்தார். ராஜனின் தாய், சகோதரி, மைத்துனர்கள் கனடாவில் தான் வசிக்கிறார்கள். ராஜனின் குடும்பத்தவர்கள் மானியம் பெற்ற வசிப்பிடங்களில் வசிப்பதாக அவரது நண்பர் கூறுகிறார். ராஜனை மக்லீன்ஸ் பேட்டி காணுவதற்காக அவரது வசிப்பிடத்தில் எழுத்துமூலமான விண்ணங்களை விட்டுச் சென்ற போதும் அவர் தொடர்பு கொள்ளவில்லை.

88ல் தவம் பரிஸ் ட்ரவல்ஸ் அண்ட் ரூர்ஸ் என்ற முகவர் நிலையத்தை கொழும்பில் திறந்தார். அந்த நேரம் அவரும் அவருடைய ஆட்களும் ஆட்களைக் கடத்த ஆறாயிரம் டொலர் வரை வாங்கினர். பொய்யான ஆவணங்களை கொடுத்து அவர்களை அகதித் தஞ்சம் கோருமாறு இவர்கள் தாங்கள் அனுப்புவோருக்கு கூறுவர். 90ம் ஆண்டு அகதி தஞ்சம் கோரிய ஒருவரின் பயணப் பெட்டியில் கண்டெடுக்கப்பட்ட உதவிக் குறிப்பு ஒன்றில் 'குடிவரவு அதிகாரிகள் நம்பும்படியாக பொய் சொல்ல வேண்டும், வீடு எரிந்தது, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டது என்று சொல்ல வேண்டும், ஏதாவது திகதியைக் கூறுங்கள், சோகமான கதையைச் சொல்வது போல சொல்ல வேண்டும்' என்று புத்திமதி கூறப்பட்டிருந்தது.

ரொறன்ரோ வரும் பல அகதிகள் அமெரிக்கா வந்தே வருகிறார்கள். விசா இல்லாமல் அமெரிக்கா செல்லக் கூடியதாக பொய்யான பாஸ்போட்டுகள் தயாரிக்கப்படும். அமெரிக்கா வரும் போது தாங்கள் கனடாவில் வசிப்பதாகவும் அமெரிக்காவில் சில நாட்கள் நிற்கப் போவதாகவும் கூறப்படும். அவர்கள் வெளியே வந்ததும் அவர்களின் பாஸ்போட்டுகள் பெறப்பட்டு மீண்டும் பாவிப்பதற்கான ஏஜண்டினால் வாங்கப்படும். அகதிகளோ நேரடியாக கனடிய எல்லைக்கு வந்து அகதி தஞ்சம் கோருவர். அங்கே வில் லா காசா என்ற தங்குமிடத்தில் கனடாவில் தஞ்சம் கோரிய 237 தமிழர்கள் தங்கியிருந்திருக்கிறார்கள். இதே போல ரெற் கார்ப்பட் இன் என்ற தங்குமிடத்தில் தினசரி சுமார் நாற்பது வரையிலான இலங்கையர் விசாரணைக்காக தங்கியிருப்பதைக் காணலாம்.

90ம் ஆண்டில் தவத்தினால் கூட்டி வரப்பட்ட சூரி என்பவர் தன்னுடன் நான்கு தமிழர்கள் வந்து ரொறன்ரோவில் வசிப்பதாக கூறுகிறார். தாங்கள் தவத்திற்கு 12 ஆயிரம் டொலர்கள் கொடுத்ததாகவும் கொழும்பிலிருந்து சிங்கப்பூர் மூலமாக மலாவிக்கு சென்றார். அங்கு தவத்தினால் அனுப்பப்பட்ட 15 பேர் ஜேர்மனி செல்வதற்காக தங்கியிருந்தனர். பின்னர் நைரோபிக்கு அனுப்பப்பட்ட போது அங்கு வேறு 35 பேர் தரித்து நின்றனர். அங்கிருந்து மொஸ்கோ சென்று அங்கிருந்து கியூபா சென்ற விமானத்தில் வந்து கனடாவின் நியு பவுண்ட்லாந்தில் அவர்கள் தஞ்சம் கோரினர்.

தவத்தினால் இவர்கள் இவ்வாறு அனுப்பப்பட்ட போது ராஜனே அவர்களை கொண்டு சென்று பொய்யான ஆவணங்களை உருவாக்கி அனுப்பியவர். இரண்டு வருடங்களின் பின் ஸாம்பிய விமான நிலைய அதிகாரிகள் ராஜனின் பயணப் பையில் 160 பொய்யான பயண ஆவணங்கள் இருப்பதைக் கண்டு கைது செய்தனர். இதில் ஒன்பது கனடிய பாஸ்போட்டுக்கள், நான்கு கனடிய பிரஜாவுரிமைப் பத்திரங்கள், நான்கு கனடிய பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், 12 கனடிய பயண விசாக்கள், பத்து பிரெஞ்சு விசாக்கள், பத்து ஜேர்மன் நிரந்தர குடியுரிமைப் பத்திரங்கள், 39 மலேசிய பாஸ்போட்டுக்கள், ஐம்பது சிங்கப்பூர் பாஸ்போட்டுக்கள் அடங்கும். இவை யாவும் போலியான ஆவணங்கள். சென்னையில் பாபு என்றவரிடம் தாம் இவற்றைப் பெற்றதாக அவர் கூறினார். ராஜன் ஸாம்பியாவில் 12 மாத கடூழிய சிறைவாசத் தண்டனை பெற்று கனடாவிற்கு நாடு கடத்தப்பட்டார்.

ஆனால் தவமும் சிங்கப்பூரில் ஆயிரம் டொலர் வீதம் பாஸ்போட்டுக்களை வாங்கி பெருமளவு சிங்கப்பூர் பாஸ்போட்டுக்களுடன் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். சிங்கப்பூருக்கு வருவது நிரந்தரமாக தடை செய்யப்பட்ட போதும் அவர் பல தடவை அதன் பின் பொய்யான ஆவணங்களுடன் சென்று வந்திருக்கிறார். 88ல் கொழும்பில் வைத்து 17 பேருடன் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். தவம் புலிகளுக்கும் மற்றும் இயக்கங்களுக்கும் பெருமளவு பணம் கொடுத்திருக்கிறார். சுமார் 20 ஆயிரம் டொலர்களை பொலிஸ் அதிகாரிக்கு கொடுத்து தப்பிக் கொண்டார்.

தவம் தற்போது கொழும்பு, லண்டன், பரிஸ் பகுதிகளில் கடைகளை சொந்தமாக வைத்திருப்பதாகவும் சுவிஸ், ஒல்லாந்து, கென்யா, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா, கென்யா பகுதிகளில் வங்கிக் கணக்குகள் வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. நைரோபியில் வீடு, கொழும்பில் இரண்டு வீடுகள், அத்துடன் பல சொத்துக்களை உறவினர்களின் பெயரில் வைத்திருப்பதாகவும் பல ஆசைநாயகிகளைக் கொண்டிருப்பதாகவும் சூரி கூறுகிறார்.

90ன் ஆரம்பப் பகுதியில் தவமும் ராஜனும் போட்டியில் இறங்கினர். அதன் பின் ராஜன் நைரோபியைத் தளமாகக் கொண்டியங்குகிறார். அவருக்கு நைரோபியில் ஸாம் ஸாம் என்ற உணவகத்தில் முதலீடு இருக்கிறது. பெண் காரணமாகத் தான் இருவருக்கும் இடையில் மோதம் வந்ததாக இரு முன்னாள் வாடிக்கையாளர் கூறிய போதிலும் மற்றவர்கள் பணம் காரணமாக என்று கூறுகின்றனர். ராஜனும் வேறிருவரும் தன்னை நைரோபியில் வைத்து கொல்லப் போவதாக தவம் பயந்ததாக சிலர் கூறுகின்றனர். ராஜனை நைரோபியிலிருந்து நாடு கடத்த கென்யாவின் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிவரவு அதிகாரிக்கு தவம் பென்ஸ் காரையும் மற்றும் கனிஷ்ட அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது. கடந்த மாதம் கியாம்புவில் நடைபெற்ற வேட்டையின் பின் ராஜன் கனடாவிற்கும் அவரால் கடத்தப்பட இருந்த ஐவர் இலங்கைக்கும் நாடு கடத்தப்பட்டனர். தற்போது ராஜன் உறவினர்களுடன் ரொறன்ரோவில் இருப்பதாகவும் அவரை தவத்தினுல் அனுப்பப்பட்ட கும்பல் தேடுவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த பத்தாண்டுகளில் இவர்களும் மற்றவர்களும் சுமார் ஐயாயிரம் பேரை வெளிநாடுகளுகு கொண்டு சென்றதாக கூறப்படுகிறது. கடந்த மாதம் தவத்தினுல் ஆறு பேர் லண்டனுக்கு அனுப்பப்பட்டனர். ராஜன் 250 தமிழர்களை கனடாவிற்கு கொண்டுவந்ததாக சூரி கூறுகிருர். தற்போது ஒல்லாந்தில் வசிக்கும் ஒருவர் தன்னையும் தன் சிநேகிதியையும் ராஜன் நைரோபியில் வைத்து இருபதாயிரம் டொலர்களை வாங்கிய பின் கைவிட்டதாக கூறினர்.

83ல் ரொறன்ரோவில் ஐயாயிரத்துக்கும் குறைவானவர்களே இருந்தனர். தற்போது 110 ஆயிரம் தமிழர்கள் வரையில் உள்ளனர். இவர்களில் பலர் 20 ஆயிரம் டொலர் வரை ஏஜன்டுகளுக்கு கொடுத்தே வந்து சேர்ந்தனர். 92ம் ஆண்டு ஒட்டாவாவில் உள்ள இலங்கைத் தூதுவரகத்தில் இலங்கைக்கு செல்வதற்காக பயண ஆவணங்கள் கோரிய, அகதி தஞ்சம் கோரிய தமிழர்கள் 8600. அடுத்த வருடம் இந்த தொகை 5865 ஆகியது. தங்களை துன்புறுத்துவதாக கூறி அகதி தஞ்சம் கோரியவர்கள் மீண்டும் எப்படி அந்த நாட்டுக்கு செல்ல முடியும்?

தானகவே குடியேற்றவாசியாக வந்த லிங்கா தர்மலிங்கம் தற்போது பிரஜாவுரிமை பெற்றுள்ளார். தான் விடுமுறைக்கும் குடும்பத்தினரைப் பார்க்கவும் மீண்டும் நாட்டுக்கு செல்வதாக கூறினர். 'உண்மையான அகதிகள் இப்போது இலங்கையில் உள்ளார்கள். அவர்களிடம் பணம் இல்லை. ஒரு சதம் கூட இல்லை. இங்கே வரும் அகதிகள் பொருளாதாரக் காரணங்களுக்காக வந்தவர்களே' என்கிருர் அவர்.

இங்குள்ள அகதிகள் மத்தியில் ஏற்படும் கும்பல் வன்முறை பற்றிக் கூறிய அவர் 'அதிகாரிகள் இந்த நிலையை நீக்காவிடில் நான் சிங்கப்பூருக்கு செல்லப் போகிறேன். அங்கே தான் போதைப் பொருள் கடத்துபவர்களைத் தூக்கில் இடுகிருர்கள். அது வாழ்வதற்கு நல்ல இடம் என்று கோபத்துடன் கூறுகிருர்.

கனடாவின் கேலிக்கூத்தான அகதி கோரிக்கை முறை என்று ரீடர்ஸ் டைஜஸ்ட் சஞ்சிகை கடந்த வருடம் ஒரு கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் அகதி மனுக் கோருவோரின் 'கதைகள்' பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கனடாவில் அகதி மனுக்களை விசாரிப்பதற்கு பொறுப்பான குடிவரவு, அகதி சபை கோருவோரில் 70 வீதமானேரை ஏற்றுக்கொள்கிறது. இது வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏற்றுக் கொள்வதை விட நான்கு மடங்காகும்.

ஐ.நா கொள்கைப்படி அகதி என்பவர் இனம், மதம், அரசியல், சமூக காரணங்களுக்காக தன் சொந்த நாட்டுக்கு செல்ல முடியாதவராகும். கனடாவில் ஏற்றுக் கொள்ளப்படுபவர்களில் சிறுவிகிதமே அந்த வகைக்குள் அடங்கும். மிதிப்பேர் பொருளாதாரக் காரணங்களுக்காக வருபவர்களே. குடிவரவு அகதிச் சபையின் 203 அங்கத்தவர்களும் வருடாந்தம் எண்பதாயிரம் டொலர் பெறும் றப்பர் ஸ்டாம்புகளே. அவர்களைப் பொறுத்தவரை அகதி என்பவர் தான் அகதி என்று சொல்பவராகும். அவர்கள் கோரிக்கைகளை விசாரிப்பதுமில்லை, சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்வதுமில்லை. அது பெருந்தன்மையானதல்ல, தவருன பொதுக் கொள்கை.

அகதிச் சட்டத்தின்படி உள்நாட்டிலேயே அகதிகளாக இருக்க முடியுமாயின் அகதிக் கோரிக்கை செல்லுபடியாகாது. இலங்கையில் ஆறு லட்சம் பேர் அகதிகளாக உள்ளனர். ஆனுல் ஏஜன்டுகளுக்கு 25 ஆயிரம் டொலர்களைக் கொடுக்கக் கூடியவர்களே கனடா வருகிருர்கள்.

எல்லா அகதிகள் போலவே, இவர்களும் விண்ணப்பம் செய்து தங்கள் கதையைக் கூறுகிருர்கள். ஒவ்வொரு விண்ணப்பமும் இரண்டு அகதிச் சபை உறுப்பினர்கள் முன் விசாரணைக்கு செல்ல வேண்டும். ஆனுல் இலங்கையரின் கோரிக்கைகள் அவசரப்படுத்தப்பட்ட நடவடிக்கை காரணமாக ஒரு உறுப்பினர் முன்னுலேயே நடைபெறுகிறது. அவர் அகதியை விசாரித்து அறிக்கை எழுதுவார். அவர் கருதினுல் மட்டுமே முழு விசாரணை நடைபெறும்.

முன்பு தமிழர்கள் தாங்கள் புலிகளுக்கு பயந்து கொழும்பு வந்து உறவினர்களுடன் தங்கியதாக கூறினுர்கள். பின்னர் கொழும்பில் பாதுகாப்பாக இருக்க முடியும் என்று காரணம் காட்டி கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் தங்கள் கதையை மாற்றிக் கொண்டார்கள். 'உடனடியாகவே அவர்களுக்கு உறவினர்கள் கொழும்பில் இல்லாமல போய, அவாகள கொழும்பில் லொட்ஜில் தங்கியிருக்கும் போது பொலிசார் கைது செய்து தாக்கி இருபதாயிரம் ரூபாவைப் பறித்துக் கொண்டு விட்டதாக கதை கூறுகிருர்கள். இது 84 வயது பெண்ணுக்கும் சின்னக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான கதையாக இருக்கும் என்கிருர் வில்லியம் பவர் என்ற குடிவரவு சபையின் முன்னுள் உறுப்பினர்.

சுமார் இரண்டரை லட்சம் தமிழர்கள் கொழும்பில் வசிக்கிருர்கள். கொழும்பில் உள்ள கனடாத் தூதுவரகத்தின் அறிக்கைப்படி கொழும்பில் தமிழர்கள் பாதுகாப்பாக வசிக்க முடியும். சில அகதிகள் குடிவரவு பத்திரம்பெற்றதும் இலங்கைக்கு திரும்புகிருர்கள். ஆனுலும் கனடா 90 வீதமான இலங்கையரை ஏற்றுக் கொள்கிறது.

இலங்கையர்கள் போன்றே கதைகளைச் சொல்லிக் கொண்டு இந்தியா, மலேசியாவைச் சேர்ந்த தமிழர்களும் ஜேர்மன் போன்ற நாடுகளில் வசித்த தமிழர்களும் வருகிருர்கள். அகதிக் கோரிக்கை விடுப்பவர்கள் உண்மை கூறுகிருர்கள் என்பதை வைத்துக் கொண்டே முடிவுகள் எடுக்கப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ட பின்னால் வருகிற ஞானம்...

## ஏடு இட்டோர் இயல்

சூரியக் கதிர் 2 நடவடிக்கை வேகமாக நடந்து வருகிறது. வழமை போல, புலிகள் இம்முறையும் மக்களை 'எதிரியின் இரக்கத்தின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டிய' நிலைக்குத் தள்ளி விட்டிருக்கிறார்கள். சாட்சிக்காரனின் காலில் விழுவதை விட சண்டைககாரனின காலில் விழுவது மேல என்ற உணர்வு தமிழ் மக்களுக்கோ என்னவோ, மக்கள் மீண்டும் மகிழ்ச்சியுடன் வீடுகளுக்கு திரும்புவதாக செய்திகள் வருகின்றன. அரசாங்க சார்புப் பத்திரிகைகளில் வந்த படங்கள் என்றாலும் மக்களின் மனோபாவமும் சூழ்நிலையும் இவ்வாறான நிலையில் உண்மை இல்லாமல் இருக்காது என்றே தோன்றுகிறது. குடாநாட்டில் இருந்து அகதிகளாய் வந்து தென்மராட்சிப் பகுதியில் தஞ்சம் புகுந்த மக்கள் அங்கும் புலிகளின் மிரட்டல் ஆட்சிக்குட்பட்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தம். ஏற்கனவே நொந்து போயிருக்கும் மக்களை தங்களை வழமையான மிரட்டல்கள் மூலம் அடக்கிக் கொண்டிருந்த புலிகள் இராணுவம் அடுத்த தாக்குதலை ஆரம்பிக்க முன்பே தங்கள் இராணுவ தளபாடங்களுடன் கிளாலியைக் கடநது சென்று விட்டனர்.

புத்தாண்டுக்குள் குடாநாட்டை பிடிப்பேன் என்று ரத்வத்தை சொன்னதை வைத்து பெரிதாக பிரசாரம் செய்த புலிகளுக்கு இராணுவத்தின் அடுத்த நகர்வு எங்கே நோக்கியதாக இருக்கும் என்பதை ஊகிக்க முடியாமல் போயிருக்க முடியாது. எனவே, இதற்கான பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான திட்டமும் அவகாசமும் புலிகளுக்கு போதியளவு இருந்திருக்கின்றது. புலிகள் போல திடீர் தாக்குதல்களை நடத்தி வெற்றி பெறுவது போலல்லாமல், இராணுவம் நீண்ட நாட்களாகவே யுத்தம் தொடங்கப் போவதாக கூறியிருந்தது. போதாக்குறைக்கு மக்களை பொது இடங்களுககு சென்று தங்குமபடியும புலிகளின முகாம்களுக்கு அருகில் இருக்க வேண்டாம் என்றும் கூறியிருந்தது. ஆனாலும் தமிழ் மக்களையும் மண்ணையும் பாதுகாக்கப் போரிடுவதாகக் கூறும் புலிகள் எந்த வித முற்காப்பு நடவடிக்கைகளையும் எடுக்காமல், இம்முறையும் வழமை போலவே மக்களைக் கைவிட்டு பின்வாங்கியுள்ளனர். வழமைபோல, தமிழ் மக்கள் தங்களை ஆதரித்திருந்தால் தாங்கள் நின்று மோதியிருக்க முடியும், போதிய ஆட்களும் ஆயுதங்களும் இருந்தால், நூறு ஆட்டிலறிகளும் ஒரு லட்சம் ஷெல்களும் இருந்தால், பத்தாயிரம் பேரும் பத்தாயிரம் கோடி ரூபாவும் இருந்தால். .. இவ்வாறாக இருந்தால் செய்திருப்போம் என்றும் உங்களின் ஆதரவு இருந்திருந்தால் தோற்றிருக்க மாட்டோம் என்று பழியை மக்கள் மீது போடுவதையும் நாங்கள் பின்வாங்கியதால் மக்கள் உயிரிழப்பைத் தடுத்தோம் என்றும் பிரசாரம் செய்வதை புலிகள் நிறுத்தப் போவதுமில்லை.

கொழும்புத் துறைமுகத்தில் தாக்குதல் நடத்த முயற்சித்த போது தாங்கள் மூன்று கப்பல்களை மூழ்கடித்ததாக புலிகள் கூறிய போதும் பத்திரிகையாளர்களின் கண்ணில் பட்டதும் சேதமுற்ற மூன்று கப்பல்கள் தான். அந்த தாக்குதல்களில் இறந்த புலிகளுக்கு அஞ்சலி செலுத்தி, 'குடாநாட்டின் மீது நடத்தப்பட இருந்த தாக்குதல்களை முறியடித்தவர்கள்' என்று அவர்களுக்கு புகழ்மாலை சூடி முடிவதற்குள் தாக்குதல் நடத்தப்பட்டு விட்டது. அரசாங்கத்தின் விநியோகக் கப்பல்களை தாக்குவது தான் எமது இப்போதைய தந்திரம் என்று திலகர் கூறியும் எந்த கப்பலும் அமிழ்த்தப்படவில்லை.

சென்ற தடவை குறுகிய கால அவகாசத்திற்குள் மக்களை வெளியேற்றியது போல இம்முறை வெளியேற்ற முடியவில்லை. கடந்த வெளியேற்றத்தின் போது, தாங்கள் நின்று போரிடப் போவதாகவும் மக்களின் அழிவைத் தடுப்பதற்காக வெளியேறும்படியும், அவ்வாறான வெளியேற்றம் தற்காலிகமானதே என்றும் புலிகள் மக்களுக்கு தெரிவித்திருந்தனர். இதனால் மக்கள் தங்கள் பொருட்களை அப்படியே விட்டு வெளியேறியிருந்தனர். ஆனால் தங்களின் வெளியேற்றம் நிரந்தரமானது என்பதுடன் தங்களின் பாதுகாவலர்கள் தங்களை அடக்கியாள்வதிலேயே கரிசனையாயிருக்கின்றனர் என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்வதற்கு அதிக காலம் செல்லவில்லை. சொந்த இடங்களை விட்டு அகதிகளாக எந்த வசதியும் இன்றி, அப்போதும் இலங்கை அரசின் உணவு அனுப்புதலுக்காக காத்திருப்பதால் ஏற்பட்ட அவலமும் அவமானமும் இன்னொரு இடம் பெயர்தலுக்கு மக்களை தயாராக்கவில்லை. இதனால் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதி மக்களின் இடம் பெயர்வு பாரிய அளவில் இடம் பெறவில்லை. ஏற்கனவே கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்த மக்களைச் சமாளிக்க முடியாது திணறும் புலிகள் இம்முறை வந்த அகதிகளை எதிர்கொள்வதில் கஷ்டப்படுவதாக தொண்டர் நிறுவனங்கள் கூறுகின்றன. எதையும் இழந்து அனாதையாக உயிர் வாழ்வதிலும் பார்க்க, சொந்த மண்ணில் இறப்பது மேல் என்ற எண்ணமோ.. மக்கள் மீண்டும் தங்கள் இடங்களுக்கு திரும்புகிறார்கள்.

இராணுவம் பலவந்தமாக மக்களை திருப்பி அனுப்புகிறது என்ற புலிகளின் பிரசாரத்தில் உண்மை இருக்கக் கூடுமா? ஏற்கனவே இராணுவ நடவடிக்கை தொடங்கப் போவதாக அறிவித்தல் வந்த காலத்திலேயே மக்கள் வெளியேறி கடலைக் கடந்திருக்க முடியும். அல்லது புலிகள் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்தும் இருந்திருக்கக் கூடும். ஆனால் இரண்டுமே நடைபெறவில்லை. ஆரம்பத்தில் இராணுவ நடவடிக்கையால் மக்கள் வெளியேறுகிறார்கள் என்று கூறிய புலிகள் பின்னர் வீடு திரும்பும் மக்கள் கடும் சோதனைக்குள்ளாகிறார்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கண்ணீர் வடிக்கிறார்கள். இராணுவம் பலவந்தமாக அனுப்பியதாக இருந்தாலும், அது குறித்த செய்திகளும் படங்களும் அதை உறுதி செய்வதாயில்லை. அகதிகளுக்கு உடனடியாக நிவாரண பொருட்களை அனுப்புவதாக அரசு கூறியது. தொண்டர் நிறுவனங்களும் அதை உறுதி செய்கின்றன.

பாரிய தாக்குதல்கள் எதையும் புலிகள் நடத்தியதாக இல்லை. இந்த யுத்தத்தில் எந்த தரப்பிலும் பாரியளவில் சேதமில்லை. ஆனாலும் கிளாலிக் கடலில் புலிகளின் படகுகளை அமிழ்த்தியதாக இராணுவம் கூறிய போதிலும் அதில் பெருமளவு மக்கள் உயிர்ச் சேதம் நடந்திருப்பதற்கான சாத்தியங்கள் அதிகம். இவ்வாறான சூழ்நிலையில் தான் புலிகளின் பேச்சுவார்த்தைக் கோரிக்கை வந்திருக்கிறது.

சமீபத்திய மாற்றங்கள் பல புலிகளுக்கு சாதகமானதாக யுத்த தளத்திலும் சர்வதேச அரங்கிலும் இல்லை. கனடாவில் உலகத்தமிழர் இயக்கத் தலைவர் பயங்கரவாதக் குற்றச்சாட்டில் விசாரணைக்குள்ளாகியிருக்கிறார். சுவிஸிலும் புலிகளின் அமைப்பு முடப்பட்டு அதன் முக்கியஸ்தர்கள் மிரட்டிப் பணம் பறித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மலேசியாவும் புலிகளுக்கு ஆதரவு செய்வதை சட்டவிரோதமாக்கியிருக்கிறது.

அதை விட இந்தியக் கடற்படையின் உதவியுடன் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று நிர்மூலமாக்கப்பட்டது. ஆனால் திருமலை முகாமின் மீது தாக்குதல் நடத்த சென்ற தங்கள் படகுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அது மாபெரும் அநீதி போன்றும் புலிகள் பிரசாரம் செய்தார்கள்.

தற்போதைய இந்தியத் தேர்தலும் புலிகளுக்கு எந்த விதத்திலும் சாதகமானதும் அல்ல. தமிழகத்தில் புலிகளின் குரலான வை.கோ பத்தோடு பதினொன்றாகும் நிலைக்கு காங்கிரஸ்-தி.மு.க கூட்டணி தள்ளியிருக்கிறது. காங்கிரஸ் கூட்டு தி.மு.க புலிகளின் பக்கம் திரும்புவதை தடுக்கும் என்பது ஒரு புறமிருக்க, கருணாநிதியின் சந்தர்ப்பவாத அரசியல் புலிகளுக்கு சார்பாகவும் இருக்கப் போவதுமில்லை. மத்திய அரசில் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இலங்கையுடனான உறவுகள் காரணமாக புலிகளை ஆதரிக்கப் போவதில்லை. தமிழ் மக்களின் மீதான அனுதாபம் கூட வர முடியாத நிலைக்கே புலிகள் இந்தியாவை ஒட்டு மொத்தமாகக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அத்தோடு இலங்கை அரசின் பிரசார அணுகுமுறைகளும் புலிகளே சமாதானத்திற்கு தடையாக இருக்கிறார்கள், தங்களின் தாக்குதல்கள் நியாயமானவை என்ற எண்ணப்பாட்டைத் தோற்றுவித்திருக்கின்றன.

மறுபுறத்தில் புலிகள் கொழும்பில் நடத்திய தாக்குதல்களும் நீண்ட கால அடிப்படையில் கொழும்பில் அரசியல், பொருளாதார மாற்றங்களை கொண்டுவரவில்லை. மத்திய வங்கித் தாக்குதல், எரிபொருட் குதத் தாக்குதல் என்று பரபரப்பூட்டிய சம்பவங்கள் எல்லாம் பாரிய மாற்றங்களைக் கொண்டு வராமல் சரித்திரத்துக்குள் மறைந்து விட்டன.

ஆக மொத்தத்தில் புலிகள் சமாதானத்தை முறித்து ஆரம்பித்த யுத்தம் புலிகளுக்கு பாதகமாய் அமைந்ததுடன் தமிழ் மக்களின் எதிர்காலத்தையும் ஒரு முழுமையான இருட்டுக்குள் தள்ளி விட்டிருக்கிறது. அடிக்கடி முகாம்களை தகர்ப்பதில் கிடைக்கும் வெற்றிப் பெருமிதம் பேச்சுவார்த்தைகளில் அத்தியாவசியமான விட்டுக்கொடுப்புகளை நகைப்புக்கிடமாக்கியது. வெற்றி அல்லது வீரமரணம் என்ற தாரகமந்திரம் கொண்ட புலிகளுக்கு அதற்கு அப்பால் எந்த சாத்தியங்களும் இல்லை. அயர்லாந்தோ, பொஸ்னியாவோ, தென்னாபிரிக்காவோ, பாலஸ்தீனமோ இன்று சர்ச்சைகளுக்கு மத்தியிலும் ஓரளவுக்கேனும் சமாதானத்தை அனுபவிப்பதற்கான அடிப்படை பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட விட்டுக்கொடுப்புகளே. விட்டுக்கொடுப்புகளின் அடிப்படையிலான பேச்சுவார்த்தைகளே நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்க முடியும். வழமை போல, எந்த சமாதான முயற்சிக்கும் தடையாக தீவிரவாதிகள் இருப்பதுண்டு. அதையும் மீறி சமரசம் காண்பது தான் உண்மையான பொறுப்புணர்ச்சியுள்ள தலைமைக்குரிய தனித்துவம். தீவிரவாதிகளின் மிரட்டலையும் மீறி, எதிர்க்கட்சிகளின் பயமுறுத்தலையும் மீறி, அடுத்த தேர்தல் குறித்த பயமின்றி சரியானது என்று கருதுவதை நடைமுறைப்படுத்துவது தான் தலைமைக்கு இருக்க வேண்டிய இயல்பு.

அந்த சந்தர்ப்பத்தை தாங்களாகவே உடைத்துக் கொண்டதால் வந்த பாதிப்பு புலிகளுக்கு மட்டுமாக இருந்தால் அதை 'அவர்களின் புத்திக்கொள்முதல்' என்று கூறி பேசாமல் இருக்க முடியும். ஆனால் அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு?

புலிகளைப் பலம் வாய்ந்தவர்கள், வெற்றி கொள்ளப்பட முடியாதவர்கள் என்ற அச்சம் காரணமாகத் தான் அரசு ஆயுதங்களை ஒப்படைக்கும்படி கேட்காமல் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. ஆனால் இப்போது ஆயுத ஒப்படைப்பு இன்றி பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. தங்களின் பலத்தை அதீதமாக மதிப்பிட்ட புலிகள் யுத்தகளத்தில் தோல்வியைச் சந்தித்த பின்னர், புலிகள் மீதான அரசுக்கு இருந்த பயம் போய்விட்டது. இலகுவாக வெற்றி கொள்ளக் கூடியவர்கள் என்ற எண்ணம் வந்த பின்னர், அரசியல் தீர்வு பற்றிய சந்திரிகா அரசின் போக்கில் பாரிய மாற்றம் ஏற்பட்டது.

வடக்கு கிழக்கு இணைப்பு, மாநில அரசை கலைப்பதற்கு மத்திய அரசுக்கு இல்லாத உரிமை போன்றனவற்றைக் கொண்டிருந்த அரசியல் தீர்வுத்திட்டம் திடீரென்று இந்த சரத்துக்கள் எதுவுமில்லாமல் வெறுமனே கண் துடைப்பு நிலைக்கு போனதற்கு காரணம் புலிகளின் இந்த முட்டாள்தனமான செயல் தான்.

இவ்வாறாக தொலைநோக்கில்லாத தங்கள் செயலால் தங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்திய புலிகள் தற்போதைய தோல்விகளின் பின்னால் மூன்றாம் நாட்டின் மத்தியஸ்தத்துடன் சமாதானத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் தயார் என்றிருக்கிறார்கள். புலிகளின் லண்டன் பிரதிநிதிதான் இந்த கோரிக்கையை விடுத்ததால் அது முக்கியத்துவமற்றதாகக் கருதப்பட்டாலும், புலிகள் தரப்பில் அதற்கான மறுப்பு இன்னமும் வரவில்லை.

இதுவரையும் பிரான்ஸின் மத்தியஸ்தத்தை இலங்கை அரசு கோரியபோது மறுத்த புலிகள், தமிழ்

16ம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் இடம்மாறிப் போனதா?

பசுமை நிறைந்த நினைவுகளென்பது இளமைக் கால அனுபவங்களாகவே இருப்பதுண்டு. எம்மில் பலருக்கும் இந்தப் பசுமையின் நினைவுகள் எம் மண்ணில் நிகழ்ந்த நினைவுகளே.

தூரம் வந்துவிட்டாலும் எம் மண்ணுடனான தொடர்புகள் இந்த நினைவுகளாலேயே இணைக்கப்பட்டன. இதனால் தான் என்றாவது ஒரு நாள் மீண்டும் அங்கொருக்கால் செல்வோம் என்ற ஆவலாவது இல்லாமலிருந்ததில்லை.

ஆனால் அதுவும் இனிச் சாத்தியமாகாதென ஆகும்போது இடிந்து போகப் போவது எமது மனதுகள் மட்டுமல்ல அதனுடன் அந்தப் பசுமையான நினைவுகளுந்தான், அந்த நினைவுகள் முழுக்க வெறிச்சோடி, செடி, கொடி புதர்கள் மண்டி போயிருக்கப் போகின்றன.

ஆட்களில்லாமல் தேசமெதற்கு, அதைச் சாதிப்பதில் இரண்டு பக்கமும் போட்டியுமெதற்கு?

வடக்கு சந்தித்த அனுபவம், கிழக்கிலும் தொடங்கப் போகின்றதா?

யாருக்கு சொல்லி யார் வந்து மீட்பார்? சாத்தான்கள் பூசிக்கப்படும் இக்காலத்திலே.

ஒரே நாளில் ஐம்பதாயிரம் தமிழர் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என அவசர அவசரமாக அகதியாய்ப் போனது ஒன்றும் சாதனை அல்ல. அந்த ஐம்பதாயிரம் பேரும் தம் உயிர் மேல் வைத்திருந்த ஆசைக்குச் சாட்சியம் இது. ஒவ்வொருவரும் உயிரைக் காத்துக்கொள்ளப்பட்ட அவலங்களை 'சாதனை' எனக் கட்டுரை எழுதிய புலி வாலுக்கு விளங்கியிருக்காது உயிரை மதிக்கும் மனிதன் வழக்கு.

மக்கள் தாங்களாய் தப்பவில்லை, விரட்டப்பட்டார்கள். போக்கிடம் தெரியாமல் "எங்கோ" போகின்றோம் எனப் போனார்கள் அகதிகளாய். அவர்களுக்கு அப்போது மண் முக்கியமல்ல, உயிர் தான் முக்கியம். அவர்களைத் துரத்தியவர்களுக்கும் மண் முக்கியமல்ல. மக்களை அடக்கி ஆளும் வசதிதான் முக்கியமாகப்பட்டதற்கு இது நல்ல சாட்சியம்.

கட்டிக் காத்த மண்ணை விட்டு ஓடுவது வீரமென்று புறநானூற்றில் எங்கும் சொல்லப்பட்டிருக்கவில்லை. இன்று இல்லா வீரம் இன்னொருநாள் வருமென்றும் சொல்வதற்கில்லை.

யாழப்பாணத்தில் இருந்து தென்மராட்சிக்கு.. அங்கிருந்து வன்னிக்கு.... இப்படியே போனால் இலங்கைக்கும் வெளியே வங்கக்கடலில் தான் முடிவோ?

யாழ்ப்பாணத்தை நிர்வாகஞ் செய்கிறோம், வரி வாங்குகிறோம், நீதி மன்று நடத்துகின்றோம் என்ற "சவடால்" களெல்லாம் என்னாச்சுது?

இருந்த மண்ணையே பாதுகாக்கப் பலமில்லாதவர்கள் இனிமேல் பறிப்பதும் மீண்டும் பத்திரமாய் பாதுகாப்பதும் நம்பக்கூடிய கதையா?

இத்தனை ஆயிரம் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு அவர்கள் சிறுகச் சிறுக பிரயாசையெடுத்துக் கட்டிய வீடுகளையும் விட்டு அகதிகளாய்ப் போல் கூடாரங்களிலும் தாழ்வாரங்களிலும், மரங்களின் கீழும் தஞ்சமடைந்திருக்கிறார்கள், இத்தனை பெரிய அவலங்கள் நேர்ந்திருக்கிறது. இதை உணர்ந்து கொள்ளாதது போல் தங்களுக்கோ மக்களுக்கோ இது ஒன்றும் பெரிய மாற்றமல்ல, ஒரு இடப்பெயர்வு அவ்வளவுதான் என்கிறார் பேச்சாளர். ஒரு பொறுப்புள்ளவரின் பேச்சா இது.

அதனால்தான் மக்கள் தங்கள் எதிர்ப்புக்களைக் காட்டத் தொடங்கியுள்ளனர், அவர்களுக்கு பயமெல்லாம் போய்க் கொண்டிருக்கிறது. பொறுமைக்கும் எல்லை உண்டுதானே அதுதான் புலியாவது பூனையாவது! என்று கதைக்குமளவுக்கு நொந்து போய்கிடக்கிறார்கள்..

அன்றொரு நாள் இசுலாமியமக்கள் அவலப்பட்டுப் புறப்பட்டபோது வேடிக்கை பார்த்தவர்களுக்கு நடந்த கதியை அல்லாதான் தீர்மானித்தானா?

"அவன்" நின்று அறுத்தது இங்கு கண் முன்னே கண்டது போன்ற அனுபவம்.

இங்கு, புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்வோருக்கு இப்போதுதான் உண்மை ஓரளவு உறைக்கத் தொடங்கியுள்ளது.

தங்கள் வயோதிபப் பெற்றோர், மாமன் மாமியார் உயிர்விட்டதை கேள்வியுறும் போதுதான் பல கேள்விகள் விளங்குகின்றன. யாழ்ப்பாணத்தை விட்டுவயோதிபத்தின் பலவீனங்களுடன் ஊரை விட்டே நகர்ந்ததில் (நகர்த்தப்பட்டதில்) ஏற்பட்ட கடுமையான சக்தி இழப்பும், நோயும் இன்ன பிற மன நெருக்கடிகளும் பலரையும் மரணத்தில் வீழ்த்தியிருக்கிறது.

இதனால்தான் "தூசி தட்டியே வயிற்றைக் கழுவும் நாய்ப்பிழைப்பு எண்டு முன்னம் எங்களை இகழ்ந்துபோட்டு இப்போ உண்டியலைத் தந்திட்டுப் போறாங்கள்" என்று சொல்ல வைத்திருக்கிறது.

அதே நேரம் சில புலி வால்கள் யாழ்ப்பாணத்தை

விட்டு ஓடியதை நியாயப்படுத்தவும் பின்நிற்கவில்லை இவர்கள் குடும்பம் இங்கே பாதுகாப்பாய் இருக்குதல்லே!

ஆக்கள் இல்லாத யாழ்ப்பாணத்தை எத்தனை நாளைக்குத்தான் வைத்திருப்பார்கள்?

ஆட்கள் உள்ள இடத்தில்தான் இராணுவம் இருக்க வேண்டுமென்று எந்த விதியுமில்லையே. அப்படி வெளியேறுகையில் வீடுகள் எல்லாவற்றையும் தகர்ந்தெறிந்தால் யாழ்ப்பாணத்தில் சகலருக்கும் வீடு கட்டிக் கொடுக்க புலிகளால் முடியுமா?

மக்களைக் காக்கவே புலிகள் அவர்களை நகர்த்தினார்களாம். இருந்ததை இருந்தபடியே எந்த நட்டமும் வராமல் தடுத்து நிறுத்திக் கொள்வதே பாதுகாப்பென்பது. இங்கு நடந்ததோ தப்பிக் கொள்ளல் தான்.

இதனால் மக்கள் இராணுவ வெறிக்கு ஆளாகி மாண்டு, வலோற்காரத்துக்குட்பட்டும் போகாதது நடந்ததென்னவோ உண்மைதான் ஆனால் அந்த மக்களை சௌகரியமாகத் தங்க வைத்துக்கொள்ள முடிந்தா இவர்களால்?

உண்மையில் நடந்தது என்ன?
புலிகளின் பலம் போதாதது எனவே தாம் ஓடவேண்டியிருந்தது. அவ்வாறு செய்தால் இழப்பு யாருக்கு அதிகம்? மக்களை விட்டு ஓடியவர்கள் என்ற அவப்பெயர் ஒருபுறம். யாழ்ப்பாண மக்களே புலிகளின் பலம் என்பது மாறி அவர்களிடமிருந்து அந்நியப் படவேண்டி வந்து விடும்.

மக்களுடன் யாழ்ப்பாணத்தைப் பிடித்தால் அரசு சிறுகச் சிறுகச் செய்யும் வசதிகளுடன் யாழ்ப்பாண மனோ பாவம் மாறிப்போகும். அரச நிர்வாகம் இயங்கும். தேர்தல் நடந்தால் புலிகளின் மிரட்டல்களையும், எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மீறி வாக்களிக்க மக்கள் சென்றால் புலிகள் நிலைமை "கையோடு கம்மாரிக" தான். மக்கள் எம்முடன் தான் என்று எப்படிச் சொல்ல முடியும்?

அதனால்தான் மக்களை ஓட்டிக்கொண்டு புலிகள் இடம் பெயர்ந்தனர். மக்கள் இன்னும் மந்தைகள் தானோ!

இவர்கள் ஏன் ஓடவேண்டியேற்பட்டது? ஆயுத பலம் மட்டுமல்ல ஆட்பலமும் இல்லை. அதே நேரம் அரசிடம் இரண்டும் இருந்ததுடன் கூடவே எந்த நாடும் தட்டிக் கேட்காது என்ற திடமும் இருந்திருக்கிறது.
புலிகளின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் இராணுவத்திற்கு ஊட்டமாகவே இருந்திருக்கிறது.

முன்னர் வடமராட்சித் தாக்குதலின் போது இந்தியா வந்திடுமோ என்ற பயம் அரசாங்கத்துக்கு இருந்தது. இலங்கை வான் பரப்புக்குள் பிரவேசித்து உணவுப் பொட்டலங்களைப் போட்ட மாத்திரமே இலங்கை பின்வாங்கிவிட்டது. ஆனால் இப்போது நிலமை அப்படியல்ல, புலிகளை அழிக்க இந்தியா வரவேண்டும் என்று அரசு கேட்குமளவுக்கு நிலமை இலங்கை அரசின் பக்கம் மாறியிருக்கிறது. யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டபோது இந்திய அரசு தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு என்ன செய்தியைச் சொல்லி வைத்தது? இலங்கையில் இராணுவத்தால் தமிழன்

இன்னலப்பட்டால் தானே யாழ்ப்பாண முற்றுகைக்கு கண்டனம் தெரிவிக்கமுடியும் என்று ஒரே ஒரு பதிலை மட்டும் சொன்னது.
அப்படியான நிலவரம் இப்போ.

மணலாற்றுத் தாக்குதலில் மரணமாகிப் போன விடுதலை வேங்கைகளை வீடியோவில் பதிந்த போதும் அது "ரூபவாகினியில்" காட்ட அரசு தடுத்திருந்தது. அந்தச் சின்னஞ் சிறுசுகளின் உடல்களைக் கண்டு சிங்கள மக்கள் பரிதாபப்படுவார்கள் என அரசு கருதியிருக்கலாம். ஆனால் அந்த வீடியோப் பிரதி இராணுவத்துக்குக் காட்டப்பட்டது "நீங்கள் நினைக்கும் கொட்டியா" இதுதான் பாருங்கள் என மணலாற்றில் மரணித்த பாலகர்களின் உடல்கள் காட்டப்பட்டன. இராணுவம் உசார் கொண்டது.

"யாழ்ப்பாணத்தைத் தாக்குகிறார்கள் பலங்கொண்ட அரச வெறியர், அதனைத் தடுக்கப் புலிகளுடன் இணையுங்கள், எம் பலத்தை உயர்த்த எங்களுடன் சேருங்கள்" எனப் புலிகள் விடுத்த வேண்டுகோள்கள்" இராணுவத்துக்கு எடுத்து செல்லப்பட்டது. அதன் அர்த்தம் புலிகளிடம் படைபலமும் இல்லை, அதனை எண்ணிப் பயமும் இருக்கிறது என எடுத்துச் சொல்லப்பட்டது. இராணுவம் இன்னும் உசாராகினர்.

ஒருமித்து யாழ்ப்பாணத்துள் புகுந்தனர். புலிகள் உள்ளதை எடுத்துக் கொண்டு ஓடவேண்டியிருந்தது.

கெரிலாத் தாக்குதல் அவ்வப்போது வெற்றியளிக்கலாம், அவ்வப்போது விமானங்களை வீழ்த்தலாம் இவற்றால் மட்டும் ஒரு நாட்டை மீட்டுவிடவும் முடியாது, முற்றுகையைத் தடுத்திடவும் முடியாது, அதற்கு பரந்து பட்ட இராணுவ அணியும் ஆயுத பலமும் அவசியம். இதனை இப்போது யாழ்ப்பாண மக்கள் அனுபவத்தில் அறிந்துகொண்டுள்ளனர் மட்டக்களப்பில் உணரப்பட்டும் விட்டது.

யாழ்ப்பாண மக்களின் அனுபவம் எத்தனை துயரமானது என்பது இங்குள்ள பலருக்கும் விளங்கியதாய்த் தெரியவில்லை. ஏதோ வெளியேறி விட்டனர் என்று மிகச் சாதாரணமாய்ச் சொல்லி விடுகின்றனர்.

ஒரு திருவிழாவில் யாழ்ப்பாணத்தின் பத்துவீத மக்கள் கூடினாலே எவ்வளவு நெருக்கடி? இது முழுயாழ்ப்பாணமுமே இரண்டு பிதான வீதிகளால் மட்டும் ஒரு குறித்த மணி அவகாசத்தில் வெளியேறியது என்றால் யோசித்தும் பாருங்கள்.

குடிபெயர்ந்தது மட்டுமல்ல எந்த வசதியுமே முன் கூட்டியே செய்யப்படாத இடத்தில் தங்கிக் கொள்வதென்றால், மல-சல கூட, படுக்கை, சமையல், உடுபிடவை, மருத்துவ, பெறுபேறு இத்தனை அத்தியாவசியத்திற்கும் வசதிகள் இல்லாது போனால் மக்களின் மனநிலை எப்படி கொதித்துப் போகுமென்று யோசித்துப்பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை விட தங்களுக்குப்பின் தங்கள் பிள்ளைகளுக்கென்று பாதுகாத்த சொத்துக்களை கைவிடும்படி மிரட்டினால் மனதுகள் எப்படி வேதனைபபடடிருக்கும்? இந்த அதிர்ச்சிகளாலேயே உயிர்விட்டவர்களும் இருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ பேர் உள்ளுக்குள் கறுவிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்பட்டது புலிகளுக்கு சந்தோசமாய் இருக்கலாம் ஆட்கள் சேர்வதில் வளர்ச்சி இருக்கும் என நினைக்கலாம். ஆனால் தமிழ்ப் பெற்றோர்களுக்கு அவ்வாறல்ல.

தரப்படுத்தல் தான் இந்த போர்ச் சூழலுக்கு காரணமாச்சுது எனச் சொன்னவர்கள். சொல்பவர்கள் கவனிக்கவும். இப்போது யாழ்ப்பாணம் பின்தங்கிய மாவட்டமாய் ஆகிப்போயிற்று. அதற்குக் காரணம் இந்த யுத்தப் பேய்தான் காரணமாச்சுது.

இனியாவது பேசுவோம், சமாதானமாய் வாழுவோம் என்ற நிலைப்பாடு எவருக்குமில்லை "பழிக்கு பழி" என்று இரண்டு பக்கமும் முழங்கினால் எல்லாவற்றுக்கும் பலி உயிர்களே. உயிர்களை விட மொழியோ மதமோ, நாடோ பெரிதல்ல. இது எவருக்கும் புரிந்ததாய் இல்லை வெறும் மரணங்களால் மட்டும் உன்னதங்கள் நடந்திடப் போவதில்லை. இது ஆயுதபாணிகளுக்கு புரிந்துதான் போகுமா?

இவர்களுக்கு தமிழ் மொழியின் மீதும் அல்ல, தமிழ் மண்ணின் மீதுமல்ல, தமிழ் மக்கள் மேலும் அல்ல, அவர்களின்மேல் செலுத்தும் அதிகாரத்தின் மீதான வெறிதான் உண்டு.

மண்ணின் மீதிருந்திருந்தால், இருந்த மண்ணையே விட்டு ஓடியும் இருக்கார்கள், மக்களையும் விரட்டியிருக்கார்கள்.

தமிழ் மக்கள் மீதும், மொழியின்மீதும் இருந்திருந்தால் இறுதிவரை போராடியிருப்பார்கள். மக்களுக்கு வெளியேற்ற வேண்டுகோள் மட்டுமல்ல, பயமுறுத்தலும் சில சமயம் வன்முறையும் துப்பாக்கிச்சூடும் புரிந்திருக்கிறார்கள் இவை ஏன்?

மக்களின் மனத்தை மீறி நடக்க வேண்டியிருந்திருக்கிறது இது மக்களின் நன்மை கருதி செய்த செயலா?

இதனை வலியுறுத்தும் வாசகந்தான் அவர்கள் வாயால் வந்த "இது பெரிய மாற்றமல்ல ஆக இடந்தான் மாறி இருக்கிறது. அவ்வளவுதான்"

இவர்களுக்கு இடம் முக்கியமல்ல தாங்களும், தாங்கள் அதிகாரஞ் செலுத்த மக்களும் எங்கிருந்தாவது அதிகாரஞ் செய்தால் சரி.

இவர்களை நம்பி ஆயுதக் கவர்ச்சியுள்ள குஞ்சு குருமான்களும் இவர்கள் எல்லாருக்கும் பயந்தபடி உயிர்கள்மேல் பற்றுஉள்ள மக்களும் சபிக்கப்பட்ட வாழ்வு.

-க. வேலுப்பிள்ளை-

**மஞ்சரி சூரியன் பத்திரிகைகள் நிறுத்தப்பட்டதால் தற்போதைய யுத்தத்தில் செய்திகளை அறிந்து கொள்ள அவற்றின் வாசகர்கள் மிகவும் அவதியுறுவார்கள் என்பதால் அவர்களின் இன்னல்களை நீக்க ஏதோ நம்மாலானது...**

# குறும்பா

கந்தரப்பா காசுபணம் என்றுமிகச் சாவார்
கலியாண விழாவொன்று மகனுக்குச் செய்தார்
இந்த விலை சொல்கிறானே தவிற்காரன்
வந்தொருநாள் வாசிக்க -என்பதனால்
சொந்தமாக தவில் வாங்கி தானடிக்கலானார்.

★ ★ ★

எங்களூரில் பஞ்சவர்ணம் ஐயர்-அவர்
எந்த நாளும் சிவபூசை செய்வர்
மந்திரங்கள் ஓதியவர் கையிருந்த
மணி தவறிக் கீழ் விழவும் - சினந்து
இங்கிலீஸில் "ஓ! ஜீசஸ் என்பர்

★ ★ ★

சாம் ஏவு கணைவாங்கி விமானத்தைச் சுட்டம்
சாதனைதான்! சனமழிய நடக்குமிந்த யுத்தம்
ஒம்பாரும்! யாழ்ப்பாணம் பெரியாசுப் பத்திரியில்
ஒருவரிக்கில்லை அறுவை டாக்குத்தர் -சும்மா
போங்காணும் எங்கேயோ பெரியபிழை விட்டம்.

★ ★ ★

கல்லூரி விழாவுக்கு அவரொழுங்கு பார்த்தார்
கமிட்டியினைக் கூப்பிட்டு கூட்டமொன்று போட்டார்
எல்லாம்சரி இந்தமுறை எவருக்குப் பொன்னாடை
என்று வந்த இழுபறியில்-
சொல்லாமல் கொள்ளாமல் தனக்கே தான் போர்த்தார்!

★ ★ ★

ஆறாத பசியோடு வீடுவந்தான் நல்லான்
அவன் மனைவி சமைக்கவில்லை என்றாள்
ஏனாக்கும்-? என்னப்பா-?
எனக்கேட்க வந்த பதில்-
"சூடாக்கிப் போட்டனப்பா எல்லாம்"

★ ★ ★

'கண்டேனவர் திருப்பாதம்" என்றேகவி படித்தார்
கடவுளது கால்களிலே மண்டியிட்டுப் படுத்தார்
என்றாலும் எம்பெருமாள் பேரழகு காணவென்று
அண்ணாந்த திருநாவுக் கரசர்- அடுத்த கணம்
'கண்டறியா தனகண்டேன்' என்றோட்டம் எடுத்தார்

★ ★ ★

புத்தகத்தின் அட்டையிலே ஒரு பாதி காணம்
மிச்சமுள்ள பாதியிலே மீந்த சொல்லு 'காமம்'
இச்சை மனம் கிளுகிளுக்க அதை விரித்துப்
இரண்டு வரி படிக்க முதல்
வெப்பியாரம் மிகப்பட்டேன்- விஷயம் 'கதிர்காமம்'

-நிலா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சரி

கனடாவில் கற்பனையில் முன்நிற்கும் தமிழ் வாரப் பத்திரிகை

# புலிகளின் தந்திர யுத்தம் தொடர்கிறது அரச படையினர் முன்வாங்கல்

★ புலிகள் தாக்கினால் இராணுவம் இறக்கலாம் என்று தகவல்
★ மக்கள் அவதி, கவலை, இடம் பெயர முண்டியடிப்பு
★ மக்கள் வேறு, புலிகள் வேறு அல்ல என தலைவர் அறிவிப்பு
★ இராணுவத்திற்கு பலத்த சேதம், சேத விபரங்கள் தெரியவில்லை

### சுடும் சூரியக் கதிர்

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட சூரியக்கதிர் 2 நடவடிக்கை இராணுவத்தினரின் பலத்த சேதங்களுக்கு இடையிலான முன்வாங்கலுடன் தொடர்ந்து வருகிறது. இராணுவத்தின் சேத விபரங்கள் பற்றிய உறுதிப்படுத்தப்படுத்தப்படாத தகவல்கள் அனைத்தும் பத்திரிகைத் தணிக்கை காரணமாக கிடைக்கவில்லை. எனினும் எமது யுத்த முனை நிருபர் குஞ்சன் குஞ்சரிக்கு அனுப்பி வைத்த விசேட செய்தியில், துப்பாக்கிச் சூடுகள் இடம் பெறுவதாக தெரிவித்திருக்கிறார். சூரியன் என்றால் சூடாகவே இருக்கும். சூரியக் கதிர் சுடும் என்பதைக் காட்டவே படையினர் சுடுவதாகவும் நம்பகமாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பாராட்டு

சூரியக்கதிர் 1 நடவடிக்கை முடிந்ததும் சூரியக்கதிர் 3 நடவடிக்கையை ஆரம்பிக்க முன் சூரியக்கதிர் 2 ஐ ஆரம்பித்து விட வேண்டும் என்று சந்திரிகா திட்டமிட்டிருந்தார். இதற்கு பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை ஆதரவு உண்டு என்பதை ஏற்கனவே உங்களுக்கு சென்ற குஞ்சரியில் சூசகமாகத் தெரிவித்திருந்தோம். நாம் குஞ்சரியில் தெரிவித்திருந்தபடி சூரியக்கதிர் 2 ஆரம்பிக்கப்பட்டதும் தெரிந்ததே. இதையிட்டு தொலைபேசி மூலமாக எமக்கு வாசகர்கள் எமக்கு பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். இது கனடாவில் யாருக்குமே இல்லாத எமது பத்திரிகை அனுபவத்திற்கு கிடைத்த பாராட்டு என்றே கருதுகிறோம். நன்றிகள்.

### மக்கள் அவதி

சூரியக்கதிர் 1 நடைபெறும் போது புலிகளால் வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதால் அவதியுறாத மக்கள் கூட சூரியக்கதிர் 2இன் போது அவதியுறுகிறார்கள். இது பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக இருக்கிறது.

### தலைவர் விசாரிப்பு

மக்களின் கஷ்டங்களை விசாரித்து வருவதில் தலைவர் பலத்த ஆர்வம் காட்டி வருகிறார். மக்களே எமது அரண் என்று தலைவர் முன்னர் தீர்க்கமாக சொல்லியிருந்ததை பொதுமக்களில் பலர் மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்து தலைவரை விட்டு விலகி வருகிறார்கள்.

### புலிகள் எதிர்த்தாக்குதல்

இதேவேளைகளில் சூழ்நிலைகளுக்கு ஏற்ப படையினர் தமது நகர்வுகளைச் செய்து வருகின்றனர். பகலில் சூரிய வெளிச்சம் இருப்பதால் சுலபமாகப் பார்க்க முடியும் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இரவில் சூரியன் வருவதில்லை. எனவே குடாநாட்டில் சூரிய வெளிச்சம் இரவில் தெரிவதில்லை. சூரிய வெளிச்சத்தை ஆங்கிலத்தில் Sunlight என்று அழைப்பார்கள். இதே பெயரில் ஒரு சவர்க்காரம் முன்பு இலங்கையில் விற்பனையானது. அந்த சோப்பை யாழ்ப்பாணத்தில் உப்புச் சவர்க்காரம் என்று சொல்வார்கள். உப்பு சவர்க்காரம் துணி துவைக்க உபயோகப்படும். துணிவே துணை. இதையே தாரக மந்திரமாகக் கொண்டு புலிகளும் வீரம் செறிந்த தாக்குதல்களை நடத்தி இராணுவத்தின் முன்னேற்றத்தை தடுத்தி நிறுத்தி வருகிறார்கள்.

### தந்திர யுத்தம்

புலிகள் எதிர்த்தாக்குதலில் ஈடுபடவில்லை என்று மக்கள் கடும் அதிருப்தியடைந்து காணப்படுகிறார்கள். தமது கட்டுபபாட்டில் இருந்து தப்பி மக்கள் பெருந்தொகையாக குடாநாட்டுக்குள் செல்வதை புலிகள் விரும்பவில்லையாயினும் மக்களை மீளக்குடியமர்த்தும் ராஜதந்திர நகர்வை புலிகள் ஒரு சதமும் செலவு செய்யாமல், சுண்டு விரலைக் கூட அசைக்காமல நிகழத்தி வருகிறார்கள். இதன் மூலம் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் பறிபோகும் அபாயம் புலிகளால் தடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சிங்களவர்களை யாழ்ப்பாணத்தில் குடியேற்ற நினைத்த சந்திரிகாவின் சதித்திட்டம் தலைவரின் தீர்க்கதரிசனத்தால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டு விட்டது. இந்த வகையான யுத்த தந்திரத்தையே தமிழில் தந்திர யுத்தம் என்று சொல்வார்கள். இது பற்றிய விளக்கக் குறிப்பு ஒன்று புறநானூற்றில் காணப்படுகிறது. பண்டைய சீன இராணுவ நிபுணர் மஞ் சூ வின் நூலிலும் இது பற்றி குறிப்பிட்டிருந்தது. தலைவர் இத்தகைய நூல்களை விசேடமாக மொழிபெயர்த்திருந்ததை முன்பே குறிப்பிட்டிருந்தோம்.

### புலிகளின் செல்வாக்கு உயர்வு

சர்வதேச அரங்கில் புலிகளின் செல்வாக்கு உயர்ந்து வருவதாக கருத்துக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இந்த கருத்துக் கணிப்பீடுகளை உலகத்தமிழர் இயக்கம் செய்திருக்கிறது. இக்கருத்துக் கணிப்பீடுகளுக்கு சுரேஷ் மாணிக்கவாசகர் தனது ஆதரவைத் தெரிவித்திருக்கிறார். அதை உறுதி செய்ய சிறையில் இருக்கும் அவருடன் தொலைபேசி மூலம் குஞ்சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு கொண்ட போது அவர் தான் இன்னும் சிறையில் இருப்பதை உறுதி செய்தார். இந்த தொலைபேசி அழைப்பைச் செய்ய எமக்கு பக்க பலமாக இருந்த ஆர்.சி. எம்.பி. சி.எஸ்.ஐ.எஸ் அதிகாரிகளான ஆபிரகாம் லிங்காவுக்கும் சார்ள்ஸ் புரூேன்சனுக்கும் குஞ்சரி தனது நன்றிகளைத் தெரிவிக்கிறது.

### புலிகளின் நிலைப்பாடு

ஒப்பரேஷன் சூரியக்கதிர் நடவடிக்கை முடிவடைந்த பின்னர் தாங்கள் எடுக்கப் போகும் புதிய நடவடிக்கை பற்றி இன்னும் புலிகளோ திலகரோ அறிவிக்கவில்லை. சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல இது பற்றிய விபரங்களை உங்களுக்குத் தருவோம்.

*மரண அறிவித்தல்*

## மஞ்சரி காலமானார்

இவர் காலம்சென்றமொன்ரூன், ஒன்ராறியோ செந்தாமரையின் அன்புச் சகோதரரும் செந்தாமரையின் முன்னாள் பங்காளியும் சூரியன், உலகத்தமிழர், ஈழநாடு ஆகியோரின் ஜென்மப் பகையாளியும் பொதிகையின் ஆத்மார்த்த நண்பருமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் உலகத்தமிழர் தலைமையில் நடத்தப்பட்டு வருகிறது.

*அன்பார்ந்த தமிழ்நெஞ்சங்களே..*

*எத்தனையோ இடர்களுக்கு இடையே உங்களைச் சந்திக்கிறேன். பல்வேறு துறைகளில் அனுபவம் கொண்ட என்னைப் போன்ற தலை சிறந்த மாபெரும் பத்திரிகையாளனுக்கு கிடைக்க வேண்டிய கௌரவம் கேட்டுப் பெற வேண்டியதில்லை.*

*ஆனால் அதையாரும் தராவிட்டால் கேட்பேன்.*

*சமீப காலமாகவே குஞ்சரியை வினியோகிக்க வேண்டாம் என்று அன்பு நெஞ்சங்கள் சில கடுமையாக வேண்டுகோள் விடுகின்றன. அது தவறு. அதை இப்போது தான் உணர்கிறேன். எனவே தடை போடுபவர்களுக்கு தடையாக இருப்பதை விட நானே எனக்கு தடை போட்டுக் கொள்கிறேன். அது தான் பத்திரிகா தர்மம்.*

*மக்கள் நீதிமன்றத்தில் நல்ல தீர்ப்புக் கிட்டட்டும். மக்கள் திருந்தினால் மட்டுமே நான் மீண்டும் வருவேன்.*

*இல்லாவிட்டால் மக்கள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும். ஏனென்றால் நான் ஒரு அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளர். அனுபவம் வாய்த்த பத்திரிகையாளர்.*

*மேலிடத்திற்கு எல்லாம் மேலிடத்தை இதற்காக குறை கூற மாட்டேன். மேலிடம் கருத்துச் சுதந்திரத்திற்கு மறுப்புச் சொன்னது கிடையாது. வாராது வந்த அந்த மாமணியைத் தோற்போமா?*

*ஆனால் தலையில்லாமல் வால் ஆடாது என்பதும் எனக்குத் தெரியும். அதற்காக தலையை வெட்டி எறிய முடியுமா?*

# அறிவித்தல்

## குஞ்சரியை விற்கும் கடைக்காரர்களை யாராவது மிரட்டினால் அவர்கள் மேலிடத்தினால் கவனிக்கப்படுவார்கள்.

## மேலிடத்தின் நடவடிக்கைகள் நமது நடவடிக்கைகள் அல்ல!

## புலம்+ சலம் + குலம்- தமிழர்

### பாக்குவெட்டி அறிவுக்கந்தராசா

அறுந்தது போ!

சுப்பிரமணியத்தின் குஞ்சியப்புவுக்கு பாட்டனுக்கும் எனக்கும் என்ன உறவு..

இதையே இத்தாலியப் பாசையில il mafia roma ca vie sofia xyz என்று சொல்வார்கள். ஊ ஊ ஊ ஊய்.

நேற்று ஹவிதை எழுதும்போது ஹா என்றேன். அது படுமோசமாக இருந்தது என்று பிளுத்தியவனே.. ஆத்மார்த்தா.. வா.. சுடுகிறேன்.. டேய்.. ஓய்.. கிர்.. புர். . புர்..

அறுந்தோ அறுந்தது போ!

இவ்விடை இது புரியாதா?

தமிழனுக்கு சுதந்திரத்தை தூக்கிப் போடு. அவன் ரஷிக்கும் போது பறி. மூளையிருக்கும் போது முட்டாளாகி விட்ட உனக்கு என்ன மச்சி.. அய் சரி.. அய் சரி..

சந்திரிகாவுக்கு ஆதரவு தர வெளிக்கிடுபவர்கள் நட்டாமுட்டித்தனம் பண்ணுகிறவர்கள், பிளுத்துபவர்கள். .. மக்கள் ரொம்ப ரொம்ப சோர்ந்து போய் விட்டுமாய்மாலம் செய்கிறவர்கள் மண்டைக்குள் மூளை கிடையாது என்ற பூவிநிசு கொழுத்தும் புத்தி சாலிகள்..ஏழை ஆள ஆளை ஆள என்ன சிரைத்து விட்டார்கள்?

ஒண்டு, ரெண்டு, மூண்டு என்று எண்ணிக் கொண்டே படு.. எழும்பு.. மகோன்னதமான வாழ்வு.

என்ன ஓய்.. ஏதாவது புரிகிறதா.?

புரியாட்டி என்ன கிழிஞ்சது.. பேனு மை இருக்கும் வரை எழுதிக்கொண்டேய்... டேய்.. டேய்.. இருப்பேனு.. பேனு.

நாசமாய் போக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரியன்

## சூரியக்கதிர் 2 நடைபெறுகிறது.

பிந்திக்கிடைத்த செய்திகளின்படி ஒப்பரேஷன் சூரியக்கதிர் 2 நடைபெற்றுக் கொண்டிருப்பதாக கொழும்பில் உள்ள நமது செய்தியாளர் தெரிவிக்கிறார். சூரியக்கதிர் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து விடுதலைப்புலிகள் தமது கடும் எதிர்ப்பை தெரிவித்து விட்டார்கள். இது பற்றி திலகர் விடுத்த அறிக்கை இச்செய்திகள் அச்சுக்குப் போகும் வரை ஆரியன் ஆசிரிய பீடத்திற்கு கிடைக்கவில்லை.

### சூரியனின் மரணத்தில் மர்மம்

சமீபத்தில் திடீர் மரணமடைந்த சூரியனின் திடீர் மரணத்தில் பெரும் மர்மம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. சூரியன் பல காலமாகவே நோய் வாய்ப்பட்டிருப்பதாக பலத்த ஊகங்கள் தெரிவிக்கப்பட்ட போதும் அவர் தேக ஆரோக்கியம் உடையவராகவே தன்னைக் காட்டி வந்தார். அப்பேர்ப்பட்டவரின் திடீர் மரணம் இது ஒரு கொலையோ என சந்தேகிக்க வைக்கிறது.

### சூரியனின் தற்கொலைக்கு அனுதாபம்

சூரியனின் தற்கொலைக்கு கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவர் திரு. மா.வளவன் அனுதாபச்செய்தி ஒன்றை விடுத்துள்ளார். அச்செய்தியில் சூரியன் எனக்காற்றிய சேவை மிகப் பெரியது என்று தன்னைப் பாராட்டியுள்ளார்.

### மரண அறிவித்தல்

கனடா ரொறன்ரோவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.சூரியன் அவர்கள் அகால மரணமானார். இவர் காலம் சென்ற செங்கதிரின் சகோதரரும் உதயனின் அன்புத் தந்தையாரும் புன்னகையின் மைத்துனும் வீணைக்கொடியின் தூரத்து உறவினரும் தமிழர் மத்தியில் ஒன்றாறியோ செந்தாமரை, மஞ்சரி ஆகியோரின் ஜென்மப் பகையாளியும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் எங்கே நடைபெறும் என்று சொல்லும் எண்ணம் நிச்சயமாக எங்களுக்கு இல்லை. வேறு தளங்களில் சந்திக்கும் போது சொல்வோம்.

இப்படிக்கு

*சூரியனின் பெற்றோரும் பாதுகாவலரும்*

### இவ்வார வானொலி

**கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**

24 மணி நேர வானொலி எப்.எம். சிறப்பலை வரிசை

நிகழ்ச்சிகள்: ஷ்... ர்... ப்ர்.. ங்... ஞ்.. ஙீ.. ப்ர்..

**கீதவாணி:**

நிகழ்ச்சிகள்: நடா ராஜ்குமார் அவர்களின் சுயசரிதை

**தமிழ்ச்சோலை**

சிறப்புரை: கி.வீரமணி

தலைப்பு: தமிழ் மக்களுக்கு பலத்த அழிவைத் தர இருப்பது சூரியக்கதிர் 7 அல்லது சூரியக்கதிர் 8?

### சூரியனின் மறைவு தமிழர் மத்தியில் மகிழ்ச்சி

சூரியன் மறைவினால் தமிழர் மத்தியில் பலத்த மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகிறது. சூரியனின் மறைவைக் கொண்டாட பந்தா பப்ளிக்கேஷன் ஒரு விருந்து தயார் பண்ணியதாக நம்பத்தகாத வட்டாரங்கள் தெரிவித்தன. இம்மகிழ்ச்சியை அறிந்த தமிழன் வழிகாட்டி சூரியனின் மறைவிடத்தை நோக்கி புறப்பட்டிருக்கிறார்.

### நம் நாட்டில் விலையுயர்வு

சூரியனின் திடீர் மறைவு நம் நாட்டில் பெரிய மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது. பொருளாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டு நம் நாட்டின் விலை விகிதம் ஒரு டாலரால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இது தமிழீழப் போராட்டத்திற்கு நான் செய்யும் சிறப்புச் சேவை என்று திரு.பு.தீயபாரதி தெரிவிக்கிறார்.

### சூரியனின் மரணத்துக்கும் எமக்கும் சம்பந்தமில்லை.

*உலகத்தமிழர் இயக்கம் அறிக்கை*

கனடாவில் எவர் மரணம் அடைந்தாலும் உடனடியாக எம் மீது மக்கள் சந்தேகம் கொள்வது இயற்கையே. ஆனால் இம்முறை மட்டும் தயவு செய்து எம் மீது சந்தேகம் கொள்ள வேண்டாம். சூரியனின் வாழ்வோ, சாவோ எம்மையும் எமது இலவசப் பத்திரிகையையும் என்றும் பாதித்தது கிடையாது.

*தமிழரின் தாயகம் தமிழீழ தாயகம்*

*சதிராட்டம்*

### குற்றம் புரிந்தவன்

இன்றைய காலங்களில் முழுக்கனடாவுக்கும் பெருமை தருவது தமிழ்ப் பத்திரிகைத் துறையே. இப்பத்திரிகைத் துறையில் தமிழர்கள் மட்டுமே ஈடுபட்டதால் பெரும் புகழ் பெற்றார்கள்.

தற்போதைய போராட்டச் சூழலில் இத்துறை நலிவு பெற்று வருகிறது. இதற்கு காரணமாக இங்கு தன்னை அனுபவமிக்க பத்திரிகையாளர் என்று தெரிவிக்கும் ஒருவரைக் குறிப்பிடலாம்.

அவர் தனது பத்திரிகையை தானாகவே நிறுத்தியதற்கு நாட்டில் தொடர்ந்து நின்று போராடும் ஒரு போராளி அமைப்பை குற்றம் சாட்டுவது போல தெரிகிறது. இவ்வாறு செய்வது நேர்மையற்ற செயல் என்பது எமது கருத்து. இதை இங்குள்ள பலம் வாய்ந்த அமைப்பு ஒன்றும் பாராட்டும் என்பது துணிபு.

*ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடி அது கேட்கின்!

## பாலசுந்தரன்

கொடிகள் பலவிதம். இடத்திற்கிடம் இதன் அர்த்தம் மாறுபடும். உதாரணமாக 'ஒடு' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம்.

ஆமி....ஒடு என்றால் ஒரு அர்த்தம் இங்கு இது வினைப்பெயர் ஆகுகிறது. யாரும் நின்று இது வினைப்பெயரா அல்லது பொருள் பெயரா என வினாவப்போவது இல்லை. அகப்பட்ட திசையில் ஒடிவிடுவார்கள். சிலவேளைகளில் இது ஆமி வந்துக்கொண்டிருக்கும் திசையாகவும் இருக்கும்.

ஓட்டிசுட்டான் ஒடு என்றால் எல்லாருக்கும் எந்த ஒரு ஓடு என்று தெரியும். (ஒட்டிசுட்டானை, இவ்விடம் இராணுவ கட்டுப்பாட்டில் வந்தபோது, ஓடுசுட்டான் என்று ஆமி அழைத்தது. அதாவது ஒடு சுடுபவன் என்று அர்த்தம் அல்ல, ஓடவிட்டு சுடுபவன் என்று பதம்.)

---

நாம் 'ஒடு' ஐ மறந்து 'கொடி' க்கு வருகிறோம்.

'என்னடியாத்தை .....காசு எங்காலன்? என்று ஒருத்தி கேட்க 'கொடி வைச்சு' என்பாள் மற்றவள்.

இந்தக் கொடியே மிக முக்கியமானது. இது ஒரு காலத்தில் அடையாள சின்னமாக இருந்தது. ஆனால் இது இன்று பொருளாதார சின்னமாக மாறிவிட்டது. ஒரு இரவில், ஒரு போத்தல் சாராயத்தில் தன்னை தொலைத்து தனக்கு விருப்பமில்லாத பெண்ணுக்கு கொடி கட்டியவரும் உண்டு. தன்னை விரும்பாதவளை கடத்திக் கொண்டு சென்று கொடி கட்டியவரும் உண்டு. இப்படி ஒரு சம்பவம் ரொரன்ரோவில் நடந்தபோது, நம்ம சமுதாய தலைவர், இது நம்ம கலாச்சாரம் என்ற மாதிரி கூறியதும் உண்டு. இங்கு கொடி ஒருவரின் வெற்றியை மட்டும் பிரதிபலிக்கும், மற்றவருக்கு படுதோல்வி. எது எப்படியோ அர்த்தமுள்ள கொடி பறவா கழுத்து பாழ்.

---

இரண்டாவது கொடி கொஞ்சம் சுவாரிசயமானது. இந்த கொடியின் பதத்தை சந்தையிலே அறியலாம்.

'ஏனாக்கும் இவ்வளவு மீன்' என்று கேட்க,

"நாளைக்கு பிள்ளையார் கொடி" என்பார் மற்றவர்.

இந்து சமயத்தின் அடி உறுதியில் எழுதிய சட்டம் 'கொடி ஏறிய காலத்தில் மாமிசம் உண்ணக்கூடாது' என்று இதுவும் ஏதோ Income tax காரர்களுக்கு வரிகட்டாமல் விடுவதற்கு வழி பார்ப்பது போல் கொடி ஏறிய காலத்தில் மீன் உண்ண முடியாது என்பதால் திருவிழா காலத்திற்கு முதல் நாளும் அடுத்த நாளும் மீன் கறி மயம். மீன் பொரியல், மீன் குழம்பு, மீன் தீயல் (சில இடங்களில் இது பால்கறி..... இங்கே கொடி ஒரு மீறமுடியாத சட்டம் ஆகிறது.

எது எப்படியோ அர்த்தமுள்ள கொடி பறவா கோவில் பாழ்.

---

மூன்றாவது 'கொடி' குறிப்பிட்ட காலத்திற்குரியது 'இராக்கொடி விடப்போறன்' என்றால் இவர் தனது பட்டத்தை இரவு முழுவதும் பறக்கவிடப்போகிறார் என்று பதம். ஆனால் எல்லாரினது கொடியும் பறப்பதற்கில்லை. சிலர் கொடியை இழுத்துக் கொண்டு, திரும்பிப் பாராமல் ஓடுவர். அவர்களின் நினைப்பில் கொடி உச்சியில் பறந்து கொண்டிருக்கும். ஆனால் உண்மையில் அது வீதியில் அல்லது ஒழுங்கையில் இழுபட்டுக் கொண்டிருக்கும். சில வேளைகளில் நின்று திரும்பிப் பார்ப்பார். நின்றபடியால் தான் கொடி விழுந்துவிட்டது என்று கருதி மீண்டும் ஓடுவார். உண்மை புரியும் போது மனம் வெதும்ப பறந்து கொண்டிருக்கும் மற்றவர் கொடியை உற்று நோக்குபவர்.

எது எப்படியோ, சிலர் ஒரு மாற்றுவழி கையாள்வர். ஒரு கல்லை நூலின் நுனியில் கட்டி, உயரமான மரத்தை நோக்கி ஏறிவர், அந்த கல் மரத்தில் சிக்கியவுடன் அடி நூலை யன்னலில் கட்டிவிடுவர், இரவில் அவ்வப்போது வந்து இழுத்துப்பார்ப்பார். பட்டம் பலத்த இழுவையோடு பறப்பதாக கனவு கண்டு மகிழ்வார்.

எது எப்படியோ அர்த்தமுள்ள கொடிபறவா மனிதன் பொங்கல் பாழ்.

---

'கொடியில் பிடுங்கியாடா' என்பதில் உள்ள கொடிக்கு இன்னொரு அர்த்தம். சிலருக்கு உடன் மரக்கறியில் அலாதி விருப்பம். வாடிய மரக்கறி பிடிக்காது. இதில் ஒன்றும் தப்பில்லை கொடியை நட்டு நீருற்றி வளர்த்து பின் காய்கறியை பிடுங்கி பயன்படுத்தலாம். ஆனால் சிலரின் 'கொடியில் பிடுங்கியாடா" இன் அர்த்தம் வேறு. மற்றவனின் தோட்டத்தில் உள்ள கொடியிலை பிடுங்கி வா என்பதே அதன் அர்த்தம். இது பின் கைகலப்பில் முடியும். சிலர் கொடியை சுற்றி வேலி போடுவர். பூசனிக்கொடிக்கு இரவில் காவல் புரிவர்.

எது எப்படியே மற்றவன் கொடியில் பிடுங்கும் ஊரில் நியாயம் பாழ்.

---

'கொடியிலை போடு' என்றால் காயப்போடு என்பது பதம். கொடியில் (அதிகளவு மேற்பரப்பு இருப்பதால் அதிகளவு நீராவியை காற்று அடித்து செல்லும்.) கொடியில் காயப் போடுதல் மிக விரைவில் காய வைக்கலாம். சிலர் அவசர அவசரமாக இரவில் தோய்ப்பார்கள் இந்த உடையே மறுநாள் பாடசாலைக்கு (அல்லது மற்றும் இடங்கட்கு) அணியப்படப் போவதாக இருக்கும். சிலர் இந்த ஒன்றையே நம்பி இருப்பார். இரவில் தோய்த்து காயப் போட்டுவிட்டு நிம்மதியாக இருப்பர். சிலவேளைகளில் இன்னொருவர் முதலாமவரின் உடைகளை கொடியால் எடுத்து ஒரு தடியில் போட்டுவிட்டு தமது உடைகளை கொடியில் காயவிடுவர். முதலாமவரின் உடை மறுநாளுக்குள் காயமாட்டாது.

அதாவது உடை காய கொடியில்லாதவன் மறுநாள் பாடசாலை பாழ்.

---

இன்னுமொரு கொடி மிக முக்கியமானது ஆனால் அதுபற்றி எனக்கு எதுவும் ஆழமாக தெரியாது. ஒரு தொப்புள் மட்டும் மிச்சம்.

இப்படியாக கொடிகள் பலவிதம் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக்கொண்டே போகலாம். முடிவே கிடையாது.

உண்மையில் இங்கு சொல்ல வந்த கொடி இன்னொன்று. இலங்கை தீவில் உள்ள ஸ்ரீலங்கா என்ற நாட்டின் தேசியக்கொடி இலங்கை தீவில் உள்ள தமிழீழம் என்ற மற்ற நாட்டின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் பறக்குதாமே? (உபயம்: உலகத்தமிழர்)

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரத்தில் தொடங்கி விவகாரத்தில் முடிந்த

# மஞ்சரியின் அஸ்தமனம்

கனடாத் தமிழர்களின் நல்ல காலமோ, கஷ்ட காலமோ இரண்டு செய்திப் பத்திரிகைகள் நிறுத்தப்பட்டு விட்டன. மஞ்சரியும் சூரியனும் ஓரிரு வாரங்களுக்குள்ளேயே அடுத்தடுத்து ஜீவனை விட்டிருக்கின்றன. இதில் சூரியன் நிறுத்தப்பட்டது, அரசியல் சார்ந்த தமிழ் சமூகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதத் தேவையில்லை. மேலும் வியாபார நோக்கம் ஒன்றையே முதன்மையாகக் கொண்டு 'வியாபாரிகளால்' தமிழர் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட சூரியன் பத்திரிகை இலவசம் என்ற வகையிலேயே மக்களிடம் சென்றடைந்தது. இலவசப் பத்திரிகை என்ற வகையில் அரசியல் கருத்துக்களை தவிர்த்து புலிகளின் மனம் புண்படாத வகையில் செய்திகளை வெளியிடும் பாணியைக் கையாண்ட சூரியன் பற்றி எதுவும் இங்கு குறிப்பிடத் தேவையில்லை.

ஆனால் மஞ்சரியோ ஈழ அரசியலை முதன்மைப்படுத்திய போதும், ஆரம்பம் முதலே புலி ஆதரவாளர்களைக் குஷிப்படுத்தவும் சாதாரண மக்களுக்கு புலிகள்தான் நம்பிக்கை நட்சத்திரம் என்ற மாயையை ஏற்படுத்தவும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது. பத்திரிகைத் துறையில் ஏற்கனவே பணியாற்றிய டி.பி. எஸ்ஸை ஆசிரியராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மஞ்சரி புலிகளுக்கு முண்டு கொடுப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்ததை அனைவரும் அறிவார்கள். கடைசியில் புலிகளின் கையாலேயே மஞ்சரிக்கு மூடு விழா நடத்தப்பட்டதுதான் வரலாற்றுச் சோகம்.

மஞசரியின ஆரமபமே அரசயல கோடபாடுகளின அடிப்படையில் ஆனதல்ல. செந்தாமரை பத்திரிகையின் பங்காளர்களுக்கு இடையில் ஏற்பட்ட பண அடிப்படையிலான சண்டையினால், ஏற்கனவே திட்டமிடப்பட்டு சகோதரப் பத்திரிகையாக நடாத்தப்பட்ட மஞ்சரி, சுதந்திரம் பெற்று தனியாக வெளிவந்ததே தவிர, எந்த வித நியாயமான கோட்பாடுகளின் அடிப்படையிலும் ஆரம்பிக்கப்படவில்லை. பணவருவாயை நோக்கமாகக் கொண்டு மஞ்சரி விளம்பரங்களை அதிகளவில் பெற்று 'வெற்றிகரமான' ஒரு பத்திரிகையை நடாத்திக் காட்டுவதிலேயே உன்னிப்பாக இருந்தது. அத்துடன் வினியோகம், விற்பனை என்பவற்றை கருத்தில் கொண்டு பல செய்திகளுக்கு புலி ஆதரவு முலாம் பூசி திரிபு செய்த நிலையில் பிரசுரித்ததும் வாசகர்கள் கண்ட உண்மை. இவ்வகையில் மஞ்சரி ஆசிரியரின் போக்கானது தனக்கு இருந்த முன்னாள் பத்திரிகை அனுபவத்தை அதிகளவில் காசாக்குவதிலேயே முனைப்பெடுத்திருந்தது. வியாபார நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட மஞ்சரி இறுதியில் வியாபார நோக்கத்தைக் காரணம் காட்டியே மூடப்பட்டது.

இந்நிலையில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது. மஞ்சரி ஆசிரியரின் ஆங்கில எழுத்தாற்றல் அபாரமானது. சொல்ல வந்த செய்தியை, மிகத் தெளிவாகவும் இலகுவாகவும் அதே சமயம் நல்ல சொற்பதப் பிரயோகத்துடன் ஆங்கிலத்தில் எழுதும் திறன் அவருக்கு உண்டு. ஆனால் தமிழில் அவரது பத்திரிகை எழுத்தாற்றல் பல இடங்களில் நகைப்புக்கிடமானதாகவே தென்பட்டிருக்கிறது. பல செய்திகளை தமிழில் எழுதும் போது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்றே அவரது கட்டுரைகள் எழுதப்பட்டன. தன்னை புத்திசாலியாகவும் படிப்பவர்கள் முழு முட்டாள்கள் என்றும் கருதிக் கொண்டே இவர் தமிழில் எழுதுவதாகவே படுகிறது. இது பலதரப்பட்ட வாசகர்கள் மத்தியிலும் மஞ்சரி சார்பாக ஒரு நம்பிக்கையீனத்தை தொடர்ந்து உருவாக்கி வந்தது.

தமக்கிருந்த முன்னாள் தொடர்புகள் மூலம் மஞ்சரி ஆசிரியர் மற்ற தொடர்பு சாதனங்களுக்கு கிடைக்காத செய்திகளை முந்திக் கொண்டு பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். இந்த வாய்ப்புகள் அவரால் சரி வர உபயோகிக்கப்பட்டதா என்றால் இல்லை என்பதே பதில். புலிகளுக்கு பாதகமான பல செய்திகள் ஆரம்ப காலத்தில் இவரால் மறைக்கப்பட்டன. பல செய்திகள் பிரபாகரனின் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் வகையிலேயே தமிழில் இவரால் எழுதப்பட்டன. ஈற்றில் புலிகளாலேயே இவருக்கு துரோகி பட்டம் வழஙகபபடடு இவரது பததிரிகை தடை செய்யப்பட்டுவிட்டது. மஞ்சரியின் இறுதி இதழ் ஏப்ரல் முட்டாள்கள் தினத்தன்று வெளிவந்ததுடன் 'ஒரு சகாப்தம்' முடிவுற்றது.

தனது இறுதி மஞ்சரி இதழில் 'கனடாவில் புலி ஆதரவுப் பத்திரிகையான உலகத்தமிழரும் புலி எதிர்ப்புப் பத்திரிகையான தாயகமும் வெளிவந்த நிலையில், பக்கம் சாராது நடுநிலையாக இருந்து நடக்கும் உண்மைகளை எழுதவே கனடாப் பத்திரிகைத் துறையில் நுழைந்ததாக' கூறப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு தூரம் உண்மை?

89ம் ஆண்டு தாயகம் வெளிவந்த காலகட்டத்தில் கனடியத் தமிழ்ச் சமூகத்திலிடையே ஒரு அரசியல் சார்ந்த விழிப்புணர்வு ஏற்பட ஆரம்பித்தது என்பது மறுக்க முடியாதது. இந்த விழிப்புணர்வை மழுங்கடிக்கும் ஒரே நோக்கத்துடன் தாயகம் பத்திரிகைக்கு எதிராக உலகத்தமிழர் பத்திரிகையை ஒழுங்காக வெளிக்கொணர வேண்டிய தேவை புலிகளுக்கு ஏற்பட்டது. இதற்கான

**வணங்காமுடி - பொய்யாமொழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளின் தேடலில் அகப்பட்டவரே டி.பி.எஸ் அவர்கள். மக்களிடையே தாயகத்திற்கு ஏற்பட்டு வரும் செல்வாக்கினை உடைக்கவும் புலிகளின் ஆதரவுப் பிரசாரத்தை பலப்படுத்தவும் என்ற திட்டத்துடனேயே இவர் கனடியப் பத்திரிகை உலகுக்கு புலிகளால் அறிமுகப்படுத்தப்பட்டார்.

நாளடைவில் ஏற்கனவே இவருக்கு அறிமுகமாகியிருந்த செந்தாமரை பத்திரிகை ஸ்தாபகரின் தூண்டுதலின் பேரில் தனியான பத்திரிகை ஒன்றை வியாபார நோக்கிலும் அதே சமயம் புலிகளுக்கு ஆதரவாயும் நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் இவர் செந்தாமரைக்கு ஆசிரியரானாரே அன்றி, ஒரு நடுநிலைப் பத்திரிகையை நடத்த வேண்டும் என்பதற்காக அல்ல. உதாரணத்திற்கு இவரது முதல் பத்திரிகையின் தலையங்கமே 'கேட்டையில் பிறந்த பிரபாகரன் கோட்டையைப் பிடிப்பார்' என்பதுதான். மொத்தத்தில் செந்தாமரையில் இவர் செய்ததெல்லாம் புலி ஆதரவுப் பிரசாரமும் தாயகத்தின் புலிகள் மீதான விமர்சனங்களுக்கு பதில் அளிப்பதுமே என்பது செந்தாமரை பழைய இதழ்களைப் பார்ப்பவர்களுக்கு நன்கு புரியும். அந்த இதழ்கள் எதிலும் இவர் நடுநிலையாக எழுதியதை பார்க்கவே முடியாது. இதன் அடிப்படை நோக்கமெல்லாம் பணம் சம்பாதிப்பதே. ஏனெனில் உண்மையில் புலி ஆதரவுப் பிரசாரம் தான் நோக்கமாக இருந்தால் அதை உலகத்தமிழர் பத்திரிகையிலேயே திறம்படச் செய்திருக்க முடியும்.

இந்த நிலையில்தான் கிட்டு தற்கொலை செய்த சம்பவம் நடந்தது. அதைத் தொடர்ந்த காலப் பகுதியில் சேரன் தன் நினைவுகளைச் செந்தாமரையில் எழுதினார். அக்கட்டுரை ஒன்றில் கிட்டு பற்றியும் குறிப்பிட்டு எழுதியிருந்தார். அதனால் ஆத்திரமுற்ற புலிகளின் வெறிக்கும்பலில் ஒரு பகுதியே மஞ்சரி ஆசிரியரைத் தாக்கிய அநாகரிக சம்பவத்தை நிகழ்த்தி விட்டுப் போனது. தன் மீது தாக்குதல் நடந்த காலப் பகுதியில் மஞ்சரி ஆசிரியர் புலிகளுக்கு எதிரான எந்தக் கருத்தையும் தாமாக தெரிவிக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதே சமயம் சேரனின் கட்டுரையின் இறுதியில் 'சேரனின் கருத்துக்கள் செந்தாமரையின் கருத்துக்கள் அல்ல' என்று முன்னெச்சரிக்கை குறிப்புக்கள் போட்டும் அவை பலனளிக்கவில்லை என்பது துரதிஷ்டமே.

பல இடங்களில் இவர் புலிகளுக்கு பாதகமான செய்திகளை இவர் வெளியிட்டதாக பரவலாக தெரிவிக்கப்பட்ட போதும் உண்மையில் அச்செய்திகளை எழுதும்போது புலிகளை நியாயப்படுத்த இவர் பகீரதப்பிரயத்தனம் செய்து கேலிக்கூத்து ஆகியதற்கு பல்வேறு உதாரணங்கள் உண்டு. தன்மீது தாக்குதல் நடைபெற்ற பின்பும் கூட தமிழில் இவர் எழுதிய கட்டுரைகளில் அதை நடாத்தியவர்கள் புலிகள்தான் என்பதை சொல்வதிலிருந்து நழுவியிருக்கிறார். அதே போல, இளையபாரதி மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவத்தின் பின், புலிகளை காப்பாற்ற இவர் முண்டியடித்துக் கொண்டு 25 கேள்விகள் கேட்டு புலிகளின் குற்றச் செயலை மூடி மறைக்க கடும் பிரயத்தனம் செய்திருக்கிறார். இவ்வாறாக இவரது பல நடவடிக்கைகள் உண்மையான நடுநிலைப் பத்திரிகையாளர் மனம் வேதனைப்படும் அளவிற்கு நடாத்தப்பட்டது சுலபத்தில் மறந்து விடக் கூடியது அல்ல.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் எழுதப்பட்டதே மாத்தயா விசாரணை விவகாரங்கள்! மாத்தயாவிற்கு எதிரான பிரபாகரனின் நடவடிக்கை மஞ்சரி ஆசிரியராலேயே வெளிக்கொணரப்பட்டது என்பது உண்மை. மாத்தயா மரண தண்டனைக்கு உட்படுத்தப்படாத நிலையில் வெறும் கைது என்ற கால கட்டத்தில் இச்செய்தி முதன் முதலாக மஞ்சரியால் பிரசுரிக்கப்பட்டது. புலிகளால் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இச்செய்தி, வேறெங்கும் பிரசுரிக்கப்படாத நிலையில் கனடாவிலேயே முதன் முதலாக மஞ்சரி ஆசிரியரால் வெளிக்கொணர முடிந்தது என்றால் அதற்கு புலிகளுக்கு எதிரான 'துரோகி' ஒருவர் செய்தி கொடுத்ததாலேயே அது சாத்தியமாகி இருக்க வேண்டும். எனவே 'துரோகி' கொடுத்த செய்தியின் அடிப்படையில் மாத்தயா விவகாரம் இவரால் பெரிதாக்கப்பட்டு இந்திய, இலங்கைப் பத்திரிகைகள் அதை பெரும் முக்கியத்துவத்துடனும் ஆரவாரத்துடனும் வெளியிட்டன. நிலைமை மறைக்க முடியாத அளவுக்கு ஈழத்திலும் வெளிநாடுகளிலும் பெரிதாகிய நிலையில் மாத்தயா ஆதரவாளர்களின் எதிர்ப்புக்கு அஞ்சி புலிகளும் தமது வழமையான மௌனத்தை உடைத்து மாத்தயா துரோகி என்று 'நிருபித்து' மாத்தயாவிற்கு எதிரான நடவடிக்கையை நியாயப்படுத்தினர். ஈற்றில் மாத்தயா இரகசியமாக எங்கோ கொல்லப்பட்டதுடன் மாத்தயாவின் 'கதை'யே முடிந்தது. ஒருவகையில் பார்த்தால் மாத்தயாவின் மரணத்திற்கு முதல் கொள்ளி எடுத்து வைத்தது மஞ்சரியே என்று கருதவும் இடமுண்டு.

மாத்தயா விவகாரம்தான் இவர் உள்ளூர் புலிகளை முற்றுமுழுதாக பகைப்பதற்கான காரணமாய் அமைந்தது. புலிகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாத்தயாவை துரோகி என்று கூறி தண்டிப்பதா என்ற கேள்வி புலி ஆதரவாளர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி கிணறு வெட்டப் பூதம் வெளிப்பட்ட கதையானது. இதனால் ஏற்பட்ட பிரபாகரன் மீதான எதிர்ப்பு அலையைத் தணிப்பதற்காக 'தலைவர் ஜனநாயக ரீதியில் எல்லாருடைய கருத்துக்களையும் கேட்டறிந்த பின்னர் தான் மாத்தயாவின் முடிவு பற்றி தீர்மானிப்பார்' 'தலைவரும் மாத்தயாவும் கட்டித் தழுவி கண்ணீர் விட்டனர்' என்றெல்லாம் செய்தி மஞ்சரியில் வெளியிடப்பட்டது. கடைசியில் நடந்தது என்ன? மாத்தயா பிரபாகரனால் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார். இவ்வாறாக மாத்தயா ஆதரவாளர்களின் எதிர்ப்பையும் சம்பாதித்து பிரபாகரன் ஆதரவாளர்களின் கோபத்துக்கும் உள்ளாகும் நிலை உருவாகி, திலகராலேயே துரோகி என்றழைக்கப்படும் நிலைக்கு மஞ்சரி ஆசிரியர் வந்து சேர்ந்தார்.

இவரது பத்திரிகையியல் போக்கை ஒட்டுமொத்தமாக அவதானிக்கும் போது ஒரு விடயம் புலனாகும். இவரது எழுத்து என்றுமே நிலையான கொள்கை சார்ந்ததல்ல, மாறாக தான் எழுதுகின்ற பத்திரிகையின் பெரும்பான்மை வாசகர்களுக்கு தீனி போடுவது மட்டுமன்றி, அந்த வாசகர்களின் கோபத்துக்கு ஆளாகத வகையில் தந்திரமாக தப்பிக் கொள்ளும் போக்குடனே மஞ்சரி ஆசிரியர் தன் எழுத்தாற்றலைப் பயன்படுத்துவதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இது ராஜீவ் கொலையின் போது இந்து பத்திரிகையில் எழுதியது முதல் இன்று இறுதி மஞ்சரி இதழ் வரை நீடிக்கிறது.

உதாரணமாக தான் தாக்கப்பட்ட போது தமிழ் வாசகர்களுக்கு எழுதும்போது புலிகளைக் குற்றம் சாட்டாத வகையில் கனடாவில் எழுதிக் கொண்டு, தமிழ் ரைம்ஸ் சஞ்சிகைக்கு கொடுத்த தகவலின் போது தன் மீது தாக்குதல் நடத்தியவர்கள் பற்றிய முழு விபரங்களேயும் வழங்கியிருந்தார். ராஜீவ் கொலையின் போதும் இந்து பத்திரிகையில் எழுதியதற்கும் தனது பத்திரிகையில் எழுதியதற்கும் நிறையவே முரண்பாடுகள் இருந்தன. மாத்தயா விவகாரத்தின் போதும் ஐலண்ட் பத்திரிகையில் எழுதியதற்கும் இங்கே எழுதியதற்கும் முரண்பாடுகள் இருந்தன. தற்போது மஞ்சரி தடையின் போதும் சம்பந்தப்பட்டவர்களின் பெயர் கொழும்புப் பத்திரிகைகளில் வருமாறு பார்த்துக் கொண்டார். ஆகவே எந்த தளத்தில் இருந்து எழுதுகிறரோ, அதற்கு தகுந்தபடி தன் கருத்துக்களை மாற்றிக் கொள்ளும் சந்தர்ப்பவாதப் போக்கு பல முறை வெளிக் கொணரப்பட்டிருக்கிறது.

ஏன்? சமீபத்தில் வெளிவந்த மஞ்சரி இறுதி இதழிலும் ஆங்கிலத்தில் குறிப்பிட்டுள்ள பல விடயங்கள் தமிழில் குறிப்பிடப்படவே இல்லை. புலிகளுக்கு சர்வதேச அரங்கில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதும் புலிகளின் உண்மையான குற்றங்களைக் கூறுவதுமான பல விபரங்கள் தமிழில் மறைக்கப்பட்டிருக்கின்றன. இதன் நோக்கம் தமிழ் மட்டுமே வாசிக்கத் தெரிந்த புலி ஆதரவாளர்களின் கடுங்கோபத்திற்கு ஆளாகாமல் தந்திரமாக தப்பித்துக் கொள்வதே. திலகர் தன்னை துரோகி என்று குற்றம் சாட்டியது, உமா மகேஸ்வரன், ஜோர்ஜ், மாதகல் கண்ணன் ஆகியோர் தன்னை புலிகளுக்கு ஆதரவாக செய்தி வெளியிடும்படி மிரட்டியது, பத்திரிகையை தடை செய்த கும்பலின் பெயர், மொன்றியல் புலிப் பிரமுகர் மரியதாஸ் ஈழம் சென்று வந்து பிரபாகரனின் எச்சரிக்கையைச் சொன்னது போன்ற பல விடயங்கள் தமிழ் வாசகர்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது.

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வுத்திட்டம் பற்றிய இவரது கருத்தைப் பார்ப்போம். "The advent of Chandrika on the Sri lankan political horizon brought about a positive change. Many tamils including myself felt that a negotiated settlement to the ethnic question was on the cards. Earlier we felt that war had been thrust upon the tamils. I urged that the LTTE should grasp the hand of friendship extended by her firmly and resolve the problem through dialogue and discussion. These sentiments were endorsed by a vast majority of our readers. Pro tiger elements however did not like these views. This in turn made me realise belatedly perhaps that one had to distinguish a distinct difference between tiger and tamil interests....

....LTTE broke the ceasefire and began fighting. The manner in which the ceasefire was broken and the reasons given for it left much to be desired, while admonishing Chandrika for her inefficient handling of matters I also criticised the LTTE leadership for its hasty decision. I said that Prabakaran will have to act with greater responsibility if he wanted to live up to the title "National leader" foisted upon him by the LTTE supporters.

.....Prabakaran should have resorted to war only after exhausting all avenues of o peaceful settlement. Notwithstanding her inadequasies, I genuinely felt that Chandrika offered a way out from the military quagmire for Sri Lanka in general and the Tamils in particular.... **I firmly believe that Chandrika still remains the best bet for the Tamils among the present crop of sinhala political leaders"**

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் இவரால் மஞ்சரியில் இதே அழுத்தத்துடன் தொடர்ச்சியாக என்றுவது கூறப்பட்டிருந்ததா? இக்கருத்துக்களெல்லாம் ஆங்கிலத்தில் மட்டும் கூறப்பட்டதன் அடிப்படை நோக்கம் கனடிய வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு தான் ஒரு சமாதான விரும்பி என்று காட்டுவதே. ஆனல் தமிழில் எழுதும்போது தன்னை புலி சார்ந்த ஒரு யுத்த விரும்பியாக காட்டி, நடைபெறும் யுத்தம் பற்றி விவரண ஆலாபனைகளை சஞ்சயன், காண்டீபன் என்ற புனை பெயர்களில் செய்து கொண்டிருந்த அதே பத்திரிகையாளர் இப்படி எழுதுவது வெறும் சந்தர்ப்ப வாதம் என்பதில் மறுகருத்துக் கிடையாது. தமிழில் எழுதும்போது புலி ஆதரவாளர்களை குஷிப்படுத்துவதற்காக 'சந்திரிகா இரவு விருந்தில் குடித்து விட்டு நடனமாடினுர்' 'தந்தையின் கல்லறைக்கு மலர்வளையம் சாத்தி விட்டு புலிகளுக்கு பயந்து ஓடி வந்து காரில் ஏறினுர்' என்றெல்லாம் செய்தி வெளியிட்டு விட்டு 'தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம் சந்திரிகா' என்பது போல ஆங்கிலத்தில் எழுதுவதன் அர்த்தம் என்ன?

இந்த இரட்டை முகம் காட்டும் போக்கு இவரை கனடிய ஆங்கில வெகுஜன தொடர்பு சாதனங்களிடையே 'கருத்துச் சுதந்திரத்துக்கு போராடி புலிகளால் பாதிக்கப்பட்ட ஒரு பத்திரிகையாளர்' என்ற பிரமையை ஏற்படுத்தும் நோக்கையே கொண்டது. அது வெற்றியளித்து வருகிறது என்றே கருதப்பட வேண்டும். இவர் தமிழ் மக்களின் ஒரு பிரதிநிதி என்ற அளவில் சி. பி.சி, குளோப், மக்லீன்ஸ், சண் போன்ற தொடர்பு சாதனங்கள் இவரை வெளிக்காட்டி வருகின்றன.

இதில் இரண்டு விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டியவை. ஒன்று இவர் ஏன் திடீரென்று புலிகளுக்கு எதிரானவராக மாறினுர்? ஏன் தன் மீதான அழுத்தத்தை பகிரங்கப்படுத்தினுர்?

மாத்தயா விவகாரத்தில் புலிகளுக்கு பாதகமான செய்திகளை வெளியிட்டதில் தன் மீது புலிகளால் விடுக்கப்பட்ட மிரட்டல்களுக்கு தன்னுல் முடிந்த பதிலடி கொடுப்பதாக எண்ணியே தினமுரசில் புலிகளுக்கு எதிராக வெளிவந்த செய்திகளை வெளியிட்டதாக கருத முடியும். அதேவேளை தான் எழுதிய செய்திகளில் புலிகளை தாஜா பண்ணும் போக்கிலேயே செய்திகளை எழுதினுர். 'அகதிகளுக்கு சென்ற உணவை பறித்ததையிட்டு அரசாங்க அதிபர் கண்ணீர் விட்டு மன்ருடினுர்' போன்ற செய்திகள் புலிகளுக்கு பாரிய பாதிப்பை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தக் கூடியன. இவையெல்லாம் புலிகள் தமிழ மக்கள் மீது மேற்கொண்டு வரும் அராஜகங்களை வெளிக்கொணரும் நோக்கில் எழுதப்பட்டவை அல்ல. மாருக, தன மீது மேற்கொள்ளப்பட்டு வரும் மிரட்டலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த பதிலடியாகவே கருத முடியும். இதனால் மேலும் தடை முயற்சிகள் வநத நிலையிலும், உலகததமிழா பொறுப்பாளர் உள்ளே உள்ள நிலையிலும் எந்தவித சமரச முயற்சிகளும் பலன் தராத நிலையில் தான் முழுமையாக புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார். அதுதான் காரணமாக இருக்கலாமே தவிர, வெறும் கொள்கை அடிப்படையில் புலிகள் தமிழ் மக்களின் நலன்களுக்கு முரணாக நடக்கிறார்கள் என்பதற்காக இவர் எதிர்க்கவில்லை. அவ்வாறு எதிர்ப்பதாக இருந்தால் இந்தியாவுக்கு எதிரான யுத்தம், பிரேமதாசாவுடனான பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டது போன்ற சந்தர்ப்பங்களில் குரல் எழுப்பியிருக்க வேண்டும். அவ்வாறான காரணம் எதுவும் இல்லாது போனால் புலிகளின் தோல்வி நிச்சயம் என்றறிந்த நிலையில் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பவாத அரசியலை அவர் கைக்கொண்டதாகவே கருத வேண்டும்.

ஆரம்பத்தில் புலிகளுக்கு கூஜா தூக்கிக் கொண்டு புளொட், ஈ.பி.டி.பி போன்ற அமைப்புகளுடன் மோதிக் கொண்டவர் பின்னர் புளொட்டின் செய்தியை பிரசுரித்து ஈ.பி.டி.பி பற்றிய விடயங்களையும் பிரசுரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கான காரணம் என்ன? ஒரு நேர்மையான பத்திரிகையாளன் தன் எழுத்தை தணிக்கை செய்யும்படி யாரும் மிரட்டும் போது அதற்குப் பணியப் போவதில்லை. மாறாக, இவர் தான் எழுதியதை மிரட்டலின் பேரில் வெட்டுவதற்காக பேனாவைத் தூக்கிய பின்னர், மனம் மாறிக் கொண்டதாகக் கூறுகிறார்.

இவர் புலிகளின் தன் மீதான அழுத்தத்தை பகிரங்கப்படுத்த வேண்டிய காரணம் என்ன? தாயகம் தடை செய்யப்பட்ட போது தாயகம் அதை எதிர்த்து நிலை கொண்டதுடன் தன் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் மஞ்சரியைத் தடை செய்ததுடன் தங்கள் தலையில் புலிகள் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டனர். தாயகத்தை தடை செய்ததால் வந்த பாதிப்பை விட அதிகமான பாதிப்பை புலிகள் பெற்றுக் கொண்டனர். குளோப், சி.பி.சி போன்ற தொடர்பு சாதனங்கள் மூலம் புலிகளின் இந்த மிரட்டல் பகிரங்கமானதுடன் சர்வதேச அரங்கில் புலிகளின் அராஜகம் அம்பலமானது. தன் மீதான மிரட்டலையும் தடையையும் பகிரங்கப்படுத்துவதன் மூலம் தனக்கான பாதுகாப்பை பெற்றுக் கொள்வதே இதன் நோக்கம். இவ்வாறு பகிரங்கப்படுத்தினால், தன் மீது எந்த 'அதிதீவிர' நடவடிக்கையையும் எடுக்க புலிகள் தயங்குவர். அவ்வாறு 'நடவடிக்கைகள்' எடுத்தாலும் அது புலிகளின் தலையில் முடியும் என்பதை புலிகள் உணர்ந்து தயங்குவர் என்பதற்காகத் தான் அவர் பகிரங்கப்படுத்தினாரே அன்றி, புலிகளின் அராஜகப் போக்கை உலகுக்கு வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக அல்ல.

இந்த நிலையில் நாம் ஒன்றை மட்டும்தான் கூறிக் கொள்ள முடியும். மஞ்சரி தடையோ, டி.பி.எஸ் அவர்கள் மீதான புலிகளின் அழுத்தமோ ஒரு நேர்மையான பத்திரிகையாளருக்கு அராஜகவாதிகளால் நடாத்தப்பட்டு வரும் கொடுமை என்ற வரையறைக்குள் வர முடியாது. இது தங்களால் வளர்க்கப்பட்ட வளர்ப்புப் பிராணி ஒன்று தங்களுக்கு எதிராக கிளர்ந்ததை பொறுக்க முடியாத புலிகள் அதை கடித்துக்குதற முற்படுவதைத் தான் இது காட்டுகிறது. புலிகளால் வளர்க்கப்பட்டவர்களும் மக்கள் மத்தியில் புலிகளை வளர்த்தவர்களும் பின்னர் கருத்து வேறுபாடுகளால் துரோகிகளாக்கப்பட்டு புலிகளால் அழிக்கப்பட்டது மஞ்சரிக்கு புதிதாக இருக்கலாம். ஆனால் புலிகளுக்கும் புலிகளைப் புரிந்து கொண்டவர்களுக்கும் புதிய விடயமல்ல. எனவே தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போய் விட்ட திருப்தியுடன் இருக்க வேண்டியதுதான்.

---

## பட்ட பின்னால்..

மண்ணில் இராணுவம் இருக்கும்வரை பேச மாட்டோம் என்று மறுத்த புலிகள் திடீரென்று பேச்சுவார்த்தைக்கு தயார் என்றதன் காரணம் என்ன?

இராணுவ ரீதியாக பலத்த தோல்விகளைச் சந்திக்கும் போது தங்களை மீளவும் கட்டியெழுப்புவதற்கு புலிகள் கால அவகாசம் கோருவது இது தான் முதல் தடவையுமல்ல. சர்வதேச ரீதியில் தங்களை சமாதான விரும்பிகளாகக் காட்டுவதற்காக பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதும் புதிய விடயமுமல்ல. இதைவிட, தற்போது இராணுவ கட்டுபபாட்டுக்குள் செல்லும் பெருமளவிலான மக்கள் தொகை தான் புலிகளுக்கு பயமூட்டும் புதிய விடயம். அங்கு செல்பவர்கள் ஆபத்தின்றி வாழ்வது மற்றவர்களையும் அங்கு செல்ல ஊக்குவிக்கும். இது தங்களுடைய 'மக்களே அரண்கள்' என்ற கொள்கைக்கு ஆபத்தானது. காவலரண்களை கைவிட்டால் எங்கே செல்வது? இந்த ஓட்டத்தை தடுப்பதற்கு ஒரு கால அவகாசம் தேவை. அதன் மூலம் இன்னொரு தடவை மக்களை ஏமாற்ற முடியும். அத்துடன் வழமை போல மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இடையில் தாக்குதலை நடத்தி விட்டு இராணுவத்தின் மூலம் மக்களைத் தாக்க வைப்பதன் மூலம் மீண்டும் மக்களின் நம்பிக்கைக் கீற்று புலிகள் தான் என்ற எண்ணத்தை ஏற்படுத்த முடியும்.

பலம் வாய்ந்த நிலையில் சமாதானம் செய்பவன் தான் வீரன். பலமிழந்த நிலையில் சமாதானம் கோருவது பலவீனத்தின், தோல்வியின் அடையாளமே. இதை உணர்ந்து கொண்டதால் தான் இராணுவமும் ஆயுதம் ஒப்படைக்கப்பட்டால் தான் சமாதானம் என்றிருக்கிறது.

இந்த சூழ்நிலையில், புலிகள் சமாதானத்திற்கு தயாரான நிலையில் பேச்சுவார்த்தைதான் சரியானது என்று சர்வதேச தலையீடுகள் இருந்தால் ஒருவேளை இலங்கை அரசு சமாதானத்திற்கு சம்மதிக்கக்கூடும். ஆனால் இம்முறை புலிகளின் முழுமையான அர்ப்பணிப்பையும் உறுதிமொழியையும் உறுதி செய்தாலன்றி, மீண்டும் புலிகள் 'மீண்டும் முதலாவது சதுரத்திற்கு' செல்லவே முயற்சிப்பார்கள்.

அவ்வாறான முயற்சிகள் எதுவுமில்லாத நிலையில் 'எதிரியின் இரக்கத்தில்' வாழ்வதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறெந்த வழியுமில்லை. தனது தலைமுறையின் தலைவிதியையே தனி ஒரு மனிதனின் தலையில் இழந்து விட்ட ஒரு இனத்திற்கு இதை விட வேறென்ன வழிதான் உண்டு?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ் நோயும் பெண்களும்

எய்ட்ஸ் நோயும் பெண்களும் என்ற தலைப்பை பார்த்தவுடனேயே இது என்ன எங்களுக்கு சம்பந்தமில்லாத நோயைப் பற்றி எழுதி நேரத்தை வீணடிக்கிறார்கள் என்று தவறாக எடை போட்டு விடாதீர்கள். ஆசிய இன மக்களிடையே குறிப்பாக தமிழர் மத்தியில் அதிவேகமாக அந்நோய் பரவி வருவதாக சமூக நிலையங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எய்ட்ஸ்நோயைப் பற்றிய பூரண தகவலை நாங்கள் பெறாததும் இது பரவுவதற்குரிய ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது எங்களுக்கு இத்தகவல்கள் தேவை இல்லை என்றோ, யாரிடம் கேட்பது எப்படி கேட்பது என்ற சங்கடத்தினாலோ விடப்பட்ட விடயங்களில் ஓரளவாவது நான் இதில் எழுத முயல்கிறேன்.

### எய்ட்ஸ் நோய் என்றால் என்ன?

எய்ட்ஸ் என்றவுடனேயே வரும் முதல் கேள்வி எய்ட்ஸ் என்றால் என்ன என்பது தான் எய்ட்ஸ் என்ற ஆங்கில சொல்லின் விளக்கம் Acquired Immune deficiency Syndrome என்பதே. இதை தமிழில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைபாடு எனலாம். HIV எனும் வைரஸ் தான் எய்ட்ஸ் வருவதற்கு காரணமாகின்றது.

### HIV என்றால் என்ன?

HIVஎன்பது ஒரு வைரஸ். Human Immuno deficiency Virus என்ற ஆங்கில சொல்லின் முதல் எழுத்துக்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது HIV என்ற பெயர். இது உங்கள் உடலில் தொற்றியவுடன் உடலில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்தி கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்படுகின்றது. இதனால் இலகுவாக தொற்றுநோய்கள் தொற்றிக்கொள்கின்றன. நிமோனியா, ஒரு வகை தோல் புற்று நோய் (Kaposis sarcica போன்ற நோய்கள் தொற்றும் போது நோய் எதிர்ப்புச் சக்தி குறைபாட்டினால் இந் நோய்கள் உங்களை மரணத்திற் இட்டுச் செல்கிறது.

### HIV எப்படி எங்களை வந்தடைகிறது?

இந்நோய் மனிதனில் இருந்து மனிதனுக்கு நேரடியாகத் தான் பரப்பப்பட்டு வருகிறது. இவ் வைரஸ் குருதியில், சுக்கில பாயத்தில், யோனிமடல் பாய்பொருளில் முலைப்பாலில் காணப்படும். உமிழ்நீர், சிறுநீர், மலம், கண்ணீர் போன்றவற்றில் காணப்படும் குறைந்தளவு வைரசினால் HIV வைரஸ் தொற்றுவதில்லை என்று கணிக்கப்பட்டிருக்கின்றது. HIV உள்ளவரின் கோப்பை மலகூடம் வாகனம் போன்ற அவர் பாவித்த பொருட்களினாலோ தும்மல் இருமலினாலோ மிருகங்கள் பூச்சிகளினாலோ HIV பரபபபடுவதில்லை.

HIV எங்களுக்கு வருவதற்குரிய முக்கிய காரணங்கள்

-பாதுகாப்பற்ற உடல் உறவு

-போதை மருந்து ஊசிகளைப் பகிர்ந்து கொள்ளல்

HIV வைரஸ்உள்ள ஒருவரின் குருதி அல்லது சுக்கிலபாயம் உங்கள் குருதியுடன் நேரடி தொடர்பு கொள்ளல்

-எய்ட்ஸ் உள்ள ஒரு தாயில் குழந்தையாக நீங்கள் இருந்தால் இவ் வைரஸ் உங்களுக்கு வருவதற்கு சாத்தியம் உண்டு.

### எப்படி இவ் வைரஸில் இருந்து உங்களை பாதுகாக்க முடியும்

1. போதை மருந்து பாவிப்போராயின் மருந்துக்கடைகளில் புதிய ஊசிகளை வேண்டி அதை வேறு ஒருவருடனும் பகிர்ந்து கொள்ளாது உங்கள் பாவிப்புக்காக மட்டும் வைத்திருக்க வேண்டும்.

ஊசி பரிமாறும் சந்தர்ப்பத்தில் ஜாவீக்ஸ் பிளிச் (Javex bleach) எனப்படும் கிருமி நாசினியை உபயோகித்து ஊசியின் உள்ளேயும் (உள்ளே இழுத்து குலுக்கி) வெளியேயும் சுத்தமாக கழுவ வேண்டும். இறுதியில் தண்ணீரால் கழுவ வேண்டும். ஜவக்ஸ் ஊசிக்கு எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.

ஊசி மருந்து பழக்கத்தை நிறுத்தி வேறு முறைகளைக் கைக்கொள்ளலாம். முற்றாக போதை மருந்துப் பழக்கத்தை நிறுத்த விரும்பினால் உங்கள் வைத்தியரிடமோ சுகாதார நிலையங்களிலோ உதவி பெறலாம்.

2. உடலுறவு கொள்ளும் போது பாதுகாப்புறை Condom பாவிக்க வேண்டும்.

### உங்களை பாலியல் உறவின் போது பாதுகாப்பது எப்படி

பாதுகாப்பான பாலியலுறவு ஆரோக்கியமான வாழ்க்கையைப் பாதிக்காது. பாலியலுறவு கொள்பவருடன் அவருடைய கடந்த கால பாலியலுறவுகளைப் பற்றி பேசுவதன் மூலமே பாதுகாப்பான பாலியலுறவைக் கடைப்பிடிக்க முடியும். சிலவேளை உங்கள் கடந்த பாலியலுறவு சம்பவங்களை நினைவை விட்டு மறைந்து போயிருக்கலாம். அல்லது பாலியல் உறவுக்காக அவர்கள் கடந்த கால நிகழ்வுகளை மறைக்க நேரிடலாம். அதனால் சிலவேளை நம்பிக்கையின் நிமித்தம் பாதுகாப்பில்லாமல் உடலுறவு கொள்ளல் கூட ஆராக்கியமானதே.

பாலியலுறவின் போது பாதுகாப்பு முறைகளைக் கையாள்தல் உறவிலிருக்கும் இருவருக்கு மட்டுமல்ல இவ்விருவரும் எதிர்காலத்தில் உறவிலீடுபடக் கூடிய ஏனையோரையும் பாதுகாக்கும்.

### கர்ப்பமடைந்தால் என்ன செய்வது?

நீங்கள் கர்ப்பமாயுள்ள போது HIV இன் தொற்றுக்கு ஆளாகி விட்டீர்கள் என்று நினைத்தீர்கள் என்றால் HIV பரிசோதனை செய்து கொள்வது அவசியமாகும். ஆனால் கருக்கலைப்பது பற்றியோ கருப்பத்தை வைத்திருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியோ முடிவெடுக்க வேண்டியது நீங்களோ அன்றி மருத்துவர் அல்ல. உங்கள் உடல் நிலை பற்றிய எல்லா விடயங்களையும் உங்களுக்கு கூறி நீங்கள் எடுத்த முடிவுக்கு உதவி புரிவது மருத்துவரின் கடமை ஆகும்.

கர்ப்பவதி தன் உடலில் உள்ள குழந்தைக்கு HIV வைரசை கர்ப்பப்பையில் இருக்கும் போதே குழந்தை பிறக்கும் போதோ அல்லது பாலூட்டும் போதோ பரப்புகிறார்.

### HIV இற்குரிய பரிசோதனை

நீங்கள் HIV வைரசை பெற்றிருக்கலாம் என்ற சிறு சந்தேகம் இருந்தாலும் உடனே பரிசோதனை செய்து கொள்ளுங்கள். பரிசோதனையில் HIV வைரஸ் இல்லை என்ற முடிவு வந்திருந்தாலும் மீண்டும் 6 மாதத்தின் பின் ஒரு முறை பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.

உங்களில் HIV தொற்றி இருந்தாலும் 3–6 மாதங்களின் பின் தான் நிச்சயமாக அதை பரிசோதனையில் கண்டு பிடிக்க முடியும்.

### எங்களின் பாதுகாப்பு

முஐஏ தொற்றினால் அது எம் வாழ்க்கையில் எல்லா அம்சங்களிலும் ஒரு பாதிப்பை ஏற்படுத்துகிறது பாலியலுறவு கொள்வது முதல் குழந்தை பெற்றெடுத்து பாலூட்டி வளர்ப்பது வரை நாம் மேற்கொள்ளும் எல்லா உறவுகளிலும் எய்ட்ஸ் நோயில் தாக்கம் இருக்கும்.

நோய் தொற்றியவுடன் உடனடி சிசிக்சை எடுப்பது எவ்வளவு அவசியமோ அதை விட அவசியமானது உங்களை நோய் வராமல் பாதுகாத்துக் கொள்வதாகும்.

கௌசிகா த.

# விருது வழங்க முன்பு எம்மவரின் நிகழ்வுகள்

தமிழர் தகவல் நடாத்திய விருதுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடந்தது பலரும் அறிந்திருக்கக்கூடும்.

குறிப்பிட்டவர்களுக்கே அழைப்பிதழ்கள் அனுப்பியிருந்தார்கள். அந்த அழைப்பிதழை மிகவும் நேர்த்தியாகவே அமைத்திருந்தனர்.

தமிழரின் நடைமுறை அறிந்தே நிகழ்ச்சிக்கு வருகை தரவேண்டிய நேரம் பி.ப.3.15 என்றும் நிகழ்ச்சியின் ஆரம்ப நேரம் 3.30 என்றும் பிரத்தியேகமாக குறிப்பிட்டிருந்தது கவனிக்கத்தக்கது.

எப்படியோ நானும் செல்ல வேண்டியிருந்தது. சென்றிருந்தேன்

3.15 இன் முன்பே பலரும் வந்திருந்தார்கள். சிலர் நிகழ்ச்சியின் போதும் வந்து மனநெருடல்களை ஏற்படுத்தினார்கள்.

பார்வையாளர் பகுதியில் என்றாலும் பாதகமில்லை, நிகழ்ச்சி மேடையில் இருக்க வேண்டியவர்கள், நிகழ்ச்சியில் பங்கு பெற வாய்ப்பு(?)ப் பெற்றவர்கள் குறுக்கே நுழைந்தது, அமைப்பாளர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியதோ என்னவோ பார்வையாளர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

குறிப்பாக சூரியன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் 3.40 இற்கே வந்து மேடையில் சல சலப்பை ஏற்படுத்தினார். ஆள் அடையாளம் தெரியாத இன்னும் சிலர் அதில் ஒரு புரோகிதர் கூட, சாவாசமாகவே வந்தனர். இவர்கள் எவராய் இருந்தாலும் இந்தத் தாமதத்திற்காக மனம் வருந்தவே வேண்டும்.

நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்து நிகழ்ச்சியில் கவிஞர் கந்தவனம் அவர்களது கவிதை செல்வி சுமங்களா நடராஜாவால் படிக்கப்பட்டது.

பின்பு மௌன அஞ்சலி என்ற நிகழ்ச்சி நிரல். இதனை நடா ராஜ்குமார் வந்து அறிவித்தார். தலைவர் 'கம்' மென்றிருக்க இவர் திடுதிடுப்பென வந்து இதனை அறிவித்தது என்னவோ மாதிரியிருந்தது. ,இவருக்கான சந்தர்ப்பம் அடுத்தது தானே! மண்டை உடைந்தது.

இந்த நடாராஜ் குமார் விருது வழங்கும் இவ் வைபவத்தின் நிகழ்ச்சி நிரலுள் சேர்க்கப்பட்டிருந்தது எதனாலோ? அல்லது புகுந்து கொண்டது எப்படியோ? யாம் அறியோம் பராபரமே!

அவருக்காக அமைக்கப்பட்ட நிகழ்ச்சி அங்குரார்ப்பணம், அறிமுகம், வரவேற்பு என்பது இது வழமைக்குள் புகுத்தப்பட்ட நிகழ்ச்சி என்பதாலோ என்னவோ என்ன நிகழ்ச்சியாகப் புகுத்துவது என்ற குழப்பத்தில் இம் மூன்று சொற்களையும் கொடுத்திருந்தனரோ, ஏதாவதொன்றை நினைத்துக் கொள்ளட்டும் என எனக்குப் படுகிறது.

ஆனால் இந்த மூன்று சொற்களின் அர்த்தம் நடாராஜ்குமாருக்கு விளங்கியிருக்கும் என ஏன் தகவல்காரர்கள் நினைத்தனரோ தெரியவில்லை.

அந்த மூன்றில் எதனையும் அவர் செய்யவில்லை. தமிழர் தகவல் இதழினையும் ஆசிரியரையும் புழுகித் தள்ளினார்.

"ஒலி வாங்கி" கிட்டும் சந்தர்ப்பங் கிடைத்தால் எதை வேண்டுமென்றாலும் பேசலாம் என இவர் நினைப்பது தவறு. ஏனென்றால் அது அவர் வீடல்ல. விழா மண்டபம். எங்கள் செவிகளுக்கும் எட்டுவதால் கண்டிக்க எமக்கு யோக்கியதை உண்டு.

தான் ஏதோ திருக்குறள் ஆய்வில் புலமைத்துவம் பெற்றது போன்ற தோரணையில் குறள் பற்றி கபிலர் சொன்னது ஞாபகத்தில் வருகின்றது என்று சொல்லிக் கொண்டது மாத்திரமல்லாது அதற்குள் ஒரு வெண்பாவும் பொழிப்பும் வேறு.. (எந்தச் சாமி எழுதிக் கொடுத்தது என எனக்கு முன்னுக்கிருந்தவர் கிசு கிசுத்தார்)

தமிழர் தகவல் எல்லாச் செய்திகளையும் ஒன்றாய்த் தருகிறது என்றார்... இவர் தமிழர் தகவலின் ஒரு இதழைத் தானும் வாசித்தாரா என்று ஒரு ஐயம் எனக்கு. "தமிழர்

27 ம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவலில்" செய்திகளல்ல, தகவல்களும், அறிவுறுத்தல்களும், அறிவித்தலகளும விளமபரஙகளும மட்டுமே அல்லாது செய்திகள் வருவதில்லை என இவருக்கு தெரியவில்லையா, அல்லது தகவல் என்பதற்கும் செய்தி என்பதற்கும் பேதம் தெரியவில்லையா?

இப்படித்தான் முன்பொருமுறை சூரன் போரின் நேரடி வருணணையில் சூரன் மரமாக உருமாறினான் என்பது தெரிந்திருக்காமல் "பத்மாசுசுரன் மாமரத்தின் பின் இப்போது ஒளிந்து கொள்கிறான்" எனச் சொன்னது எனக்கு இப்போதும் ஞாபகம்.

தெரிந்ததைச் செய்யுங்கப்பா, தெரியாதற்குள் மூக்கை நுழைக்காதீர்!

அதன் பின்பே தலைவர் வந்தார் "ஆழ்ந்த நித்திரையின் பின்" என்பது போல "வாழ்த்துக்கள்" நிகழ்சிக்காக தியாக முருகானந்த சர்மாவை அழைத்தார். எது சம்பந்தமான வாழ்த்து எனக் குறிப்பிடப்படாததால் தகவலையும் ஆசிரியரையும் புகழ்ந்து விட்டு இதன் சேவை தொடர வேண்டுமென வாழ்த்தி விட்டு அமர்ந்தார். அதே 'வாழ்த்துக்கள்' நிகழ்ச்சியில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த கவிதாராஜன் என்ற நபர் சமூகந்தரவில்லை. அவர் தான் பெருமுடியாமையை முன் கூட்டியே அறிவிக்காததாலோ என்னவோ தலைவரால் காரணத்தைச் சொல்ல முடியாமல் போய் விட்டதோ எனப்படுகிறது.

அடுத்து தலைவர் உரை நிகழ்ச்சி. நா.சிவலிங்கம் என்பவரே அந் நிகழ்ச்சியின் தலைவர். அவர் கனடாத் தமிழர் தேசிய மன்றத் தலைவர் எனக்குறிப்பிட்டிருந்தனர் அவர் எழுதிக் கொண்டு வந்திருந்ததை வாசிக்கவே தடக்குப்பட்டுக் கொண்டிருந்தார். எழுதியிருந்த எழுத்து விளங்கவில்லையா அல்லது தமிழ் வாசிப்பதில் பழக்கமில்லையா? ஆயத்தமாவது செய்து வந்திருக்கலாமே.

இனி வெளியீட்டுரை கவிஞர் கந்தவனம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. அந்நிகழ்ச்சியில் கொடுத்த பணியை திறப்படச் செய்தவர் அவர் ஒருவர் மட்டுமே. நல்ல பேச்சு லாவகமும் இருந்ததால் சிறப்பாக அமைந்தது அவரது நிகழ்ச்சி. அடுத்தது ஐந்தாண்டுகள் மதிப்பீட்டு உரைகள் வழங்கினர் மூவர் இவர்கள் கடந்த ஐந்துகளில் வெளிவந்த தமிழர் தகவல் இதழ்களின் விமர்சனமாக எதனையும் சொல்லவில்லை. பொதுப் படையில் தமிழர் தகவல் இதழ்களால் புதிய குடிவரவாளர்கள் நண்மை அடைகின்றனர், பயனுள்ள தகவல்களை வெளியிடுவதில் அக்கறையுள்ளதால் அதனை சேவையாகச் செய்கிறார் திருச்செல்வம் அவர்கள், அவருக்கு பிற பத்திரிகைகள் குண்டு வெடிப்புகளை நம்பி பத்திரிகை வெளியிடவேண்டியிருப்பது போல் அவசிய மொன்றுமில்லை என்றார் கே.ரி.சண்முகராஜா .

அடுத்து அண்மையில் அமரத்துவமடைந்த எஸ். கே. மகேந்திரன் பேசினார் இவரும் கொடுத்த தலையங்கத்தினின்றும் விலகியே நின்றிருந்தார். "எந்தப் பிரதிபலனும் இல்லாது சேவையாகவே அல்லும் பகலும் ஓயாது உழைக்கின்றனர்" என்பதே அவரது பேச்சின் சாரம்.

அடுத்தது "சூரியன்" ஆசிரியர் ஆர்.என. லோகேந்திரலிங்கம் அவர்கள் பேசினார். மற்றய இரு நண்பர்களும் பலவிடயங்களைப்பேசிவிட்டதால் அவர்கள் தொடாத விடயங்களை பேசுவதாக ஆலாபனை பண்ணினார். ஆனால் கொடுத்த தலைப்பு அப்படியே இருக்க, தானும், திருச்செல்வம் அவர்களும் ஒரே மாதிரியான சூழ்நிலைகளைச் சந்தித்தவர்கள், இருவரும் இயக்கத்தால் அணைக்கப்பட்டும் இருக்கிறோம், பயமுறுத்தப்பட்டும் இருக்கிறோம் என்றார். ஐந்தாண்டுகள் மதிப்பீட்டு உரைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ஒரு கருமத்தைப் பொறுப்பேற்றால் அதனைச் சீராய் முயலவாவது வேண்டியது ஒருவரது கடமையென்பது தெரிந்து கொள்ளாமல்...

இறுதியாக பிரதம ஆசிரியர் திருச்செல்வம் அவர்கள் பேசினார்.

தனக்கு நேரப் பற்றாக் குறை வந்துவிட்டதாக குறிப்பிட்டே உரையை ஆரம்பித்தார் தன் நண்பர்கள் அதிக நேரத்தை எடுத்துவிட்டனர் என அதற்கு முன் மதிப்பீட்டு உரைகள் நிகழ்த்திய மூவரையும் நாசூக்காய் குற்றப்படுத்தினார்.

அடுத்து தனக்கு நேர்ந்த சங்கடத்தைச் சொன்னார். அதாவது அன்று வேதியர் ஒருவர் மலர் மாலை அணிய அனுமதி பெற்றிருந்தார் ஆனால் பொன்னாடை (?) போர்த்த பலர் முன்வந்தும் அனுமதி மறுக்கப்பட்டிருந்ததாம். ஆனால் அந்த வேதியர் தன் துணைவியரால் திருமதி திருச்செல்வம் அவர்கட்கு பொன்னுடை போர்த்த எப்படியோ விழாவின் தலைவர் சிவலிங்கத்திடம் அனுமதி பெற்று பொன்னுடை போர்த்த வந்திருந்தார். (நிகழ்ச்சி நிரலில் இவை ஏதும் இல்லாததால் நான் குறிப்பிடவில்லை)

இது திரு.திருச்செல்வம் அவர்கட்கு சங்கடமாய் போயிருந்தது. ஏனெனில் பொன்னுடை போர்த்த அனுமதி மறுக்கப்பட்டிருந்த ஒருவர் அந்த அவையில் இருந்திருக்கிறார். இதையே திருச்செல்வம் அவர்கள் குறிப்பிட்டார். மேலும் தலைவர் அவர்கள் இல்லாத நிகழ்ச்சிகளை (தன்னிஷ்டப்படி) சேர்த்து தன்னைச் சங்கடத்தில் மாட்டிவிட்டதாக நாசூக்காய் கண்டனஞ் செய்தார்.

இருந்தும் ஒரு வேதியர் மாலை அணிவிக்கும்போது திருச்செல்வம் அவர்கள் அந்த மண்டபத்தில் அந்த வேதியரை கஸ்டப்பட்டு அட்டாங்கமாய் விழுந்து கும்பிட்டதை கண்டு கொண்ட எங்களுக்கு சங்கடமாய் போய்விட்டது. பரிதாபமாய் போய்விட்டது.

திருச்செல்வம் அவர்கள் தனது சகபாடிகளை அறிமுகஞ்செய்தார். சபையில் அவர்கள் எழுந்தபோது கண்டு கொண்டோம்.

பெரும்பான்மையோர் அவரது குடும்பத்தினரே, அதனால் தான் ஊதியம் இல்லாமல் அவர்களிடம் இருந்து உழைப்பைப் பெறமுடிகிறது என்றார் (அப்போ, ஊதியமெல்லாம் யாருக்குப் போகிறது?)

கட்டுக்கோப்பாய் நடத்த முடிகிறது என்றார்.

அத்துடன் முதல் அமர்வான தமிழிலான அமர்வு முடிந்தது.

இனி ஆங்கில மூலத்தில் அமர்வும்...

அதன் பின்பு விருது கொடுத்திருப்பார்கள். தமிழ் முடிய நான் புறப்பட்டுவிட்டேன்.

**பொதிகை பாண்டியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கிறிக்கட் அணி

அருணன்

அண்மையில் நடைபெற்ற உலகக் கிண்ணத்திற்கான 'கிறிக்கட் போட்டியில் இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்றெடுத்த போதும் அதற்கு முன்பும் பின்பும் இலங்கை அணி மீதான வாதப் பிரதிவாதங்கள் கிறிக்கட் இரசிகர்களை விட்டபாடாயில்லை.

உலகக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டிகளின் போது மேற்கிந்திய அணியும் அவுஸ்திரேலிய அணியும் இலங்கையில் விளையாட மறுத்திருந்ததால் அவ்விரு அணிகளையும் இலங்கை அணி வென்றிருந்ததாக அறிவிக்கப்பட்டதால் இலங்கை அணிக்கு கூடுதல் புள்ளிகள் கிடைத்தன என்றும் அதனால் தான் அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை கலந்து கொள்ள முடிந்ததென்றும் ஒரு சாராரின் வாதம்.

ஆனால் இலங்கை அணியின் ஏனைய விளையாட்டுக்களை அவதானித்த கிறிக்கட் பற்றிய அறிவு கொண்டோருக்கு அவ்வாதம் பொருமை சார்ந்தது என்பதை புரிந்து கொண்டிருக்காமல் போகாது.

ஏன் எங்கள் தமிழர்களில் பலர் இறுதிப் போட்டிக்கு இலங்கை தகைமை பெற்றவுடன் எப்படியும் இலங்கை தோற்றே தீரும் என வாதிட்டனர். ஆனால் எல்லாவற்றையும் மீறி இலங்கை அணி தன் திறமையால வெற்றியீட்டியபோது இவர்கள் பார்த்தீர்களா இலங்கையின் திறமையை என பிறநாட்டார் முன் தம் பெருமிதத்தை காட்டத் தவறவில்லை.

ஆனால் இலங்கை தோற்றிருந்தால் இவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள் என நினைக்கிறீர்கள்? அது எங்கள் அணி அல்ல. சிங்கள அணி. முத்தையா முரளிதரன் கூட பாதிச் சிங்களவன் தான் எனக் கூசாமல் சொல்லியிருப்பார்கள்.

தமிழன் இப்படித் தான். தோல்வியை ஒப்புக் கொள்ளத் தெரியாதவன். வெற்றியின் பக்கம் சாய்ந்தே நடப்பவன்.

உலகக் கிண்ணப் போட்டியின் போது பாகிஸ்தானியர் இலங்கை அணிக்கே முழு ஆதரவும் ஆரவாரமும் கொடுத்திருந்தனர். பங்களாதேசத்தவர் கூட இலங்கையின் வெற்றியைக் கொண்டாடினர். இந்தியாவில் கூட இலங்கை அணிக்கு கணிசமான ஆதரவும் இருந்தது. ஏன் மேற்கிந்தியத் தீவினர் பலரும் இலங்கையே வெல்லும் என அடித்துச் சொன்னார்கள். ஆனால் இலங்கைத் தமிழர் மட்டும் இலங்கை வெற்றி பெறும் வரை மௌனமே சாதித்திருந்தது ஏன்?

டுலிப் மெண்டிஸ் ரொறன்ரோவில் வந்து விளையாடிய இரண்டு முறையும் அதிவேகமாக ஓட்டங்களை எடுத்து ஆட்டத்திற்கு விறுவிறுப்பை ஏற்படுத்திய போது பெருமிதமாகப் பேசிய கனடாத் தமிழர் அதே மெண்டிஸ் முகாமையாளராக உள்ள இலங்கை அணிக்கு ஆதரவாகப் பேசாதது ஏன்? அரசியலா?

நாம அரசியல சாயம பூசி வைககாமல விட்டது எதைத் தான்? அதனால் தானே தமிழர் கணிப்புகள் பல சமயங்களிலும் தவறிப் போகின்றன.

இவர்கள் கூறிக் கொள்வது போல இலங்கை கிறிக்கட் அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது அதிஷ்டத்தினால் தானா?

அண்மையில் சிங்கப்பூரில் இலங்கை அணி இந்தியாவுடன் தோற்றதோடு இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியுடன் தோற்று 'சிங்கர் கோப்பை'யை தவற விட்டதையும் அதற்கான சாதகமான வாதமாய் கொள்ளலாமா?

அதே சிங்கர் கிண்ணப் போட்டியில் இலங்கை பாகிஸ்தானை வென்றிருக்கிறதே.

ஆகவே விளையாட்டில் எதனையும் முன்கூட்டித் தீர்மானம் செய்ய முடிவதில்லை. அதே நேரம் இலங்கை அணியின் திறமையைக் குறைத்தும் மதிப்பிட முடியாது.

இலங்கைக்கு வர மறுத்த இரண்டு நாடுகளையும் இலங்கை அணி வென்றிருக்கிறது. அவுஸ்திரேலியாவை உலகக் கிண்ணப் போட்டியிலும் மேற்கிந்திய அணியை அண்மையில் றினிடாட்டில் நடந்த போட்டியிலும் வென்றிருக்கிறது. இலங்கை அணியின் மன வைராக்கியத்திற்கு இது நல்ல சான்று. மேலும் முதல் துடுப்பெடுத்து ஆடுபவரே வெற்றி பெறும் வழமையை அசட்டை செய்து விட்டு உலகக் கிண்ணத்தை வென்றது இன்னொரு சான்று. இம்மனோபலமே இலங்கை அணியின் முதல் பலம்.

அடுத்து துடுப்பெடுத்தாடும் திறமும் துடுப்பெடுத்தல் ஒழுங்கும். இடதுகை ஆட்டக்காரர்களைக் கூடுதலாகக் கொண்ட அணி, அத்துடன் வலது கை, இடது கை என மாறி மாறி அடுக்கப்பட்ட துடுப்பெடுத்தாடும் ஒழுங்கு.

அடுத்து பந்து தடுப்பில் கூடிய கவனமும் பயிற்சியும் கொண்ட அணி. சுழல் பந்து வீச்சாளர்களை திறம்பட பிரயோகிக்கும் சாமர்த்தியம். இவை இலங்கை அணியின் பலம் இதனை எவரும் மறுத்துக் கூற முடியாது. இவற்றை மேலும் நிருபிப்பதாகவே இலங்கை அணியின் வல்லமை சாட்சியமாகிறது.

அதனால் தான் சிங்கப்பூரில் சிங்கர்க் கிண்ணத்தைத் தவற விட்ட போதும் உலக சாதனையில் இலங்கையின் பெயர் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது.

இடது கை ஆட்டக்காரரும் ஆரம்ப ஆட்டக்காரருமான சனத் ஜெயசூரியா 48 பந்துகளில் நூறு ஓட்டங்கள் எடுத்து அசாருதீனின் 62 பந்துகளுக்கு நூறு என்ற 88-89 சாதனையை முறியடித்தது மட்டுமல்லாமல் அச் சதத்தில் 11 ஆறுகள் அடித்த பெருமையையும் ஒரே ஓவரில் நாலு ஆறுகளையும் பெற்று 29 ஓட்டங்கள் பெற்ற சாதனையையும் நிலைநாட்டியிருக்கிறார்.

மேலும் அதே சிங்கப்பூரில் இறுதிப் போட்டியில் பதினெட்டுப் பந்துகளுக்கு ஐம்பது எடுத்திருந்த ஓ'டொனலின் சாதனையை பதினேழு பந்துகளுக்கு முறியடித்துமிருக்கிறார்.

இத்தகைய அதிவேக ஆட்டக்காரர்கள் மட்டுமல்லாது குருசிங்கா, மகாநாம போன்ற நிதான ஆட்டக்காரர்களும் இருக்கின்றனர். முரளிதரன், சமிந்த வாஸ் போன்ற திறமையான பந்துவீச்சாளர்களும் இருக்கின்றனர். ஆனால் டெஸ்ட் விளையாட்டுக்கு அத்தியாவசியமான அதிவேக பந்துவீச்சாளர்களே அவசியமாகவுள்ளது. அதற்கான முயற்சிகளிலேயே இலங்கையணியின் முகாமையாளர் டுலிப் மெண்டிஸ் பிரயத்தனம் செய்வதாக தெரிகிறது. அதிலும் இலங்கை பலம் பெற்றால் அதன் வல்லமை இன்னும் நீளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “விழிப்பு...”

என் மனைவி என் நண்பனை, சனிக்கிழமை இரவு விருந்துக்கு அழைத்திருக்கிறாள். நானும் வீட்டில் தங்கியிருக்க வேண்டும் என்று சொல்கிறாள்.

"அவருக்கு சைவக் கறியள்தான் சரியான விருப்பமாம். அதோட குழல் புட்டும் விருப்பமென்று சொன்னவர்..."

என்ன சமைக்க போகிருள் என்பதை எனக்குக் கேட்கத்தக்கதாக மெனுமெனுத்துக்கொண்டு என்னையே பார்க்கிறாள்...

"யாரையாவது கூப்பிடுற நாளைக்காவது ஆட்டு இறைச்சி சமைக்கிறதுதானே.."

இது எனது விண்ணப்பம்.

"சீ...சீ.. இறைச்சியெல்லாம் பிறகு சமைக்கலாம்... ம்ம்ம்... புட்டும் அதுக்கு பொரிச்ச கத்தரிக்காய்க் குழம்பும் வைக்கலாம். இல்லாட்டி மரவள்ளி வெள்ளைக்கறி அதோட பொரிச்ச சொதியும்ம்ம்... வேணுமெண்டா மீனும் பொரிப்பமே..."

இது அவனுக்கு மிகவும் பிடித்த சாப்பாடு. அது எனக்கும் தெரியும். ஆனால் ஏதோ தானாகவே யோசித்துச் சொல்வது போல சொல்லுகிறாள். நான் எதுவும் பேசவில்லை. அதுதான் என் சுபாவமும் கூட. எல்லாவற்றையும் மனதுள் புதைத்துக் கொள்வது எனக்கு நன்றாக பழகிவிட்டது.

"என்ன வேணுமெண்டாலும் சமையும். ஆனா சாப்பாடு மட்டும் ருசியா இருக்கவேணும்..." என்று ஜோக் சொல்லுவதுபோல சொல்லிக் கொண்டு எழுந்து அறைக்குள் போய் கட்டிலில் விழுந்தேன். மனதுக்குள் எரிச்சலாக இருந்தது. தூக்கம் இப்போதைக்கு வராது. எப்படி வரும்? அந்தப் படுபாவிதான் வரப்போகின்றானே.

> என்ரை மனுசிக்கு ஒரு லவ்வர் இருக்கிறான எணடது
> உலகத்துக்கு தெரியேக்கை என்ரை மரியாதை
> ஏறிக்கொண்டு போகுமண்டோ நினைக்கிறீர்?"

அவனை இவளுக்கு அறிமுகம் செய்து வைத்ததும் நான்தான். இவளை கல்யாணம் முடித்த அதே வருடம். ஏதோ ஒரு விழாவிற்கு இவளை அழைத்துப் போயிருந்தேன். அந்த விழாவில் இவன் பரதநாட்டியத்திற்கு மிருதங்கம் வாசித்தான். பிறகு கர்நாடக சங்கீதம் பாடினான்... பிறகு வந்த மெல்லிசை நிகழ்ச்சி சினிமாப்பாட்டிற்கு கீபோர்ட் வாசித்தான். சினிமாப்பாட்டும் பாடினான். அன்றைய மேடையில் இவனின் ஆக்கிரமிப்புதான்...

எனக்கும் கொஞ்சம் பெருமையாக இருந்தது. பக்கத்திலிருந்த இவளிடம் கிசுகிசுத்தேன்.

"மேடையில நிக்கிற ஆள் ஆர் தெரியுமோ..? உவரையும் நான்தான் கொழும்பில இருந்து கனடாவுக்கு அனுப்பினனான்.."

இவள் அசந்து போனாள்.

"அய்யோ... அப்பா... ஆள் நல்ல கெட்டிக்காரனென. ஆளப்பாத்தா தெரிஞ்ச முகமாவும் கிடக்கு. சிலவேளை யாழ்ப்பாணத்தில் என்னோட மியூஸிக் படிச்சவவோ தெரியாது... அவரோட பேசலாமே?" காதுக்குள் கெஞ்சுகிறாள்.

புதுமனைவியாயிற்றே... அழகாகவேறு இருக்கிறாள்.. நாலுபேருக்கு காட்டினால் நமக்கும் பெருமைதானே... விழா முடியும்வரைக்கும் காத்து நின்று, பிறகு அவன் மேடையை விட்டு வெளியே வர அவனைப் பெயர் சொல்லி அழைத்தேன். திரும்பினான். அதிசயித்தான்.

"ஹாய்.. அண்ணை நீங்களோ? அதிசயமாக்கிடக்கு. . எப்ப இந்தமாதிரி புரோக்ராம்ஸுக்கெல்லாம் வரத் துவங்கினியள்?"

நான் கொஞ்சம் அசடு வழிந்து கொண்டே "சீ...சீ.. என்ரை மிஸிஸ் கொழும்பில இருந்து வந்திட்டா.. அதால அவவுக்காக வந்தனான். இவதான் என்ரை மிஸிஸ்.." அறிமுகப்படுத்தினேன்.

"நல்லாப் பாடினீங்கள். நல்லா வாசிச்சியள்.. உங்களை எங்கயோ பார்த்தமாதிரிக்கிடக்கு. நீங்க ராமனாதன் அக்கடாமில படிச்சனிங்களோ...?"

"இல்லை எல்லாம் கொழும்பிலதான்.."

நான் குறுக்கிட்டேன். "இவ ஐஸே ஜப்னா கம்பஸில் டீச்சிங் கிரேட் வரைக்கும் கர்னாட சங்கீதம் படிச்சவ. வீணையும் வாசிப்பா.. வயலினும்.. என்னப்பா வாசிப்பீரில்லே...?"

"ஓ.. டிப்ளோமா இன் வயலின் முடிச்சனான்.."

"வாவ்..." என்றான். "அண்ணை இப்பிடி ஒரு ஆளை ரகசியமா வீட்டுக்கை வச்சிருக்கிறியளே.. நம்பரைத் தாங்கோ."

அவன் போன் நம்பரை வாங்கிக்கொண்டான். எங்கோ இடித்தது வானம் என்றிருந்தேன். தப்பாமல் என் தலையில் இடித்தது. அன்று பிடித்ததப்பா சனியன்.

படுக்கையில் புரண்டு படுத்தேன். கிச்சனில் அவள் தனியே பாத்திரங்களை கழுவிக் கொண்டிருக்கிறாள். பாவமாக இருந்தது. நாளைக்குக் கழுவலாம்தானே என்றால் கேட்கமாட்டாள். எல்லாம் சுத்தமாக இருக்கவேண்டும் என்பாள்.

இவள் எனக்குக் கிடைத்ததே சுவீப் விழுந்தது போலத்தான். தூரத்துச் சொந்தம். கொழும்பில் அல்லாடிக்கொண்டிருந்த இவளின் போட்டோவை

## மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டார் எனக்கு அனுப்பி வைத்தபோது இவளை படு சாதாரணமாய் நினைத்தேன். நேரில் பார்ப்பதைவிட போட்டோவில் அழகு குறைந்து சிலர் தெரிவார்கள் என்பார்களே அந்த ரகம் இவள். நானோ இதற்கு எதிர்மாறு. ஆகவே போட்டோவைப் பார்த்தே இருவரும் திருமணத்திற்கு சம்மதித்துவிட்டோம். கனேடியன் இமிகிரேஷன் செய்யவேண்டிய பலவேலைகளை தனியாக செய்யும் வல்லமை கொண்ட எனக்கு சீதனம் ஒரு தேவையாக இல்லாமலிருந்தாலும் இவள் என் மனைவியாகிக்கொண்டாள்.

ஹேய்.. கொஞ்சம் பொறு... டெலிபோன் அடிக்கிறதோ... ஓம்.. ஓம். ஒரு முறை மணியடித்ததுமே படக் என்று அவள் போனை கைப்பற்றிய சத்தமும் கேட்கிறது.

"ஹலோ ஓம்... ஓம்... சீ... இல்லை ஐயையோ... அவர் படுத்திட்டார்.. நாளைக்கு வேலை. அதுதான். எழுப்பவோ? சீ...சீ... நான் படுக்கேல்ல. கழுவிக் கொண்டிருக்கிறன்.. இல்லையில்லை... குழப்பேல்லை... சொல்லுங்கோ.. ஆ.. இப்பதான் வந்தனீங்களோ... ரிஹர்ஸல் எப்படி போச்சுது?"

இது அவன்தான். அவனேதான் போன் பண்ணுகிருன். அதுவும் இரவு பதினொரு மணிக்கு பிறகு. .. ஏன்ரா இந்த ராத்திரியில போன் பண்ணுறாய்.. அடச்சீ. . இவள்வேறு அதற்காகவே காத்துக் கொண்டிருந்ததுபோல ரிஸீவரை எடுக்கிறாளே.. கிசு கிசு குரலில் அதென்னடி பேச்சு..?

எனது நெற்றியின் இருபுறத்துமுள்ள ரத்த நாளங்கள் வலித்துக்கொண்டே உச்சிக்குள் ஊசி ஒன்றை இறக்கின. கண்களின் உள்ளே புருவத்திற்குக் கீழே எரிந்தது. மனம் இருட்டாகி பாரமானது போல உணர்ந்தேன். இன்றும் அழவேண்டும் போல் இருந்தது.

இவள் எனக்கு துரோகம் செயகிறாளோ... நினைக்கும்போதே உடலில் சக்தியே இல்லாது போனதுபோன்ற வெறுமை. சிரித்துக் சிரித்து பேசுகிறாளே. இப்படி என்னோடு ஒரு நாள் பேசியிருப்பாளா... எழுந்து போய் பிடரியை பிடித்து இரண்டு சாத்து சாத்திவிட்டு வரவேணும்போல் இருந்தது. ஆனால் செய்ய முடியவில்லை. அப்படி செய்வது அநாகரீகம் என்பதை விட, பதிலுக்கு அவளும் போலீஸுக்கு போன் பண்ணினால் அசிங்கப்பட்டுவிடும் என்பதைவிட, அது எங்கே என்னை ஒரு சராசரி மனிதனாக இவளுக்குக் காட்டிவிடுமோ என்ற பயமே மேலோங்கியது. அடியே உனது அன்பை எனக்குத் தா என்று அடித்துக் கேட்டா வாங்க முடியும்? ஆத்திரத்தை அடக்கிக் கொள்கிறேன்.

இவளது சந்தோசங்களில் குறுக்கிட என்றுமே நான் முனையைப் போவதில்லை. என் மனைவியாகிவிட்ட இவளுக்குத் திருப்தி தரும் எந்த விடயத்திற்கும் தடை சொல்ல நான் நினைக்கவில்லை. உன் சுதந்திரம் உனக்கே உரித்தானது பெண்ணே. ஆனால் உன் சுதந்திரம் என் மனதிற்கு பேரிடியாக விழும் ஒவ்வொரு கணத்தையும் நான் காணாமலே இருக்க ஆசைப்படுகிறேன்... எரிச்சல் அதிகரித்தது.

சரிந்து படுத்து கண்களை இறுக்கி மூடி, இரு கைகளையும மேலே உயர்த்தி அரைகளை பகுதியால காதுகளை மடக்கிப் பொத்தி எதையும் கேட்காமலிருக்க முயற்சிக்கிறேன்.

அன்பு காதல் இவை இரண்டும் நம்பிக்கையில் தோய்த்தெடுத்தவை. எனக்காக இன்னொரு ஒரு இதயமும் இருக்கிறது.. அது எனக்கு மட்டுமே ஏங்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறதுஎன்ற நம்பிக்கை ஒருவனுக்கு அடிமனம் வரை வியாபித்திருக்குமானால் வாழ்க்கை எத்தனை சந்தோசமாக இருக்கும்.

தூங்கிவிட்டேன்....

சனிக்கிழமை. இன்று இரவுதான் அவன் வீட்டிற்கு வரப்போகிறான். நினைக்கவே எரிச்சலாக இருந்தது. ஒன்றும் பேசாமல் காலையில் எழுந்து விட்டேன். இவள் இன்னும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறாள்.

எழுந்து குளித்துவிட்டு மெதுவாக வேலைக்கு புறப்படுகின்றேன். சும்மா இருப்பானேன் என ஒத்துக்கொண்ட பார்ட்டைம் வேலைதான் இது. ஆனாலும் நான் போகவிட்டால் முதலாளி கத்துவான். மூன்று மணிவரையும் முறிமுறி என்று முறித்துவிடுவான். அதன்பிறகு வீட்டிற்கு வந்து நிம்மதியாக ஒரு படத்தை கிடத்தை பார்க்கலாம் என்றால் இவள் அவன் வரப்போகின்றான் என்கிறாள்.

எரிச்சலாக இருந்தது. வேலை முடிந்ததும் நேரே வீட்டிற்கு போகாமல் கொஞ்ச நேரம் கால் வலிக்கும் வரை நடக்கிறேன். மனதுள் வலியிருக்கும்போது உடலை வருத்திக்கொண்டால் இந்த வலியில் அந்த வலி தெரியாது. எனவே நடக்கிறேன். இனி நடக்க முடியாது என கால்கள் கெஞ்சவே மெதுவாக வீடு திரும்புகிறேன்.

வீடு பூட்டிக் கிடக்கிறது. வழமையாக பெல்லை அமுக்கினுலே இவள் கதவை திறந்து விடுவாளே... எங்கே காணோம்? என்னிடம் இருக்கும் திறப்பை எடுத்து கதவை திறந்து உள்ளே போகிறேன். உள்ளேயும் இவள் இல்லை. நெஞ்சு திக் என்றது. பொதுவாக இந்த நேரத்தில் எங்கும் போகமாட்டாள். எங்கே இவள்? இன்று அவன் வேறு சாப்பிட வரவேண்டியிருக்கிறது...

ஒருவேளை அவனோடு ஓடிப்போயிருப்பாளோ..?

இப்போது நெஞ்சு முழுவதும் வலியே எடுத்து விடுவது போலிருக்கிறது. முகம் வியர்க்க ஆரம்பிக்கிறது. பேசாமல் சோபாவில் தொய் என உட்கார்கிறேன். கை கால்கள் நடுங்குகின்றன. தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். எவ்வளவு நேரம் அப்படியே இருந்தேனோ தெரியவில்லை. டெலிபோன் அடிக்கிறது எடுக்கிறேன்.

"ஹலோ அண்ணை வந்திட்டீங்களே..." அவன்தான்.

"ஓம்..." என்று இழுத்தேன். டேய்... என்ரை மனுசியை வீட்டிலை காணேல்லை. நீ இழுத்துக்கொண்டு ஓடிற்றியா என்று எப்படிக்கேட்பது?

"அண்ணை.. உங்கட அவ இப்ப இங்கதான் இருக்கிறா..

ஐயோ அப்ப நான் நினைத்தது சரிதான். மயக்கம் வரும்போல இருந்தது.

"கவலைப்படாதேயுங்கோ... காலிலை ஒரு முறிவு. இப்ப கட்டுப்போட்டாச்சு... இன்னும் கொஞ்ச நேரத்திலை இங்க ஆஸ்பத்திரியிலிருந்து கூட்டிக்கொண்டு வாறன்..."

"என்ன..!? என்ன நடந்தது...?"

"ஒன்றுமில்லை... வாஷிங் மெஷினுக்கு போகேக்க படியில் விழுந்து கால் உடைஞ்சு போச்சாம். பாவம்.. சரியா வீங்கிப்போச்சு. உங்களுக்கு கோல் பண்ணியிருக்கிறா அங்க நீங்க இல்லை... பிறகுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு கோல் பண்ணி... ஆம்புலன்ஸை கூப்பிட்டு... மிச்சம் எல்லாம் வீட்டுக்கு வந்து சொல்லுகிறோமே..."

கால் உடைந்ததும் இவள் எனக்குத்தான் முதலில் போன் பண்ணியிருப்பாளா? இல்லை. உடனே அவனுக்கு போன் பண்ணி அவனோடேயே ஹொஸ்பிடல் போயிருப்பாளா?

எண்ணி பத்தே நிமிடத்தில் அவனது காரில் இருவரும் வந்து சேர்ந்தார்கள். அவள் கையில் ஒரு ஊன்று தடி. ஒரு கக்கத்தில் தடியை வைத்து நொண்டியவாறே வருகிறாள். மறு கையை அவன் ஆதரவாக பிடித்துக் கொண்டு வருகிறான். விக்கித்துப்போய் ஜன்னலூடாக பார்த்தவாறு இருக்கிறேன்.

உள்ளே வந்ததும் எப்படி நடந்தது என்று ஏதேதோ விளக்கம் சொல்கிறாள். எனக்கு ஒன்றும் காதில் ஏறவில்லை ஊன்றுகோலுடன் அவள் நிற்பதைப் பார்க்கவே வேதனையாக இருந்தது. ஒரு காலை உன்னிக்கொண்டு சோபாவிற்கு போய் காலிலிருந்த ஷூவை கழற்ற பிரயத்தனப்படுகிறாள். மெதுவாக அருகில்போய் அவளது தலையை வருடிக் கொடுத்துவிட்டு, நானே ஷூவை கழற்றிவிடுகின்றேன். எனக்கு கண்களில் நீர் முட்டிக்கொண்டு வருகிறது. அடக்கிக்கொள்கிறேன்.

''கவலைப்படாதையுங்கோ.. எனக்கும் முந்தியொருக்கா கால் முறிஞ்சது... கொழும்பில நான் வச்சிருந்த ஹொண்டா மோட்டசைக்கிளால விழுந்து..'' சொல்லிக் கொண்டிருக்கிறான். நீ ஹொண்டா மோட்டசைக்கிள் வைத்திருந்தாலென்ன.. ஏரோப்பிளேன் வைத்திருந்தாலென்ன.. போடா.. போடா.."

ஆத்திரம் வருகிறது. அடக்கிக்கொள்கிறேன். அவன் கொஞ்சநேரம் இருந்துவிட்டுப் புறப்படுகிறான். நிம்மதி. உனக்கு விருந்துச் சாப்பாடு இண்டைக்கு இல்லை மகனே.. போய் வா..

''ஐயையோ.. இன்டைக்கு உங்களுக்கு டின்னர் சமைச்சுத் தாறம் எண்டு சொல்லி முடியாம போச்சு..." அவள் அதை மறக்கவில்லை...

''சீ..சீ.. பரவாயில்லை... போகேக்கை அந்த இத்தாலியன் ரெஸ்டாரான்டுக்குப்போய் ஒரு வெட்டு விட்டு போறன்... தாங்ஸ்."

இரவு முழுவதும் இவள் வலியால் துடித்துக் கொண்டிருக்கிறாள். அருகில் படுத்தவாறு அவள் தலையை தடவிக் கொடுக்கிறேன். நெற்றியின் புரளும் முடிக் கற்றையை தள்ளிவிட்டு அங்கு ஒரு முத்தம் கொடுக்க நெருங்குகிறேன். என்னை தள்ளிவிடுகிறாள்.

"கால் சரியா நோகுது... தள்ளிப்போங்கோ.."

சரி.. சரி.. சரி.. உனக்கு ஒரு கீறல் என்றாலே நான் துடிக்கிறேன். அந்தக் கீறலுக்கு நானே மருந்தாகவேண்டும் எனது தவிக்கிறேன். ஆனால் என் மனம் உனக்குப் புரிகிறதாயில்லையே.. என் மனதில் ரணகாயமேபட்டால்கூட அது உனக்குத் தெரிவதில்லையே.. ஏன்?

**வே**லைக்குப் போறேன். அங்கும் இவள் ஞாபகம்தான். பாவம் காலை நொண்டிக்கொண்டு என்ன செய்கிறாளோ? பேசாமல் ஓய்வாகப் படுத்திரு என்றாலும் கேட்கமாட்டாள்...

வழமையாக லஞ்ச் பிரேக்கில்தான் வீட்டிற்கு போன் பண்ணுவேன். இன்று ஏனோ தாங்கமுடியவில்லை. போர்மனுக்கு விரலைக் காட்டிவிட்டு நழுவிப்போய் அவளுக்கு போன் செய்கிறேன்.

மணியடிக்கும் சத்தம்தான் கேட்கிறது. பதில் இல்லை. சிலவேளை நித்திரையாகியிருப்பாள். போனை வைக்கிறேன்

ஏன் போனை எடுக்கயில்லை? வேலையில் கவனம் ஓடவில்லை. என்னவாகியிருக்கும்..? மயக்கம் கியக்கம் போட்டு விழுந்திருப்பாளோ? சும்மா உடம்பு வீக்கானாலே டொப் என்று மயங்கி விழுவாள். அப்படி மயக்கிவிட்டாளோ.. எதற்கும் இன்னொருமுறை போன் பண்ணலாமே...

மணியடிக்கிறது. மணியடிக்கிறது. அடித்துக் கொண்டேய்ய் இருக்கிறது. யாரும் எடுக்கவில்லை. என்ன ஆயிற்று?



திடீரென பொறி தட்டியது. போனுக்குத்தான் ஆன்ஸரிங் மெஷின் ஒன்று வாங்கிப் பொருத்தியிருக்கிறேனே.. ஐந்து முறை தொடர்ந்து அடித்தால் தானாகவே ஆன்ஸரிங் மெஷினுக்கு போகவேண்டுமே. போகவில்லை. எனவே இவள் அடுத்த லைனில் யாரோடோ பேசிக் கொண்டிருக்கிறாள். யாரோடு???

அவனோடுதான் இவள் பேசிக்கொண்டிருக்கிறாள் என கறுப்பு மனம் உறுதியாக சொல்லிற்று. ஏன் அது வேறுயாராவது ஒரு சினேகிதியாக இருக்கக்கூடாதா என்று வெள்ளை மனம் அப்பாவியாக கேட்டது. இருக்காது என்று பேய்ச் சிரிப்புச் சிரிக்கிறது கறுப்பு மனம்.

என் மனைவி மீது எனக்கிருக்கவேண்டிய நம்பிக்கை அறவே போய்விட்டது.

என் அன்பே! உன் அன்பு இப்போது அவனுக்குத் தேவையாக இருக்கிறதோ.. அதற்கு உன் ஆசியும் கிட்டிவிட்டதோ? அன்பு மழைக்காக ஏங்கும் பாலைவனமாக நானிருக்கிறேனே தெரியவில்லையா? அடபோடா எந்தப் பாலைவனமாவது மழைக்கு ஆசைப்படலாமா? மழையே மழையே மெத்தப் பெய். உன்னால் எங்கோ ஓரிடம் செழிக்கிறது என்றால் அது எனக்கும் சந்தோசமான காரியமே.. மனம் புழுங்குகிறது. பைத்தியம்போல புலம்புகிறேன்.

அவள்மீது கோபம் இன்னும் எனக்கு வராமல் இருப்பது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. நான் இவ்வளவு நல்லவனா? அல்லது எனக்குள்ளே மறைந்து கிடக்கும் ஏதோ ஒரு தாழ்வு மனப்பான்மை என்னை நல்லவன்போல வேஷம் போட வைக்கிறதா?

என் வீடே எனக்கு இப்போது நரகமாக தென்படுகிறது. பெயருக்கு அவளுடன் அன்பாக இருப்பதுபோல நடிக்க ஆரம்பிக்கிறேன் வீட்டில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தை குறைக்கிறேன். விரைவாகவே படுக்கைக்கு போய்விழுகிறேன். தலைவலி மாத்திரைகளை விழுங்கித் தள்ளுகிறேன்.

அவள் என் மாற்றங்களைக் கொஞ்சமேனும் கிரகித்ததாகத் தெரியவில்லை. எல்லாம் வழமைபோலவே நடக்கிறது. சமையல், சாப்பாடு, குசுகுசு சிரிப்பு. நானில்லாத நேரங்களில் எனது வீட்டிற்குள் அவன் வந்து போகிறானோ என்றுகூட இப்போது என் மனதுள் சந்தேகம் அலைமோத ஆரம்பித்துவிட்டது.

"உங்கடை பிரெண்டிட்டை அக்காவுக்கு சிலோனிலை பிள்ளை பிறந்திருக்காம். அதுக்கு உங்களுக்கும், எனக்கும் ட்ரீட் தரவேணுமாம். நாளைக்கு பின்னேரம் ஏழுமணிக்கு ரெஸ்ரோரான்ட் கூட்டிக்கொண்டு போகப்போறாராம். போவமே...?"

"எந்த ரெஸ்ரோரான்ட் எண்டு சொல்லேல்லையோ?"

"சொன்னவர்... ஏதோ பெரிய ரெஸ்ரோரான்ட் ஒண்டாம். நல்ல சாப்பாடாம்..."

ஓஹோ.. காதலர்களே... எல்லாமே நீங்களே தீர்மானித்துவிட்டு எனக்குச் சொல்கிறீர்களா? பெர்ர்ர்ரிய ரெஸ்ரோரன்ட்....

"நான் வரேல்லை... நீர் அவரோடை போகலாம்தானே..."

"ச்சீசீய்க்.. காலை நொண்டி நொண்டிக்கொண்டு நான் அவரோடை போனா சனம் சிரிக்குமல்லே..."

ஓஹோஹோ.. அப்படியெனில் நான் வராவிட்டால் நீ போகத்தான் போகிறேன் என்கிறாய். ஆனாலும் காலை நொண்டிக் கொண்டு போகவேண்டியிருப்பதால்தான் கைத்தடியாக என்னை வரச்சொல்கிறாயோ... அடிப்பாவி... 'நீங்க வரேல்லையெண்டா நானும் போகேல்லை' என்று நீ இதற்கு பதில் சொல்லியிருக்கக் கூடாதா..? மனதுக்குள் குமுறுகிறேன்.

"அது சரி... உம்முடை கால் நோ இன்னும் மாறேல்லை.. இப்ப நொண்டி நடந்தா இன்னும் நோகுமெல்லே.."

"அதெல்லாம் எனக்கு நோகாது. நாங்க போவமோ வேண்டாமோ?"

"போவம்.."

அந்தப் பெர்ர்ர்ரிய ரெஸ்ரோரன்ட் உண்மையிலேயே பெரியதுதான். ஏதோ ஒரு ஹோட்டலின் லோஞ்சிற்குத்தான் எங்களை இவன் சாப்பாட்டிற்கு அழைத்திருக்கிறான். இந்தமாதிரி ஒரு இடத்திற்கு நான் முன்பு ஒருமுறை டிஷ்வாஷிங்கிற்காக வந்திருக்கிறேன்.

மெல்லிய ஒளி.. பெங்குவின் போல உடையணிந்த வெண்கனவான்கள். ஸோப் ஒபேராவில் வருவது போன்ற பெண்மணிகள்.. இவர்களுக்கிடையே நடந்து போகும்போதே எனக்கு கால்கள் பின்னின. இவன் படு காஷுவலாக நடந்துபோய் ரிஸேர்வ் செய்யப்பட்ட ஸீட்டிற்கு அருகே வந்து, அவள் உட்கார கதிரையை இழுத்து வசதி செய்து கொடுக்கிறான். நானும் உட்காருகிறேன்.

இவன் ஹீரோ போல ட்ரஸ் பண்ணியிருக்கிறான். இவள் ஸாரியில் அழகாக இருக்கிறாள். இந்தமாதிரி இடத்திற்குத்தான் வருகிறேன் என்று தெரிந்திருந்தால் நானும் கொஞ்சம் நன்றாகவே, கல்யாணசூட்டையாவது போட்டுக்கொண்டு, வந்திருக்கலாம்.

சற்று நேரத்தில் வெள்ளைக்காரர் ஒருவர் எமக்கு பவ்வியமாக மெனுகார்டை தந்து விட்டு என்ன குடிக்கப் போகிறீர்கள் என்று பிரெஞ்சில் வினாவிவிட்டு பதிலுக்கு கைகட்டி பார்த்து நிற்கிறார்.

"அண்ணை.. இண்டைக்கு பார்ட்டி உங்களுக்குதான். என்ன குடிக்கிறியள்?"

டேய்... எனக்கா நீ பார்ட்டி வைக்கிறாய்? சாதுரியப் பூனை மீன் இருக்க புளியங்காயை தின்று காட்டியதாம்...

ஓடர் பண்ணினான்.

"இது நெப்போலியன் ஓடார்ட் கொன்யாக். சரியான எக்ஸ்பென்ஸிவ்.."

அவளுக்கு இவன் ஒரேஞ்ச் ஜூஸை வார்த்து விட வெள்ளைக்காரர் எமக்கு கொன்யாக்கை வார்த்துச் சென்றார். குடித்தோம். அச்சா. நல்ல சாமான். சிரசிலடித்தது.

மூலையில் மங்கிய வெளிச்சத்தில் கொஞ்சப்பேர் பளபள பித்தளை இசைக்கருவிகளை வைத்து ஏதோ ட்யூனை ஊதி வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"அவை வாசிக்கிறது என்ன தெரியுமே..?" என்று இவன் கேட்கிறான். எனக்கு ஒரு மண்ணும் புரியவில்லை. இவளும் உதட்டைப் பிதுக்குகிறாள்.

"அது பதினேழாம் நூற்றாண்டில் பேமஸாயிருந்த பிரெஞ்சு கம்போஸரின் மெலோடி... உனக்காகவே இரவு விழித்திருக்கிறேன்.. நங்கையே நீ வரமாட்டாயா.. என்பது அந்தப் பாட்டின் வரிகள்.. எப்பவோ படிச்சனான்.." என்று கைவிரல்களால் மேசையில் பியானோ வாசிப்பதுபோல் அபிநயம் செய்து காட்டுகிறான். இவள் ஒரு கையால் தன் மோவாயை தாங்கிக்கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவனும் ஏதேதோ மியூஸிக்கைப் பற்றியே இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறான். ம்... ம்... இந்த மேசைக்கு நான் அனாவசியம் என்றே எனக்குத் தோன்றுகிறது. சரி.. நானும் இசைத்துறையில் ஏதையாவது கேட்டு வைப்போமா என்று நினைத்துவிட்டு கேட்கிறேன். "இப்ப.. இவையின்ரை மியூசிக்கும் எங்கட கர்னாடக சங்கீதத்திற்கும் உள்ள பெரிய வேற்றுமை என்ன?"

அவள் சங்கடத்தோடு என்னை பார்க்கிறாள். அவனது வாயில் ஒரு நமட்டுச் சிரிப்பு தென்படுகிறது. ஓஹோ.. எனது கேள்வியே அசட்டுத்தனமாக இருக்கிறது போலும். யப்பா கொன்யாக்! நீ பேச வைக்கிறாயே... இருவரும் என்னையே பார்க்கிருர்கள். ஆனுல் எதுவும் பேசவில்லை. அதற்குள் வெள்ளைக்காரர் வந்துவிடுகிருர். சலாட் வகையறாக்களை படைக்கிறார். மணக்க மணக்க சூப் முன்றை எடுத்து வழங்குகிறார்.

"அண்ணை சாப்பிடுங்கோவன்.."

நான் சலாட் கோப்பையை பார்க்கிறேன். அட! இந்தமாதிரி எத்தனை சலாட் போட்டிருக்கிறேன். இதுக்கு என்ன விலை இங்கை போடுறாங்கள் எண்டு தெரியேல்லை. பேய் விலை சார்ஜ் பண்ணுவாங்களாக்கும்...

"இஞ்சை... இந்த சலாட் எப்படி போடுறதெண்டு சொல்லட்டே... சோளப் பொத்தியிருக்கல்லே அதை அவிச்சு சோளததை கவனமா உடைச்செடுக்கவேணும்... அதுக்கு ஷவர்கிரீமும் போட்டு, கொஞ்சம் பட்டர் புருட் துண்டுகளையும் வெட்டி போட்டு கரண்டியால் மடிவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலக்கினா போதும். நல்ல டேஸ்ட். படுசிப்பா செய்யலாம்.

இவள் என்னை அனுதாபத்துடன் பார்ப்பதுபோல இருக்கிறது. ஓஹோ.. உளற ஆரம்பித்து விட்டேனோ.. மூடடா வாயை.

பேசாமல் சலாட்டை சாப்பிட்டு முடிக்கிறேன். அவர்கள் இருவரும் எதுவும் பேசவில்லை. எஞ்சியிருந்த கொன்யாக்கையும் குடிக்கிறேன். அவன் கத்தியும், கரண்டியுமாக மெதுவாக சாப்பிடுகிறான். இவள் சாப்பிடாமல் கரண்டியின் முனையால் சலாட்டை தட்டிக் கொண்டிருக்கிறாள். முகம் சுண்டிப்போயிருந்தது. ஹும். பொன்னாங்காணிக்குப் புளிவிட்டு ஆக்கினால் உண்ணுற் பெண்ணும் ஒரு உழக்கு உண்ணும்.

''என்ன பேசாமல் இருக்கிறீர் காலுக்கை நோகுதே.'' அவளைப்பார்த்துக் கேட்கிறேன்.

இல்லை என்பது போல தலையாட்டுகிறாள்.

எனக்கு இவளைப் பார்க்க ஏனோ பாவமாக இருக்கிறது. மெதுவாக மேசையின் கீழால் எனது கையை நீட்டி அவளது நோப்பட்ட காலை தடவுகிறேன். அவள் தீப்பட்டதுபோல வெடுக்கென்று காலை இழுத்துக் கொள்கிறாள். எனக்கு சுருக்கென்று கோபம் வருகிறது. பாரடா.. இதையே அவன் செய்தால் அனுமதித்திருப்பாளோ...

இவள் அவனிடம் சங்கீதத்தைப்பற்றிக் கேட்கிறாள்.. பதிலாக மகாராஜபுரம் சந்தானத்தை என்றோ தான் சந்தித்ததை அவன் விபரித்துக் கொண்டிருக்கிறான். எனக்கு இருப்பு கொள்ளவில்லை. எழுந்து அந்தப் பக்கமாயிருந்த ஐஸ்வாட்டர் ஜக்கை எடுக்க முனைகிறேன்.

அங்கேதான் ஒரு தவறு நிகழ்ந்துவிட்டது.

தூக்கிய ஜக் தவறிப்போய் விழுகிறது. விழுந்தது சூப் கோப்பைமேல் விழ, சூப் கோப்பை படாரென சரிய, சூப் முழுவதும் சொல்லிவைத்தாற்போல் அவன் மேல் பாய்ந்து அவனது உடுப்பையே தெப்பமாக நனைக்க, இலவச இணைப்பாக மேசை முழுதும் ஐஸ் வாட்டர் பாய்ந்து ஓட...

நான் விக்கித்துப்போகிறேன். அசடுவழிய உட்கார்கிறேன். எல்லோரும் இங்கேயே பார்ப்பதுபோல உணர்கிறேன்.

வெள்ளைக்காரர் ஓடி வருகிறார். ''ஓவ்..'' என்றுவிட்டு பவ்வியமாக மேசையை துடைக்கிறார். அவனது உடுப்பை அனுதாபத்துடன் பார்த்து பிரெஞ்சில் ஏதோ சொல்கிறார். இழவு விசாரிக்கிருயோடா மகனே... அவனும் பதில் சொல்கிறான். நான் கூனிக் குறுகிப்போகிறேன். இவள் தலையை குனிந்து கொண்டிருக்கிறள். அவன் எழுந்து கொள்கிறான். ட்ரௌஸர் முழுவதும் காய்கறித் துண்டுகள். சட்டையில் சிவப்பாக தீட்டு. மேசையிலிருந்த நாப்கினால் உடுப்பை துடைத்துவிட்டு, வாஷ்ரூம் பக்கமாக நடக்கிறான்.

நான் என்னுள்ளாகவே இடிந்து விழுந்து கொண்டிருக்கிறேன். முகம் வியர்த்துப் போய்விடுகிறது. அவளைப் பார்ப்பதை தவிர்த்து வேறெங்கோ பார்க்கிறேன். என் கண் உள்ளே கசிகிறது. அவமானமாயிருந்தது. பேசமுடியவில்லை. கஷ்டப்பட்டு சொல்கிறேன்... ''ஸொரி...''

''உங்களுக்கு இண்டைக்கு என்ன நடந்தது? ஏன் ஒரு மாதிரி நடக்கிறியள்.. நல்லாக குடிச்சிட்டியளே..? ச். . உங்களாலை அவர்ட மரியாதை போச்சுது.''

இவளைக் கலியாணம் பண்ணின நாளிலிருந்து இதுவரை இந்தமாதிரி குரலில் இவள் பேசியதை கேட்டதில்லை. அடிய்க்.. அவனது மரியாதை போயிட்டுதாம்...

என் உள்ளங்காலிருந்து உச்சிவரை ஏதோ ஏறிக் கொண்டு போனது. நான் அழுத்தமான குரலில், தாழ்ந்த தொனியில் பல்லை கடித்தபடி வெடிக்கிறேன்...

''என்ன.. அவற்ரை மரியாதை போச்சோ.. ஏன் என்ரை மரியாதை போய்க்கொண்டிருக்கிறது உமக்குத் தெரியேல்லையே...''

''நீங்க இப்பிடி இங்கை விசர்க்கூத்தாடினா உங்கட மரியாதையும் போகும்தானே...''

''நான் அதைச் சொல்லேல்லை. என்ரை மனுசிக்கு ஒரு லவ்வர் இருக்கிறான் எண்டது உலகத்துக்கு தெரியேக்கை என்ரை மரியாதை ஏறிக்கொண்டு போகுமண்டோ நினைக்கிறீர்?''

அவள் சுரீரென்று நிமிர்ந்து என்னை பார்க்கிறாள். நான் அடக்கி வைத்தவையெல்லாம் வெடித்துச் சிதற ஆரம்பிக்கின்றன.

''என்ன நினைச்சுக்கொண்டிருக்கிறீர்..? நீரும் அவனும் ஒருத்தரை ஒருத்தர் லவ் பண்ணுறது எனக்குத் தெரியாது எண்டு நினைக்கிறீரோ? கட்டின புருஷன் நானிருக்க டெலிபோனில் அவரோடை கிசுகிசுக்கிறீர்.. அந்நேரமும் அவற்றை கதைதான்.. அவருக்கு பிடிச்ச சாப்பாடு. அவருக்கு பிடிச்சு பாட்டு.. எதைச் செய்தாலும் அவனுக்குத்தான் முதலிடம். என்னை ஒரு பேயன் மாதிரியில்லே நடக்கிறீர். உமக்கு உழைச்சு உழைச்சுப்போட மட்டும்தான் நான். உம்மட சந்தோசத்திற்கு அவனோ...?''

அவள் புன்சிரிப்புடன் என்னைப்பார்த்துக் கொண்டிருக்கிறாள். '' சொல்லுங்கோ...''

''உம்முடைய புருசனா நான் இருந்தென்ன பிரயோசனம..? அவனுக்குத்தானே எப்போதும் நீர் முதல்



உரிமை குடுக்கிறீர்.. உமக்கு நான் ஒரு பார்ட்டைம் ஜொப் மாதிரித்தான்... அவன்தான் உமக்கு வேணுமெண்டா சொல்லும். நான் உம்மை விட்டு விலகிக்கொள்ளுறன். அவனோடை நீர் சேர்ந்தே வாழுறதெண்டாலும் எனக்கு பிரச்சினையில்லை. துரோகம் செய்யிறவையோடை சீவிக்கிறதைவிட தனிய இருந்திட்டுப் போறன்...''

அவள் அதே மந்தஹாசச் சிரிப்புடனே இருந்தாள். ''சொல்லி முடிஞ்சுதோ அல்லது இன்னும் இருக்கோ?''

''உமக்கு பகிடியா இருக்காக்கும்.. சீரியசாவே சொல்லுறன். உமக்கு தேவையெண்டா நாளைக்கே டைவேர்ஸ் எடுக்கவும் நான் ரெடி. அதால ஒண்டும்வானம் இடிஞ்சு தலையில் விழாது.''

அவள் மீண்டும் சிரிக்கிறாள். நான் சீறுகிறேன். ''ஏன். .. சிரிக்கிறீர்?''

''ஏன் நான டிவோஸ் எடுக்கவேணும...? நீங்களா ஒண்டை நினைச்சுக்கொண்டு புலம்பிறதுக்கு நான் ஏன் சிரிக்கக் கூடாது...?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிரியும்.. சிரியும்... நாளைக்கு உலகஞ்சிரிக்கேக்கை தெரியும்.. தெரியும்...''

அவள் மீண்டும் சிரிக்கிறாள். ''இங்கை பாருங்கோ! நீங்க எனக்கு புருஷனாக மட்டும் தெரிகிறது இல்லை. என்னைப் பொறுத்தவரையில நிறைய விஷயங்களில் உங்களை ஒரு குழந்தைபோலவும் பார்கிறனான். நீங்களா உங்களுக்கு ஒரு வட்டம் போட்டு அதுக்குள்ளேயே சுத்தி வாறியள். அதாலதான் இதெல்லாம் உங்களுக்கு பிழையாத் தெரியுது.. பாருங்கோ.. உங்கட நண்பரோட நான் கதைக்கிறதில பழகிறதில என்ன பெரிய பிழையை கண்டிட்டியள்.?'' தீர்க்கமாக என் கண்களையே பார்க்கிறாள்.

''பிழை.. பிழை ஒண்டுமில்லை.. ஆனா நீங்க கதைக்கிற விதமும் நடக்கிற விதமும் சரியா படேல்லை..'' நான் தடுமாறுகிறேன்.

''ஆருக்கு சரியாப்படேல்லை? உங்களுக்குத்தான் அது சரியாப்படேல்லை. காரணம் உங்களுக்குள்ளை இருக்கிற கொம்ப்ளெக்ஸ்.. உங்கட நண்பனுக்கு நிறைய விசயங்கள் தெரிஞ்சிருக்கு. உங்களுக்கு அதுகள் தெரியேல்லை எண்ட கொம்ப்ளெக்ஸ். உங்கட நண்பனுக்கு ரசிக்கத்தக்க விதமா பேசத் தெரிஞ்சிருக்கு, உங்களுக்கு அது தெரியேல்லை எண்ட கொம்ப்ளெக்ஸ். உங்கட நண்பர் மொட்ஆக ட்ரஸ் பண்ணுறார் நீங்க பண்ணுறதில்லை எண்ட கொம்ப்ளெக்ஸ். இதுகள்தான் உங்களை என்ரை கரக்டரிலேயே சந்தேகப்பட வைக்குது. ஒண்டு கேக்கிறன். உங்கட மனைவி நான் உங்கட நண்பரான அவரோட தவறா நடக்கிறன் எண்டு எப்படி தெரிஞ்சு கொண்டியள்?''

நான் விழிக்கிறேன்.

''எல்லாம் உங்கட ஊகங்கள்தான். உங்கட கேவலமான ஊகங்களுக்கு என்னை பலி போடாதையுங்கோ. உங்கட நண்பரோட நான் நடத்தை கெட வேணுமெண்டா உங்களுக்கு தெரிய வராமலே வடிவா என்னாலை செய்ய முடியும். அதை மறந்திடாதையுங்கோ...''

''உம்மட நடத்தையில நான் சந்தேகப்படேல்லை. ஆனா நீர் அவனை காதலிக்கிறீர் எண்டுதான் எனக்குக் கவலை. அதை தடுக்கத்தான் இப்படி குளறுறன்..''

''ஏன்? ஒரு பேச்சுக்கு கேக்கிறன்.. அவரை நான் காதலிச்சா நீங்க அதை எப்படி தடுக்க முடியும்? அவரை நான் காதலிச்சா நீங்க தடுத்தாலும் காதல் நிக்காது. ஆனா இப்ப நான் அவரை காதலிக்கேல்லை எண்டதுதான் உண்மை. ஒருவேளை அப்படியே நீங்க நினைக்கிறமாதிரி அவரை நான் காதலிக்க நினைச்சாலும் உங்களையும் அவரையும் என்னால ஒரே நேரத்தில காதலிக்க முடியும். இரண்டு குழந்தைகளிடம் அன்பு செலுத்திறதைப்போல.''

நான் குழம்புகிறேன்.

அவள் குரலை இறக்கி ஒரு தாயைப்போல பேசுகிறாள். ''இங்கை பாருங்கோ.. நீங்க அதிகம் படிக்காதவர்தான். ஆனா உங்களிட்டை பண்பு இருக்கு. உங்களிட்டை அடக்கம், அமைதி எல்லாம் இருக்கு. அதுதான் நான் காதலிக்கிற புருஷன். இவ்வளவு நாளும் ஒன்றுமே பேசாமல் இருந்துவிட்டு இப்ப திடீரென என்னை நடத்தை கெட்டவள் எண்டு நீங்க குற்றஞ்சாட்டினதுகூட எனக்கு பெரிசா தெரியேல்ல. காரணம் நீங்க என்னில வச்சிருக்கிற உண்மையான அன்பாலதான் கொதிக்கிறீங்க! அதுவும் எனக்கு தெரியுது...''

''சரி.. அப்படி நினைக்கிறீரெண்டு வைச்சுக்கொள்ளுவம். ஆனா அவனுக்கு அன்பை காட்டுற மாதிரி என்னோடை ஒருக்காலும் நீர் அன்பா இருக்கிறது இல்லை....''

''பைத்தியம் மாதிரி பேசாதையுங்கோ. என்ரை அப்பா அம்மாவிலயும்கூடத்தான் நான் நிறைய அன்பு வைச்சிருக்கிறன். ஆனா நீங்க கேக்கிற மாதிரி அவை உன்ரை அன்பை எனக்கு காட்டு காட்டு எண்டு கேக்கிறதில்லையே..? அதுமாதிரித்தான் இதுவும். உங்களுக்கு ஒண்டு சொல்லுறன். உங்கட நண்பரோடை நான் நல்லா பழகிறன்தான். அதுக்காக அவரையும் உங்களையும் ஒப்பிடாதையுங்கோ. அவர் இன்டரஸ்டிங்கான மனிதர். அதுக்காக அவர் ஏதோ பெரிய மாமனிதர் என்று நினைச்சு நான் அவரோட பழகேல்லை. அவற்றை கெட்டிக்காரத்தனங்களை ரசிக்கிறமாதிரி அவருடைய வீக்னஸ்களையும்கூட நான் கவனிச்சுக்கொண்டுதான் வாறன். அவருக்கு கடவுள் பல திறமைகளை கொடுத்தமாதிரி பல பலவீனங்களையும் கொடுத்து இருக்கிறார். தன்னைப்பற்றி பெருமையாக அவர் நினைக்கிறார். தான் ஒரு ஹீரோ என்பது போல அவர் நினைக்கிறார். தன்னிடம் நிட்சயமாக பெண்கள் மயங்குவார்கள் என அவர் நினைக்கிறார். வெஸ்டேர்ன் லைப் தனக்குத்தான் பழக்கம் எண்டது மாதிரி அவர் நினைக்கிறார். இந்த மாதிரியான அவற்ரை சகல பலவீனங்களும் எனக்கு தெரியுது. என்னைக்கேட்டா உங்களை அவரோட பலவீனங்களோடை மட்டும்தான் ஒப்பிட்டுப்பார்ப்பன். அவற்றை பலங்களோடை இல்லை. ஏனெண்டா நீங்க என்ரை ஹஸ்பன்ட்''

அட.. இவளுக்கு இவ்வளவு தெரிந்திருக்கிறதா? நான் விக்கித்துப்போகிறேன்.

''அவர் ஒரு போலி. நீங்க உண்மை. தன்னிடம் இருப்பதை காட்டத்தெரியாதவர் நீங்க. தன்னிடம் இல்லாததைக்கூட இருப்பதாக சொல்லுறவர் அவர். உதாரணத்திற்கு அப்போதை அந்த பான்ட் வாசிச்ச மியூஸிக் பதினேழாம் நூற்றாண்டுமில்லை, காதல் கவிதையுமில்லை. அதெல்லாம் உங்கட நண்பரோடை கற்பனை. உண்மையிலே அவை வாசிச்சது ரிம்ஸி கோர்ஸகோவ் எண்டவற்ரை கம்போஸிங். கோர்ஸகோவ் வாழ்ந்தது பத்தொன்பதாம் நூற்றூண்டுக் கடைசியில. இது எனக்குத் தெரியும். ஆனா இவர் புழுகேக்கை அதை நான் சொல்லேல்லை. உங்கட நண்பர் நல்லவர்தான். ஆனா பேசுறது செய்யிறது இதில பாதிக்குமேலை போலித்தனம். இப்ப பாருங்கோ.. அவற்ரை சட்டையில சூப் ஊத்திண்டு போச்சு.. வந்தவுடனே எங்களைப்பற்றி யோசிக்காம தன்ரை சட்டேயில கறைபட்டதால ஏற்பட்ட அவமானத்தை மறைக்க ஏதாவது புழுகுவார்.. சிலவேளை அந்தச் சட்டை மாதிரி தன்னட்டை இன்னும் இரண்டு மூண்டு ஷேர்ட் இருக்கு எண்டு பெருமையடிச்சாலும் பெருமையடிப்பார்.''

தூரத்தே அவன் வருவது தெரியவே அவள் குரலை தாழ்த்திக் கொள்கிறாள். அவன் வந்து இருக்கையில் அமர்கிறான். நாங்கள் பேசாமலிருப்பதால் அவன் எங்களையே பார்க்கிறான்.. பிறகு சொல்கிறான்...

''கவலைப்படாதையுங்கோ.. போனா போகட்டும். இதே மாதிரி என்னட்ட நாலு ஷேர்ட் இருக்கு...''

★★★★★★★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாக் கவர்ச்சியும் தமிழகத் தமிழனும்

அயோக்கியர்களின் இறுதிப் புகலிடம் அரசியல் என்றால் அவர்களின் முதல் புகலிடம் தமிழக அரசியல் தான். தனக்கு என எதுவுமே சேர்த்துக் கொள்ளாமல் அரசியல் வாழ்வு வாழ்ந்த காமராஜருக்குப் பின்னால் தமிழ், தமிழ் என்று கோஷம் எழுப்பிய அண்ணாதுரையின் தலைமையில் கீழ் வந்த திராவிட இயக்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழனைக் கொள்ளையடித்தது தான் இதுவரை கண்ட நன்மை. கட்சிக்கு நிதி வழங்கும் பணக்காரர்களின் பணத்தைக் கூட தான் வாங்கிக் கொள்ளாமல், 'அதை அங்கே கொடு, இதை இங்கே அனுப்பு' என்று நேர்மையுடன் வாழ்ந்த காமராஜரும் அமைச்சர் கக்கனும் வரலாற்றில் மறக்கப்பட்டு விட காரணமான தமிழுணர்வு தமிழனை வாழ வைத்ததா என்றால் இல்லை. மாறாக, தீக்குளிப்பு போன்ற அறியாமைகள் தமிழனை இன்னும் பாமரனாக வைக்கவே உதவியுள்ளன.

திராவிட இனத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்த பெரியாரின் பின்னால் அடுக்குமொழித் தமிழால் அண்ணா தமிழரை வசியப்படுத்தியது போலவே தற்போது அடுக்குமொழியை நம்பி டி.ராஜேந்தரும் அரசியலில் குதித்துள்ளார். திராவிடத் தமிழ் என்று தோள் துண்டு நிலத்தில் உரச, தடித்த குரலில் 'தலைவர் அவர்கள்' என்பதை 'தலவர் அவர்காள்' என்று தமிழைக் கொன்று பேசுவது மட்டும் தான் திராவிடப் பாரம்பரியம் என்ற நினைப்பில் இப்போதும் மேடையில் தமிழ் கொஞ்சுகிறது. அது கூர்ப்படைந்து தற்போது மேடையிலே காது கொடுத்துக் கேட்க முடியாதளவுக்கு அசிங்கமான வார்த்தைகளை பெண் அரசியல்வாதிகளே பேசும் அளவுக்கு வந்து சேர்ந்திருப்பது தான் தமிழன் பண்பாடாகியிருக்கிறது.

அண்ணாவின் தமிழ் சினிமாக் கவர்ச்சியூடாக தமிழ் தலைமையை அண்ணாவிடம் கையளித்தது. ஒப்பீட்டளவில் தற்போதைய திராவிடச் சிங்கங்கள் போலன்றி அண்ணா ஊழல் நிறைந்தவரல்ல. தமிழ் மீதான அவரது பற்று உண்மையானதாக இருக்கலாம். ஆனால் அண்ணாவழி வந்த அண்ணல்கள் தமிழையும் தமிழ்நாட்டையும் படுத்தியபாடு?

அண்ணாவின் பின்னால் கருணாநிதி தமிழையும் சினிமாவையும் பயன்படுத்தி கவர்ச்சி சேர்த்துக் கொண்டதுடன் ஊழலுக்கு அடியெடுத்துக் கொடுத்தார். கட்சிக் கணக்கைக் கேட்ட எம்.ஜி.ஆரின் செல்வாக்கை உணர்ந்து கொள்ளாத கருணாநிதி எம்.ஜி.ஆரை வெளியேற்ற... 'மக்கள் நலம் மக்கள் நலம் என்றே சொல்லி, தம் மக்கள் நலம் ஒன்றே தான் மனதில் கொண்ட' கருணாநிதியை சுலபமாக எம்.ஜி.ஆர் தோற்கடிக்க.. மலையாளத்து எம்.ஜி.ஆரை முதல்வராக்கி தமிழகம் வந்தாரை வாழ வைத்து தமிழ் பாரம்பரியத்தை திராவிடப் பாரம்பரியமாக விரிவுபடுத்தியது.

எம்.ஜி.ஆரின் அரசியலுக்கு சினிமாக் கவர்ச்சி தவிர்ந்த வேறெந்த தகைமையும் காரணமாகி விடவில்லை. பாமரத் தமிழர்களின் சினிமாக் கவர்ச்சி 'நடிகர் நாடாளலாம்' என்று அரசுக் கட்டிலில் நிறுத்தியதற்கு இன்னொரு காரணம்.. ஊழலில்லா ஆட்சியை எம்.ஜி.ஆர் வழங்கக்கூடும் என்ற நம்பிக்கை. கருணாநிதியின் ஊழல்கள் அம்பலமாக, வாரிசுகள் இல்லாத எம்.ஜி.ஆர் எதற்காக ஊழல் செய்யப் போகிறார் என்ற நம்பிக்கை பலமடைய.. ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆரும் விரைவில் திராவிடப் பாரம்பரியத்தில் ஊழல்மயப்பட்டார். எம்.ஜி.ஆர் செய்த ஊழல்களை விட, எம்.ஜி.ஆர் பெயரை வைத்து ஊழல் செய்தவர்கள் தான் அதிகம்.

தமிழ் தமிழ் என்று தமிழறிவை வைத்து அரசியல் தகைமை கண்ட கருணாநிதியை விட, பேட்டை ரௌடிகள் உட்பட சகல அயோக்கியர்களுக்கும் தன் மந்திரிசபையில் இடம் கொடுத்து படித்தவர் பாமரர் என்ற வேறுபாடின்றி சகலருக்கும் சம அந்தஸ்து தந்தார். அண்ணாவுக்கு பின்னால் கருணாநிதி, கருணாநிதிக்கு ஒரு அன்பழகன் என்று முன்னவர்களுக்கு எல்லாம் பெயரளவிலாவது வாரிசுகள் இருந்தனர். ஆனால் எம்.ஜி.ஆருக்கோ இரண்டாவது நிலையில் எவருமே இல்லை. எப்போதுமே இரண்டாவதாக வாழ்ந்து வரும் நெடுஞ்செழியன் கூட வாரிசு நிலையில் இருக்கவில்லை. எம்.ஜி.ஆர் அவ்வாறான எந்த நிலையையும் விரும்பியதுமில்லை.

தனக்குப் பின் வாரிசாக்க வேண்டும் என்றோ என்னவோ, எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவை கொள்கை பரப்புச் செயலாளராக்கி இல்லாத தன் அண்ணாயிசக் கொள்கையை பட்டிதொட்டியெங்கும் பரப்பினார். சினிமாக் கவர்ச்சி தவிர வேறென்ன இது? வாரிசு தோன்றியதும் வாரிசின் காலில் விழுந்து எம்.ஜி.ஆரின் ஆசி பெற முயன்றவர்களால் காலில் விழும் பாரம்பரியம் தமிழக அரசியலில் அத்தியாவசிய சடங்காகியது. எம்.ஜி.ஆரின் மரணத்தின் பின் வியாபாரத்தை தொடர விரும்பியவர்கள் ஜானகியை அரசியலில் நுழைத்ததும் மறுபகுதியினர் ஜெயின் பின்னால் அணி திரண்டதும் தமிழக அரசியலில் முடி சூடிய மன்னராட்சி நடைபெற்றதை உறுதி செய்தது. பட்டத்துராணியும் வசந்தசேனையும் மோதிக் கொள்ள.. கருணாநிதி மீண்டும் அரசு கட்டிலில் ஏறினார்.

கருணாநிதி பாவம்.. தேர்தலில் நிற்கும் போது எனக்கு தந்த தண்டனை போதாதா என்றெல்லாம் மன்றாடிக் கேட்டு.. தோற்கும் போதெல்லாம் தமிழனை தன்மானம் இல்லாதவன் என்று திட்டி.. கடைசியில் கட்டிலில் ஏறி விட்டார். நீண்ட காலத்தின் பின் தன் குற்றத்தை உணராமல் மீண்டும் ஊழல் வழி செல்ல... ராஜீவ் ஆசீருடன் ஆட்சி கலைபட.. ராஜீவ் மரணத்துடன் அனுதாப அலையில் ஜெ கட்டில் ஏறினார்... அதாவது அரசு கட்டில்.

தன் மானத் தமிழன் மீண்டும் கவர்ச்சி வசப்பட்டான். ஜெ யிற்கு அரசியல் தெரியாது, அவரை பயன்படுத்தலாம் என்று நினைத்தவர்களும் ஜானகியுடன் சேர்ந்து அவரைத் திட்டியவர்களும் நாளடைவில் ஜெயின் பாதமே தஞ்சம் என்று காலில் விழுந்தார்கள். தன்னோடு இருப்பவர்கள் அனைவருமே தன்னை ஒரு காலத்தில் எதிர்த்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை உணர்ந்த ஜெயிற்கு அவர்களை இருக்க வேண்டிய இடத்தில் வைப்பது கஷ்டமாக இருக்கவில்லை.

அப்போது தான் ஆரம்பித்தது உயிர்த்தோழியின் தலையீடு. அதன் பின் நடந்த ஊழல் கருணாநிதி பரவாயில்லை என்ற எண்ணத்தை தோற்றுவிக்கும் அளவுக்கு சென்றது. இந்த அத்துமீறிய ஊழல் தான் இன்று பலவேறு சக்திகளை ஒருங்கிணைத்து, சகலரும் ஜெயலலிதாவை வீழ்த்த வேண்டும் என்று முழுமூச்சுடன் பாடுபட வைத்திருக்கிறது.

எம்.ஜி.ஆர் காலத்திலிருந்தே ஆங்காரத்துடன் தன் எண்ணப்படி நடந்த ஜெயலலிதாவைச் சூழ இருந்த சுயநலக் கும்பலும் ஜெயலலிதாவை நிதானத்தில் வைத்திருக்கவில்லை. விளைவு தான் இன்றைய நிலை.. மக்கள் ஆதரவு தன் பக்கம் என்ற நினைப்பில் ராஜீவின் அனுதாப அலையால் தான் வெல்லவில்லை என்று இறுமாப்புடன் கூறிய ஜெ இன்று ராஜீவ் கொள்கைப்படி நடப்போம் எங்கிறார்.

முதலில் இந்திரா காங்கிரஸை பகைத்துக் கொண்டார். அதன் பின்னால் ரஜனி காந்தைப் பகைத்தது தான் ஜெயின் இமாலயத் தவறு.

தான் ஆட்சிக்கு வந்ததற்கு காரணமான சினிமாக் கவர்ச்சி தான் தனக்கு ஆப்பு வைக்கும் என்பதை ஜெ உணர்ந்து கொள்ளாதது விசித்திரமானது தான். எம்.ஜி. ஆர் காலத்தில் இளமையுடன் இருந்த ஜெயலலிதாவின் கவர்ச்சி இன்று சில வயோதிபர்களை வாக்களிக்கத் தூண்டக்கூடும். ஆனால் இன்றைய தலைமுறை தற்போதைய முன்னணி நட்சத்திரங்களில் கவர்ச்சி கொள்வது தான் சாத்தியமானது. வெடிகுண்டுக் கலாசாரம் பற்றி மேடையில் வைத்து ரஜனி கூறியதை பொறுக்க முடியாமல் கோபம் கொண்டதில்.. வந்த விளைவு இது.

சினிமாக் கவர்ச்சி ரஜனிக்கு இருந்தாலும் சமூக உணர்வு கொஞ்சமாவது இருந்திருக்கிறது. நல்லது செய்ய வேண்டும் என்ற ரஜனியின் உத்வேகத்தை தங்களுக்கு சாதகமாக்கவே பலரும் முயன்றனர். ரஜனியின் வருகையில் அதிகம் பாதிப்புற்றது வை.கோவே. ரஜனி அரசியலுக்கு வந்தால் தன் பின்னால் உள்ள இளைஞர் கூட்டம் ரஜனி பின்னால் சென்று விடுமே என்ற கவலை அவருக்கு.

மறுபுறத்தில் வீரப்பன் தன் படங்களில் நடித்துக் கொண்டதை வைத்து ரஜனியை அரசியலுக்கு இழுப்பதன் மூலம் தன் காரியத்தை சாதித்துக் கொள்ள முயன்றார். ரஜனி அரசியலுக்கு வருவாரா என்ற சர்ச்சை பெரிதாக.. தனிக் கட்சி ஆரம்பிப்பதை விட தேசியக் கட்சியுடன் சேர்வது நன்றென்று ரஜனி கருதுவதற்கு அவருக்கு ஆலோசனை கொடுத்த சோ காரணமாகியிருக்கலாம். திராவிடக் கட்சிகள் தமிழ்நாட்டைப் படுத்திய பாட்டை சோ கண்டிப்பது தெரிந்த விடயமே. ஆனால் நீண்ட நாட்கள் அரசியலில் வாழ்ந்த நரசிம்மராவுக்கு ரஜனியின் கவர்ச்சி சாதாரணமானதாகவே தோன்றியது. ஜெயுடன் கூட்டுச் சேர வேண்டும் என்ற ராவின் எண்ணத்தை ரஜனியால் மாற்ற முடியவில்லை. அ.தி.மு.கவுடன் கூட்டு இல்லை என பகிரங்கமாக அறிவிக்க ராவ் தயங்கியதால் ரஜனியின் முடிவு மாறியது.

இந்த நிலையில் தமிழக காங்கிரஸ் பற்றிக் கூறியாக வேண்டும். காமராஜருக்கு பின்னால் தமிழகத்தில் காங்கிரஸ் தலையெடுக்க முடியவில்லை. காரணம் உள்கட்சிச் சண்டைகளும் சரியான தலைமை இல்லாததும். தேர்தலில் திராவிடக் கட்சிகள் பிரிந்து மோதுவதால் காங்கிரஸ் தனியே போட்டியிட்டால் வெல்லக் கூடும் என்று தனியாக காங்கிரஸ் போட்டியிட்டது. இந்த மூப்பனாரின் திட்டம் தோல்வியடைந்ததால் பிரித்தாள முயன்ற ராஜீவ் வாழப்பாடியை தலைவராக்கி காங்கிரஸை மேலும் வலுவிழக்கச் செய்தார். ஒருபுறத்தில் ஜெயின் காலில் விழுந்த வாழப்பாடியும் மானத்துடன் வாழ்வோம் என்று தி.மு.கவுடன் கூட்டு வைக்க எண்ணிய மூப்பனாரும் காங்கிரஸை கேலிக்கிடமாக்கினர். இருந்தாலும் மூப்பனார் ஊழல் குற்றங்களுக்கு ஆளாகாதவர். செல்வந்தராக இருந்த போதும் அரசியலை சொத்துச் சேர்ப்பதற்காக பயன்படுத்தவில்லை. எளிமையான போக்கும் பதவிக்கு ஆசை கொள்ளாத தன்மையும் அவருக்கு பலமானவை. இருந்தாலும் அரசியலுக்கு தேவையான கவர்ச்சியும் ஆளுமையும் அவரிடம் இல்லை.

எல்லோரும் தன்னை வீழ்த்தப் புறப்பட்ட நிலையில் எந்த கட்டையைப் பிடித்தாலும் கரையேறுவோம் என்ற நினைப்பில் இந்திரா காங்கிரஸ் உடன் ஜெ கூட்டு வைத்தார். பெருந்தொகைப் பணம் கைமாறியதாக குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால் மூப்பனாரை கட்சியை உடைத்துக் கொண்டு முக்கிய புள்ளிகளுடன் வெளியேறியது ஜெயிற்கு பலத்த அடி. பணத்தையும் இழந்து தோல்வி அடையும் நிலைக்கே அவர் வந்திருக்கிறார். இறுதி நேரத்தில் கட்சி அமைத்ததால் வேறு வழியின்றி தி.மு.கவுடன் கூட்டு அமைக்க வேண்டிய நிலையில் மூப்பனார் இருந்தார். ரஜனியின் ஆதரவு மூப்பனாருக்கே அதிகமாய் இருந்ததால் இப்போது ஜெ எதிர்ப்பு அணி மிகவும் பலம் பெற்று விளங்குகிறது.

வை.கோ, ராமதாஸ் போன்றோர் ஒரு புறத்தில் தி.மு.க வோட்டுக்களை பிரிக்க.. மறுபுறம் காங்கிரஸ் கட்சிகளின் பிளவு காங்கிரஸ் வோட்டுக்களை பிளக்க.. தான் வெற்றி பெறலாம் என்பது தான் ஜெயிற்கு தற்போது இருக்கும் நம்பிக்கை. இறுதியில் தன்னால் அவமானப்படுத்தப்பட்ட எம்.ஜி..ஆரின் விசுவாசிகளை மீண்டும் கட்சிக்குள் இழுக்க முயன்ற போது அகப்பட்டவர்கள் தான் திருநாவுக்கரசுவும் ராமராஜனும். இவர்களுக்கு எந்த வாக்கு வங்கிகளும் இல்லை.

இந்த தேர்தலில் மிகவும் பாதிக்கப்படப் போகிறவர்கள் வை.கோ போன்றவர்கள் தான். தங்களின் பலத்தை அதிகமாக மதிப்பிட்டு வாய் வீச்சு வீசியவர்கள் உண்மையை நிலையை உணர்ந்து கொள்ள இந்த தேர்தல் உதவும்.

ஆனால் கருணாநிதி பதவிக்கு வந்தாலும் ஊழல் ஒழியுமா என்றால் சந்தேகம் தான். ஆனால் மூப்பனார் காங்கிரசுடன் கூட்டு அரசு அமைத்தால் தான் ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலை வந்தால் தமிழகத்திற்கு ஒருவகையில் நல்லது தான். ஊழல் செய்ய நினைக்கும் கருணாநிதிக்கு கடிவாளம் போட மூப்பனார் போன்றவர்கள் தான் அவசியம்.

இருந்தாலும் ராஜேந்தர், ரஜனி, ராமராஜன் போன்றோர் இன்று வகிக்கும் முக்கியத்துவத்தைப் பார்த்தால், தமிழனையும் தமிழகத்தையும் தற்போதைக்கு சினிமாக் கவர்ச்சி விட்டு விடாது என்பதும் மூப்பனார் போன்ற நேர்மையான தலைவர்கள் இல்லாமல் மீண்டும் கருணாநிதி போன்றோரின் தலைமையை தமிழன் ஏற்க நேரிடுகிறது என்பதும் கசப்பான உண்மைகள்.

**-சினிமாயன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறு(சு)வை




# 'அகிலம்' சுத்தும் வாலிவன்

அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

அவ்வப்போது வெளிவரும் பத்திரிகையான தாயகத்தில் எழுத வேண்டும் என்று பலவேறு விடயங்களை எழுத முயற்சிப்பதற்குள் காலம் போய் விட, புதிய விடயங்கள் வந்து சேர்ந்து விடுகின்றன. தாயகம் இப்போது ஏனோ தானோ என்று நினைத்த நேரம் வருகிறது. ஒரு தாயகம் வாசகரின் துணைவியார் வாசகப்படி (அன்னுர் புலி ஆதரவாளர்) 'சேடம் இழுத்த கிழவன் மாதிரி இப்பவும் விட்டுக் கொண்டு இருக்கிருங்கள். முந்தி உவங்கள் செய்த வேலைக்கு உவங்களுக்கு வேணும்

சென்ற தாயகம் இதழை பார்த்தவர்களுக்கு தாயகம் அவ்வப்போது வந்தாலும் அதன் காரம் குறையாதது என்பது புரிந்திருக்கும். சென்ற இதழுக்கு ஏகப்பட்ட வரவேற்பு.. எல்லா இதழ்களுமே விற்றுத் தீர்ந்து விட்டன. 'டேய் கதை விடாதை.. அடிக்கிறது கொஞ்சப் பேப்பர். அதுக்குள்ள ஏதோ ஆயிரக்கணக்கில அடிச்சு விற்றுத்தீர்ந்த மாதிரிக் கதை'

'மவனே, மனேவரா, பொறுத்துக்கொள்ளு கண்ணு(ம்பா), எப்போதாவது நாங்கள் நாலாயிரம் பிரதிகள், ஆருயிரம் பிரதிகள் என்று கதை விட்டிருக்கிருேமா.. அடித்த அனைத்துப் பிரதிகளும் விற்றுத் தீர்ந்து விட்டன. அவ்வளவு தானா. எத்தனை பிரதிகள் என்பது வேறு பிரச்சனை'

★ ★ ★

தாயகம்காரர் தீர்க்கதரிசிகள் தான். வடமராட்சி மக்களை வெளியேற்ற முயற்சிக்கும் போது தான் புலிகள் கஷ்டப்படப் போகிருர்கள் என்று ஆசிரிய தலையங்கத்தில் எழுதியது. அப்புறம் பார்த்தால்.. புலிகள் அவர்களை வெளியேற்ற எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. வல்வெட்டித்துறையில் எதிர்ப்பு ஊர்வலம்.. கடைசியில் இலவச வள்ளச் சேவை புலிகளால் ரத்து என்று செய்தி வந்திருக்கிறது.

இப்போது வடமராட்சித் தாக்குதல்.. மக்கள் அசைவதாகத் தெரியவில்லை. மக்கள் இப்போது வலிகாமத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கிருர்கள்.

'ஊரான ஊரில இவன் தொல்லை தாங்க முடியலேயடா.. அடுத்த தாயகம் இதழ் எப்ப வரும் என்று சொல்லத் தெரியேலை, அதுக்குள்ள பெரிய தீர்க்கதரிசிகள் என்று கதை'

★ ★ ★

ஏன் தாயகம் வருவதில்லை என்ற கேள்விக்கு சரியான பதில் இன்னமும் மேலிடத்தில் இருந்து கிடைக்கவில்லை. ஒன்று மட்டும் தெரிந்தது..

கல்வியா? செல்வமா? வீரமா?

அதாவது சரஸ்வதி கடாட்சம் இருக்கும் இடத்தில் லட்சுமியின் கடைக்கண் பார்வை இருப்பதில்லை. லட்சுமியின் கண்வீச்சுக்கு அகப்பட்டால், சரஸ்வதி கோபித்துக் கொண்டு விடுகிருள். துர்க்கை இருக்கும் இடத்திலும் சரஸ்வதி இருப்பதில்லை. அதாவது வீரம் இருக்கும் இடத்தில் கல்வி (விவேகம்) இருப்பதில்லை என்று நான் விளக்கம் சொல்ல உங்களுக்கு கோபமோ, சிரிப்போ வந்தால் கியூறியஸை எங்கோ மாட்டி விடுகிறீர்கள் என்று பொருள்.

ஆக மொத்தத்தில் லட்சுமியின் அரவணைப்பில் கொஞ்ச நாள் பொழுது போவதால் தற்போதைக்கு சரஸ்வதியைக் கவனிப்பதில்லை என்று உத்தேசம். இதனுல் தாயகம் வெளிவரவில்லை.

இதனுல் தற்போது கியூறியஸ் கொஞ்சக் காலமாக பணமுதலீடுகள் பற்றி விசாரணை என்று ஒரு பேச்சுக்கு சொன்னுரும்.. ஏதோ தமிழ்ப்பூச் சங்கம் அமைத்து அச்சகம் தொடங்கப் போவதாக பொய் சொல்லி ஒன்ராறியோ அரசிடம் மானியம் வாங்கிய பணத்தை முதலீடு செய்யப் போகிருன் என்று அதிகமாக யோசிக்க புறப்பட்டீர்களானுல் நீங்கள் பொதிகை இதழை வாசித்திருக்கிறீர்கள் என்று அர்த்தம். (போதாக்குறைக்கு சென்ற இதழில் கியூறியஸ்க்கு மணிவிழா என்று வேறு!)

வருடத் தொடக்கத்தில் இளைப்பாறுதலுக்காக சேமிக்கும் பணத்திற்கு வரிவிலக்கு என்பதால் அது குறித்த விசாரணையில் கியூறியஸ் சமீப காலமாக ஈடுபட்டிருந்தான். அதற்கான பணத்தை முதலீடு செய்வதற்கான வழிவகைகளை விசாரித்துப் பார்த்ததில் mutual funds எனப்படும் 'பங்குச் சந்தையில் முதலீடு செய்யும் நிறுவனத்தில்' பங்குதாரராக சேருவது பற்றி அறிந்து கொள்ள முடிந்தது. சமீபத்திய ஆண்டுகளில் இந்த நிதி நிறுவனங்களின் முதலீட்டில தங்கத்திலும் தங்கச் சுரங்கங்களிலும் முதலீடு செய்தவர்கள் மட்டும் எழுபது

'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறுர்கள்.
எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறுர்கள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடங்கு வரை லாபம் பெற்றிருக்கிறார்கள். 1.90 க்கு பங்குகளை விற்ற சுரங்கம் ஒன்று எங்கோ இந்தோனேஷியாவில் தங்கத்தை கண்டுபிடித்ததும் அதன் பெறுமதி 136 டொலராக உயர்ந்திருக்கிறது.

இதைத் தவிர மற்றும்படி வழமையில் வருடாந்தம் 23 வீத லாபம் என்பது பெரும் சாதனை என்று கணிக்கப்படுகிறது. இந்தியா, மெக்சிக்கோ போன்ற நாடுகளில் முதலீடுகள் செய்தவர்கள் மெக்சிக்கோ நாணய பெறுமதி வீழ்ச்சி. இந்திய பொருளாதார கொள்கைகளால் நட்டம் அடைந்து சூடு போட்டுக் கொண்டார்கள்.

கியூரியஸ்க்கு ஆச்சரியம் என்னவென்றால் அல்ட்டாமிரா போன்ற நிறுவனங்கள் 23 வீதம் லாபம் பெற்றதை இந்த பத்திரிகைகள் எல்லாம் ஓகோ, ஆகா என்று புகழ்ந்து பெரும் சாதனை என்கின்றன. இவர்களுக்கு எங்கள் உள்ளூர் வட்டி விகிதம் தெரியாது. ஐந்து வீத வட்டியில் ஆயிரம் ரூபாய்க்கு மாதம் ஐம்பது ரூபா.. வருடம் அறுநூறு ரூபா. இருபது மாதங்களில் இரண்டு மடங்காகிறது பணம். அதாவது வருடம் அறுபது வீதம் வட்டி லாபம்.

சீட்டுக் கட்டி கடைசிச் சீட்டு எடுப்பவரின் லாபம் அதை விட அதிகமாயும் இருக்கலாம். இந்த பெரும் சாதனைகளையெல்லாம் கணடுக்காமல், ஏதோ இந்த பெரும் நிறுவனங்களை மட்டும் சாதனையாளர்களாகக் காட்டுவது அநீதி என்றே கியூரியஸ் கருதுகிறான்.

எனவே, அடிக்கடி சேர்ஜியோ மார்ச்சியின் அலுவலகத்தின் முன்னால் குழந்தை குட்டிகளுடன் குளிரில் நின்று 'விடுதலை வீரனை விடுதலை செய்' என்று கூக்குரல் போடுவதை விட (அவர் இப்போது குடிவரவு அமைச்சர் அல்ல என்பதையும் மறந்து) வருடாந்தம் சீட்டுக் கட்டும் தொகை, வட்டிக்கு கொடுக்கும் பணம் போன்றவற்றுக்கும் இளைப்பாற்றுக்காலச் சேமிப்பு வரிக்கழிவு தர வேண்டும், வட்டிக்கு எடுத்த பணத்திற்கு கட்டிய வட்டிக்கு வருமான வரியில் விலக்குத் தர வேண்டும் என்று ஊர்வலம் வைத்தால், புலிகளுக்கு வந்த 25 ஆயிரம் பேரை விட கனடா முழுவதும் இருக்கும் ஒரு லட்சம் பேரும் ஒரே கொடியின் கீழ் திரண்டு ஊர்வலத்திற்கு வந்து தமிழன் பெருமையை நிலை நாட்டுவார்கள். அதிலே 'எங்கள் தலைவர் தேசியத் தலைவர்' 'சிறை சென்ற செம்மல் கனடியத் தலைவர்' என்று பதாகைகளைக் கட்டிக் கொண்டால்..
ஒரே கல்லில் நாலைந்து மாங்காய்.. அல்லது ஒரே கண்ணி வெடியில் நாலைந்து ஆமி..

அரசாங்கம் அந்த சலுகையைத் தந்ததும் அடுத்த கட்டமாக, உள்ளூர் வியாபார முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக 'தொழிற்சங்கங்கள் ஆதரவில் நடத்தப்படும் பங்குச் சந்தை நிறுவனங்களுக்கு' (டுயடிழரச ளிடிளேடிசநன எைேநளவஅநவே கரனேள) மத்திய அரசும் மாநில அரசும் வழங்கும் இருபது வீத மேலதிக வரிக்கழிவைத் தரும்படி கோரும்படி கனடிய தமிழ்ச்சங்கங்களின் சம்மேளனத்திடம் கோரிக்கை விடுத்தால் அவர்கள் அதற்கான முயற்சியிலும் ஈடுபடுவார்கள்.
ஏனென்றால் அவர்கள் தான் இப்போது வங்கி திறக்க முயற்சிக்கிறார்களே!

(தற்போது இந்த வரிக்கழிவுத் திட்டத்திற்கான உச்சவரம்பு ஐயாயிரத்திலிருந்து 3500 ஆக குறைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான வரிஊக்குவிப்பு இருபது வீதத்திலிருந்து பதினைந்து வீதமாக்கப்பட்டிருக்கிறது)

ஆக மொத்தத்தில் நீங்கள் முதலீடு செய்யும் ஆயிரம் டொலர்களுக்கு 17 வீதம் மத்திய அரசு கழிவு. அதன் பாதிக்கு மேல் மாநில அரசு கழிவு, அதை விட தொழிற்சங்க சலுகையால் இன்னொரு நாற்பது வீதம் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும். ஆயிரம் ரூபாய் வட்டிக்கு கொடுத்தால் 650 டொலர் அரசாங்கம் வரிப்பணத்தில் திரும்பவும் தரும். உங்களிடம் கடன் வாங்கியவர் வருடம் 600 டொலர் தருவார். இதை விட உங்கள் ஆயிரம் ரூபாயும் திரும்பிக் கிடைக்கும்.

ஆக ஆயிரம் ரூபா முதலீட்டுக்கு வட்டி மட்டும் 1250 டொலர்கள்.

★ ★ ★

இவ்வாறாக எந்தக் கடைக்காரருக்கும் வட்டிக்கு கொடுத்து கடைசியில் அவர் வட்டி கட்ட முடியாமல் கடையையோ, வீட்டையோ, காரையோ உங்கள் தலையில் பொறித்துவிட்டு மாறினால் அதனால் வரும் விளைவுகளுக்கு கியூரியஸ் ஜவாப்தாரியல்ல என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறேன்.

★ ★ ★

தமிழீழச் சங்கம் வங்கி திறக்க முயற்சிக்கிறது.. சிறுபான்மை இனங்கள் கிறடிட் யூனியன் திறப்பதற்காக மூன்றரை லட்சம் டாலர்களை மாநில அரசு வழங்குவதுண்டு. இதை வாங்கிக் கொண்டு 'மண் மீட்பு நிதிக்கு' (அதன் அர்த்தம் ஊருக்கு அனுப்புவதல்ல.. இங்கேவீடுவாங்குதல்!) மாற்றிக் கொண்டு கொஞ்ச நாளில் கடன் காரர்கள் கடனைத் திருப்பித் தரவில்லை என்று கூறிக் கொண்டு வங்குரோத்து அடித்து விடுவது தான் இவர்களின் நோக்கம். அப்புறம் என்ன? அங்கே புலிகள் பலமிழக்க.. இங்கே இவர்கள் சேர்த்துக் கொண்ட காசுடன் ஆளுக்காள் மாற.. தொண்டர்கள் இங்கே காரர்களில் புலிக் கொடியைக் கட்டிக் கொண்டு பத்திரிகைகளை கடைகளிலிருந்து பறித்து எறிய வேண்டியது தான்

★ ★ ★

மஞ்சரி தற்போது நின்றுபோய் விட்டது. 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகிய மாதிரி' நின்றுபோகாமல், (தாயகத்தை ஒரு கடி கடித்துக் கொண்டு) சொல்லிக் கொண்டே நின்று போயிருக்கிறது. போதாக்குறைக்கு சூரியனும் அஸ்தமித்துப் போயிருக்கிறது.. (இல்லை, உதயமாகியிருக்கிறது).. சூரியன், செங்கதிர், உதயம்.... எல்லாமே 'ரிவிரச' வேலை தான். அதாவது சூரியக்கதிர்.

★ ★ ★

ஆனால் தகவல் மட்டும் தினசரி, தினசரி என்று பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. 'அகிலம் சுத்தும் வாலிவன்.. (வால் இவன்)'க்கு இதெல்லாம் பெரிய வேலையா..? அங்கே அருளம்பலத்தை சுத்தி, சுதந்திரக் கட்சியைச் சுத்தி, புலியைச் சுத்தி, சங்கத்தை சுத்தி, கத்தோலிக்க அலுவலகத்தை சுத்தி.. ஒன்ராறியோ அரசைச் சுத்தியவருக்கு தமிழரைச் சுத்துவது பெரிய விடயமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் அகதிகளுக்கு அனுப்புகிறேன், இங்கே விழா வைத்தேன் என்று எல்லாம் அரசிடம் சொல்லி, மணி விழா வைத்து money யை சுத்தி கடைசியில் எரிந்த கட்டடத்தில் என் கணக்குப் புத்தகங்கள் என்று எல்லாரையும் சுத்தியவர்..

சென்ற தடவை 'சுத்தும் உலக வாலிபனில்' விடுபட்ட போன அண்ணர் பற்றிய காட்சி கடைசி நேரத்தில் விடுபட்டப் போனது.. வாலிபன் தேடகத்தை எரித்து அதனுள் மஞ்சரியுடன் நடைபெறும் சண்டைக் காட்சி முடிந்ததும் ஒரு கோமாளி வந்து 'ஆகா.. இனியேன் எனக்கு கவலை.. கணக்கு முடிந்தது.. எரிந்த இடத்தில் கணக்குப் புத்தகம்' என்று பாடிக் கொண்டு வரும் காட்சி நேரம் போதாமையால் தணிக்கை செய்யப்பட்டிருந்தது.

பத்திரிகை தொடங்கியதும் தான் இருக்கிறது பிரச்சனை. இதுவரையும் தகவல் தகவல் என்று எதிலும் பட்டும் படாமலும் சுத்தியவர் செய்தி போடத் தொடங்கும் போது தான் பிரச்சனையே வரும்.. பொன்னுலையில் அடிவிழுந்தால் துன்னுலை என்று போடப் போக அடிவிழுமோ? அல்லது ஐந்து இராணுவம் இறந்தால் 50 என்று எழுது. ஐந்து புலிகள் இறந்தால் .05 என்று எழுது என்று வருமோ? அல்லது புலிகள் பின்வாங்குகிறார்கள் என்று போடப் போக நின்று அடிபடுகிறார்கள் என்று போடு என்று வருமோ?

என்னவோ அதுவோ தகவல் பிழைத்துக் கொள்ளும். வாழ்வே சுத்து என்று வந்த பின்னர்.. இதெல்லாம் பெரிய விசயமா? முழுக்க நனைந்தவளுக்கு முக்காடு ஏதுக்கடி? குதம்பாய்!

★ ★ ★

சென்ற முறை பொதிகையில் கியூறியஸை யாரோ கடித்திருப்பதாக சொல்ல... தேடிப் பார்த்தால்.. அவலை நினைத்து உரலை இடித்த மாதிரி.. கியூறியஸைக் கடிப்பதாக நினைத்து மதிப்புக்குரிய முன்னாள் கல்லூரி அதிபரை கிண்டலும் கேலியுமாக எழுதப்பட்டிருக்கிறது. மணிவிழாக் கொண்டாடிய அவர் மீது கோபம் எனபதறகாகவோ, அவரது மணிவிழாவை ஒழுங்கு செய்த தகவல்காரர் பணத்தை சுத்தியதற்காகவோ.. இப்படியா கேவலப்படுத்துவது? அப்படி அவர்களை கடிக்க வேண்டும் என்றால்.. எதற்காக கியூறியஸை இழுக்க வேண்டும் என்பது புரியவில்லை.

இருந்தாலும் தாயகம் நின்று விட்டதாக நினைத்து கடிக்க நினைத்தவர்களுக்கு.... இப்போதாவது துணிச்சல் வந்ததே பெரிய விடயம்.

★ ★ ★

பத்திரிகைகள் நின்று போனதால் தற்போது நம் நாடு இலவசமாய் இருந்து விற்பனைக்கு வந்திருக்கிறது. சூரியன் இலவசமாய் வந்த போது 'பத்திரிகா தர்மத்தை மீறுவதாக' குற்றம் சாட்டி விட்டு இப்போது சுரணை வந்திருக்கிறது போலும். இருந்தாலும் கொஞ்ச நாளில் சொல்ல முடியாத காரணங்களுக்காக நின்று போனாலும் ஆச்சரியமில்லை.

★ ★ ★

தமிழ்கூறு நல்லுலகம் இன்னொரு பத்திரிகைகளின் தாக்குதலுக்கு தயாராகிக் கொள்வது நல்லது. அதாகப்பட்டது பத்திரிகைக் காகிதத்தின் விலை குறைய ஆரம்பித்திருக்கிறது. பத்திரிகைகளில் முதலீடு செய்வதை விட, பத்திரிகைக் காகிதம் செய்யும் கம்பனிகளில் முதலீடு செய்வது லாபமானது. இதுவரையும் நட்டத்தில் ஓடிக் கொண்டிருந்த காகித தயாரிப்பு நிறுவனங்கள் மனம் போன போக்கில் காகித விலையை இரண்டு மடங்காக்கின. பத்திரிகை நிறுவனங்கள் மடிந்து போயின.. விலையைக் கூட்டின.

இதனால் காகித விற்பனை சரியத் தொடங்கியது. உற்பத்தி அதிகரித்து வழங்கல் அதிகரித்து கேள்வி குறை விலை குறைந்தது.. (எல்லாம் அட்வான்ஸ் லெவல் முடித்த கையோடு ஐ.சி.எம்.ஏ படிக்கும் ஆசையில் யாழ்ப்பாணம் வாடிவீட்டுக்கு பின்னால் வாமதேவன் மாஸ்டரிடம் பொருளியல் படித்த பாதிப்புத் தான்) தற்போது கையிருப்பில் உள்ள காகிதத்தை விற்பதற்காக உற்பத்தியைக் குறைத்து விலையைக் குறைத்திருக்கிறார்கள். எனவே மீண்டும் தமிழ் மக்களைப் பயமுறுத்துவதற்காக பத்திரிகைகள் உதயமாகலாம். ஜாக்கிரதை!

★ ★ ★

கொஞ்ச நாளைக்கு முன்னர் காகித நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தால் லாபம் உண்டு என்று ஆலோசனை கூறினார்கள். அப்புறம் காகித சந்தை சரிந்து பங்குகளின் விலைகள் கீழே இறங்கியதும் இப்போதும் சொல்கிறார்கள்.. காகித நிறுவனங்களில் முதலீடு செய்யுங்கள் என்று. ஏனென்றால் பங்குகளின் விலை குறைவாக இருக்கிறது. அது தான் புரிய மாட்டேங்குது.. எதுக்கும் கொஞ்ச நாளில் பங்கு சந்தையில் தலைமுழுகுவதாக உத்தேசம்.. அப்புறமாய் அதன் நெளிவு சுழிவுகளைச் சொல்கிறேனே..

★ ★ ★

சமீபத்தில் ஒரு காட்டூன் பார்த்தேன்.. உங்களுக்கு சொல்லாவிட்டால் தூக்கமே வராதே.. கிறே ஹுண்ட் நிறுவனம் பஸ்சேவைகளை நடத்துவதைக் கண்டிருப்பீர்கள். அதன் சின்னம் பாய்ந்து செல்லும் நாய். அந்த நிறுவனம் புதிதாக விமான சேவை ஆரம்பித்திருக்கிறது. அதற்கான தொலைக்காட்சி விளம்பரத்தை பார்த்திருக்கக் கூடும். விமானம் ஒன்று நிறுத்தி அதன் சக்கரங்கள் மட்டும் பெரிதாக திரை முழுவதும் தெரியும். சிறிது நேரத்தின் பின் ஒரு நாய் வந்து சிறுநீர் கழிப்பதற்காக காலைத் தூக்கும். அது தான் விளம்பரம். இந்த விமான நிறுவனத்தின் சேவைகளை கனடிய போக்குவரத்து அமைச்சு தடை செய்திருந்தது. அதற்கான காட்டூன்.. விமானச் சக்கரம்... அருகில் நாய் காலைத் தூக்குகிறது.. அதற்கு அருகில் நாய்க்கும் சக்கரத்துக்குமாக சேர்த்து ஒருவர் காலைப் பக்கவாட்டில் தூக்குகிறார்.. தூக்குபவர் போக்குவரத்து அமைச்சு.

★ ★ ★

தமிழக அரசியல் வழமை போல கேலிக்கூத்தாகி விட்டது. தமிழர்கள் என்ன தான் பெருமை பேசிக் கொண்டாலும்.. தமிழர்களுக்கு அவ்வப்போது மற்ற திராவிடர்களை.. வந்தாரை வாழ வைப்பதில் பெருமைதான். மலையாளத்து எம்.ஜி.ஆர், கன்னடத்துப் பெரியார், பச்சைத் தமிழச்சி ஜெ வரிசையில் இப்போது ரஜனிகாந்த் வேண்டிக்கிடக்கிறது. தன் மானத் தமிழனின் பெருமை ஜெ காலில் விழுவதால் பெருமையடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வாரங்களுக்கு முன் திட்டிக் கொண்டவர்கள் தோளோடு தோள் சேர்கிறார்கள். எல்லாம் பதவிக்கும் அதிகாரத்துக்குமாக... பாவம் அப்பாவித் தமிழன்! அவன் தலை இன்னொரு தடவை மொட்டை.. இம்முறை தமிழனுக்கு மொட்டை போடுவதில் சோவுக்கும் பங்குண்டு. இதனால் தமிழர்கள் சோவுக்கு உடன் பிறவாச் சகோதரர்கள் ஆகும் பாக்கியம் பெறுகிறார்கள்.

பாவம் வை.கோ! புலிகளுடனான உறவு பெரும் liability ஆகி விட்டது. கருணாநிதியின் முகமூடியைக் கிழிக்கிறேன் பார் என்று புறப்பட்டு கடைசியில் இளைஞர் கூட்டம் ரஜனி பின்னால் போனதும் இப்போது முழிக்கிறார்.. ஆனால் ஒன்று நிச்சயம்.. ஒவ்வொரு முறையும் தோல்வியடைந்த பின்னர் கருணாநிதி தமிழனை திட்டுவார்.. மானமில்லாதவன் என்று. இம்முறை ஒரு மாறுதலுக்காக வை.கோ திட்டுவார்.

மூப்பனார் பற்றி அபிப்பிராயங்கள் நல்லவையாகத்தான் இருக்கின்றன. பதவிக்கு ஆசைப்படாதவர், ஊழல் செய்யாதவர், நேர்மையானவர் என்றெல்லாம்.. காமராஜர் வழி வந்தவர் என்பதால் அவ்வாறு இருக்கலாம். மூப்பனார் போன்ற கடிவாளம் இல்லாவிட்டால் கருணாநிதி இன்னொரு தடவை தன் கஜானாவை நிரப்பிக் கொள்ளவும் புலிகளுக்கு மீண்டும் ஜே போடவும் கூடும்.

தமிழன், தமிழ் என்று போடும் காட்டுக் கத்தல் எப்படி தமிழனைக் குட்டிச் சுவராக்குகிறது என்பதற்கு தமிழக அரசியலும் தமிழீழ ஆயுதப் போராட்டமும் நல்ல உதாரணங்கள்!


★ **மனவெளி**

**கலையாற்றுக் குழு**

**வழங்கும்**

**அரங்காடல்**

★ **குறும்பா நிகழ்வு**

**உருவாக்கம்**

**புராந்தகன்**

★ **மறையாத மறுபாதி**

**நெறியாள்கை ஞானம் லம்பேட்**

★ **சாந்திநாதனின் நெறியாள்கையில்**

**இரு துயரங்கள்**

★ **திவ்வியராஜன் இசைக்கும்**

**வானம் தொடுகின்ற..**

**மே 3ம் திகதி வெள்ளிக்கிழமை**

**மாலை 6.30 மணிக்கு**

**1785 பிஞ்ச் அவனியூ மேற்கு**

**யோர்க் வூட்ஸ் நூலக அரங்கில்..**

**அன்பளிப்பு 5 டொலர்கள் மட்டுமே!**



*This newspaper is published by*
*Georgicka communications.*
*A member of*
*Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷேசேவ்



தொடர்புகளுக்கு
*Georgicka communications*
*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*


வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!

# அன்ரனி பிறதர்ஸ்

**உடன் மீன், இறைச்சி, மரக்கறி, பழவகைகள்**


☞ தமிழக, இலங்கை, கனடிய வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் உடனுக்குடன் கிடைக்கும்

☞ முத்திரை, சிகரெட், போட்டோக்கொப்பி, ஃபாக்ஸ் வசதிகள் TTC Tickets, Lottery Tickets

★ மலிவு விலையில் லேசர் இசைத்தட்டுக்கள்
★ தமிழ், ஹிந்தி, மலையாள வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்

# ANTONY BROTHERS

**1472 Queen St West (Queen/Lansdowne)**
Toronto, Ont. M6K 1M4
TEL:(416) 588-0733
TEL/FAX:(416) 516 3903
வாரத்தில் 7 நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை




## ANTONY BROTHERS FASHION HOUSE

1484 QUEEN ST WEST
Tel:(416) 588 0310

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான உடைகள்

சுவாமிப் படங்கள், பரிசுப் பொருட்கள், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்கள்

அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்காபரோ நகரில் தன்னிகரற்ற தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ்

# ரேடிங் கோ லிமிட்

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்), மற்றும் பாண் உடனுக்குடன் கிடைக்கும்

அனைத்துப் பொருட்களும் ஒரே இடத்தில் மலிவு விலையில்

3852 FINCH AVE EAST
(KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

# P.S.T.T

சி.டி. இசைத்தட்டுக்கள்
வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின்
மொத்த விற்பனையாளர்

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

5210 FINCH AVE EAST #23 (FINCH/MIDDLEFIELD) TEL:609-0141

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org